# குர்ஆனின் குரல்

محرم - صفر ١٤٤٥

ஆகஸ்ட் - 2023

₹25/-






999 BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

K.A.S. ZAINULABDIN & Co.
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

மாதம் ஒரு மாமறை வசனம்

# இறைவன் ஒருவனே!

وَإِلَٰهُكُمْ إِلَٰهٌ وَاحِدٌ ۖ لَّا إِلَٰهَ إِلَّا هُوَ الرَّحْمَٰنُ الرَّحِيمُ (163)

மேலும், வணக்கத்திற்குரிய உங்கள் இறைவன் ஒரே இறைவன் தான்; அவனைத் தவிர வேறு தெய்வம் இல்லை. அவன் அளவற்ற அருளாளன், மிகக் கிருபையுடையோன். – அல்குர்ஆன் (2 : 163)

உங்களின் இறைவன் ஒருவனே! அவனே வணக்கத்திற்குத் தகுதியானவன். அவன் கருணையாளன், கிருபையாளன் என அல்லாஹ் நம்மை நோக்கிக் கூறுகிறான்.

இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையே இதுதான்! அவன் ஒருவன். இணை, துணை, நிகரற்றவன். அழிவற்றவன், நிரந்தரமானவன். துவக்கமும், முடிவும் அற்றவன். சகல சக்தன், நாடியதைச் செயல்படுத்துபவன். கொடுப்பவன் – எடுப்பவன் – தடுப்பவன் அவனே! அனைத்தும் அவனது ஏற்பாடே. அதில் எந்தக் குறையும் கிடையாது. அவனில் எவ்வித குறையும் கிடையாது. அவன் கேள்வி கேட்பான்; அவனை யாரும் கேட்க முடியாது. அவனது பார்வையிலிருந்து யாரும் தப்ப முடியாது. அவன் செய்வதனைத்தும் நீதமே! நல்லதே! அவன் கருணையாளன், கிருபையாளன். மதிநுட்பமானவன்.

அல்லாஹ்வின் படைப்புகளான தாது வர்க்கம், தாவர வர்க்கம், ஜீவ வர்க்கம் அனைத்தும் மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்யவே படைக்கப்பட்டன. ஆனால் மனிதன் அல்லாஹ் ஒருவனை வணங்கவே படைக்கப்பட்டுள்ளான்.

ஒரு நாட்டிற்கு ஓர் அரசன். ஒரு பெண்ணிற்கு ஒரு கணவன் ஒரு நிர்வாகத்திற்கு ஒரு தலைவன். இதுவே நியதி. இதற்கு மாற்றம் ஏற்படும் பொழுது பெரும் குழப்பம் உண்டாகி விடும். இராட்டினம் சுற்றி நூல் திரிப்பவளிடம், நீ இறைவன் ஒருவன் என்பதை எப்படி அறிந்தாய்? எனக் கேட்கப்பட்டது. அவள் கூறினாள். இந்த இராட்டினத்தை ஒருவர் சுற்றினால் ஒழுங்காக நூல் திரியும். இருவர் சேர்ந்து சுற்றினால் நூல் அறுந்துவிடும். ஒருவர் ஒரு திசையிலும் மற்றவர் எதிர் திசையிலும் சுற்றினால் இராட்டை சுழலாமல் நின்று விடும். இதை வைத்தே இறைவன் ஒருவனே எனத் தெரிந்து கொண்டேன் என்றாள். எப்பொழுது நம்மைப் படைத்து பரிபாலனம் செய்பவன் ஒருவனே என்றாகிவிட்டதோ, அவனிடமே நம்மையும், நமது தேவைகளையும் ஒப்படைக்க வேண்டும்.

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி

# ஏந்தல் நபி (ஸல்) அவர்களின் எளிமை!

ما عَلِمْتُ النبيَّ صلَّى اللهُ عليه وسلَّم أكَلَ علَى سُكْرُجَةٍ قَطُّ ،
ولَا خُبْزَ له مُرَقَّقٌ قَطُّ، ولَا أكَلَ علَى خِوَانٍ قَطُّ.

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது :

**"நபி (ஸல்) அவர்கள் பெரிய வட்டிலில் (ஸஹனில்) வைத்து (உணவு) உண்டதை ஒருபோதும் நான் அறிந்ததில்லை. அவர்களுக்காக ஒருபோதும் மிருதுவான ரொட்டி தயாரிக்கப்பட்டதில்லை. மேலும், அவர்கள் உணவு மேசையில் (அமர்ந்து) ஒருபோதும் சாப்பிட்டதில்லை."**

மூலை முடுக்குகளிலெல்லாம்
தீன் பணி செய்யும் மூத்த பத்திரிகையே!
நீ கியாமத் நாள் வரை வாழ்க!

செய்யது சகோதரர்கள்
நாகூர்.

மாதம்
ஒரு மாமறை வசனம்

# மூன்றில் ஒன்று நிச்சயம்

الَّذِيْنَ اِذَاۤ اَصَابَتْهُمْ مُّصِيْبَةٌ ۙ قَالُوْۤا اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رٰجِعُوْنَ ۝١٥٦

(பொறுமையாளர்களாகிய!) அவர்கள் எத்தகையோரென்றால், அவர்களுக்கு ஏதேனும் ஒரு துன்பம் ஏற்பட்டால், "இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்" (நிச்சயமாக நாம் அல்லாஹ்விற்காகவே இருக்கிறோம்; நிச்சயமாக அவன் பக்கமே திரும்பிச் செல்பவர்களாகவுமிருக்கிறோம்") என்று கூறுவார்கள். – அல்குர்ஆன் (2 : 156)

நல்லோர்களின் வாழ்வில் திடீரென ஏதும் துக்க நிகழ்வுகள் நிகழ்ந்து விட்டால், உடனே அவர்கள் நாங்கள் அனைவரும் அல்லாஹ்வுக்கே உரித்தானவர்கள். நிச்சயம் நாம் அவனின்பாலே மீளக் கூடியவர்களாக இருக்கிறோம் எனக் கூறுவார்கள் என நல்லோர்களான முஃமின்களை சிலாகித்துக் கூறுகிறான் அல்லாஹ்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஏதும் காணாமல் ஆகி விட்டாலும், ஏதும் கை தவறி விழுந்து உடைந்திட்டாலும், திடீரென விளக்கு அணைந்து விட்டாலும், ஏதும் துக்கச் செய்தி வந்தாலும், திடீரென செருப்பு வார் அறுந்து விட்டாலும் இன்னாலில்லாஹி... கூறிக் கொள்ளுங்கள். அப்படி கூறிக் கொண்டால் காணாமல் போனது கிடைத்திடலாம். அல்லது இழந்தது போல திரும்பக் கிடைக்கலாம். அல்லது அதை விடச் சிறந்தது கிடைக்கலாம். இல்லை மறு உலகில் அதன் பலனை பன்மடங்காக அல்லாஹ் தந்திடலாம் என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

ஹள்ரத் உம்மு ஸலமா (ரளி) அவர்கள் தன் கணவர் அபூஸலமா இறந்து விட்ட பொழுது இன்னாலில்லாஹி கூற யோசித்தார்கள். ஏனென்றால் தன் கணவரை விடவா சிறந்தவர் கிடைக்கப் போகிறார் என்கிற கவலையில். எனினும் நபியவர்கள் கூறியது என்பதற்காக மொழிந்தார்கள். அதன் பலனாக நபியவர்களையே கணவராக ஏற்றுக் கொண்டார்கள்.

மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி

# 77வது சுதந்திர தின வாழ்த்துகள்!

| | |
|---|---|
| ★ பிரிட்டிஷ் தலைவன் சர்ஹென்றி லாரன்ஸை தன் கையால் சுட்டுக் கொன்று அதற்காக சிறைச் சென்றவர் | **பேகம் ஹஜ்ரத் மஹால்** |
| ★ சுதந்திரப் போராட்டத்திற்காக 30 இலட்சம் ரூபாய் கொடுத்து நாடு விடுதலை பெறப் போராடிய பெண்மணி | **அன்னை பீவிமா** |
| ★ வ.உ.சியை கைது செய்த வெள்ளையனிடம் வ.உ.சியை விடுதலை செய் என்று போராடியதால் வெள்ளையனின் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிர் நீத்தவர் | **முஹம்மது யாஸீன்** |
| ★ இந்திய தேசியக் கொடியை வடிவமைத்தவர் | **சுரைய்யா தியாப்ஜி** |
| ★ வெள்ளையனுக்கு எதிராக ஏழு வருடங்கள் தொடர் போர் செய்து வெள்ளையர்களின் சாம்ராஜ்யத்தை திணறடித்தவர் | **மாவீரன் மருதநாயகம்** |
| ★ இந்திய முதல் விடுதலைப் போர் சிப்பாய் கழகம், இந்தப் போரில் 90 சதவிகிதம் பேர் முஸ்லிம்கள். இந்தப் போரை தலைமையேற்று நடத்தியவர் | **அஹமதுல்லாஹ் ஷாஹ்** |
| ★ இந்தியா கேட்டில் பொறிக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்கள் 95,300 பேர் பட்டியலில் | **61,945 பேர் முஸ்லிம்கள்** |

★ இந்திய சுதந்திரத்திற்காக ஆங்கிலேயர்களிடம் தலைமை தாங்கிப் பேசியவர்கள் :

| | |
|---|---|
| இந்திய தேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் | : **அபுல்கலாம் ஆஸாத்** |
| முஸ்லிம் லீக் தலைவர் | : **முஹம்மது அலீ ஜின்னாஹ்** |
| 547 சமஸ்தானத்தின் குழுத் தலைவர் | : **பீஹார் நவாப்** |

எங்கள் வீட்டில் எண்ணெய் பாக்கெட் ஒன்று வாங்கி வந்தோம். அதில் மாற்று சமுதாயத்தவர்கள் வழிபடும் ஒரு சாமியின் படம் இடம் பெற்றிருப்பதை பார்த்தோம். அப்படிப்பட்ட எண்ணெயினால் சமைத்த உணவுகளை உட்கொள்வதில் தவறு ஒன்றுமில்லையா?

**திருப்பூரிலிருந்து**
**எம்.ஜரீனா பேகம்**

தவறு ஒன்றுமில்லை. நம் மார்க்கம் அப்படியெல்லாம் நம்மைச் சிரமப்படுத்தவும், மற்ற சமுதாயத்தவர்களை வெறுப்பேற்றவும் விரும்பவில்லை.

புதன், வியாழன் போன்ற நாட்களில் யாசகம் கேட்டு வருபவர்களுக்கு தர்மம் செய்வது நல்லதில்லை என்று கூறும் சிலர், அப்படி வருபவர்களை கடுமையான வார்த்தைகளைக் கொண்டு திட்டி அனுப்பி விடுகிறார்கள். மார்க்கம் என்ன சொல்கிறது?

**விழுப்புரத்திலிருந்து**
**எம்.எஸ்.எம்.அன்வர்தீன்**

தர்மம் கொடுப்பதற்கு நம் மார்க்கம் அப்படியெல்லாம் நாட்களையும், நேரங்களையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எனவே, எந்தக் கிழமையிலும், எந்த நாளிலும், எந்த நேரத்திலும், யார் வந்து தர்மம் கேட்டாலும் கொடுங்கள் என்றுதான் நம் மார்க்கம் சொல்கிறது.

என் மகனுக்கு முஹம்மது ஜைன் உமர் என்று பெயர் வைக்க நினைக்கிறோம். அதன் பொருள் என்ன?

**மதுரையிலிருந்து**
**சை.மீர் ஷம்சுதீன்**

முஹம்மது ஜைனுத்தீன் என்று வையுங்கள். "மார்க்கத்தை அலங்கரிப்பவர்" என்பது அதன் பொருளாகும். அல்லது அந்த ஜைனுத்தீன் என்பதை ஹள்ரத் உமர் (ரளி) அவர்களின் பெயருடன் இணைத்து வையுங்கள். அதுவும் பரக்கத்துக்குரிய நல்ல பெயராகும். வெறும் ஜைன் என்று மட்டும் வைப்பதில் அர்த்தம் முழுமை பெறாது.

ரமளானில் கொடுக்கக் கூடிய ஜகாத் பணத்தை ரமளானுக்கு முன்பாகவே கொடுத்து விடலாமா?

**ஈரோட்டிலிருந்து**
**எஸ்.அமானுல்லாஹ்**

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

✍ ரமளானுக்கு முன்பாகவே அவசியத்திற்குத் தகுந்தவாறு கொஞ்சம், கொஞ்சமாகவோ அல்லது மொத்தமாகவோ கணக்கு வைத்துக் கொடுத்து விடுவது ஆகுமானதாகும்.

☛ என் கணவர் வேறு மதத்திலிருந்து இஸ்லாத்தை ஏற்றவர். தற்போது அவர் மரணித்துவிட்டார். இப்போது நான் ஓதக்கூடிய சூரா யாஸீன் மற்றுமுள்ள குர்ஆனுடைய சூராக்களை ஓதி, அவருக்காகவும், அவரின் தாயாருக்காகவும் துஆ செய்யலாமா?

✍ அவர் இஸ்லாத்தின் மீது மரணித்த காரணத்தினால் அவருக்காக நம்மால் முடிந்தளவு குர்ஆன் ஓதியும், மற்ற நன்மைகளைச் செய்தும் துஆ செய்யலாம். அவரின் தாயாரும் இஸ்லாத்தை ஏற்ற நிலையில் மரணித்திருந்தால் அவருக்கும் அவ்வாறே துஆ செய்யலாம். இல்லையென்றால், கணவருக்கு மட்டும் துஆ செய்து கொள்ளுங்கள்.

☛ ஒரு பெண் பிரசவ நேரத்தின் போது இறந்து விடுகிறார். அவருக்குப் பிறந்த அந்தக் குழந்தையை நான்கு வருடங்களாக தந்தைதான் வளர்த்து வருகிறார். மாமியார் அந்தக் குழந்தையைக் கேட்டு வழக்கு தொடருகிறார். மார்க்கம் என்ன சொல்கிறது?

**திருப்பூரிலிருந்து பஷீர்**

✍ மார்க்க ரீதியாக தாய் இறந்து விடும்போது, அந்தக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பு இறந்தவரின் தாயாருக்குத்தான் கொடுக்கப்படும். அவரும் இல்லாதபட்சத்தில் தந்தையின் தாயாரிடம் அது ஒப்படைக்கப்படும். பாசத்தின் காரணமாக தந்தை, தன் குழந்தையை வளர்க்க விரும்பினால் குடும்பப் பெரியவர்களை வைத்து பேசி முடிவு செய்து கொள்ளட்டும்.

☛ நிதா தன்வீரா என்று பெயர் வைக்கலாமா? அதன் பொருள் என்ன?

**மதுரையிலிருந்து முன்ஷி**

✍ நிதா என்பதற்கு அழைப்பு என்பது பொருள். தன்வீரா என்பதற்கு ஒளியூட்டுபவள் என்று பொருள். இரண்டு வார்த்தைகளையும் ஒன்று சேர்த்து வைக்கத் தேவையில்லை. வெறும் தன்வீரா என்று மட்டும் வைத்தாலே போதுமானது. நிதா என்பதைச் சேர்ப்பது அவசியமில்லை. பொருத்தமுமில்லை. அல்லது நீங்கள் விரும்பினால் ஹள்ரத் கதீஜா போன்ற ஸஹாபியப் பெண்மணிகள் பெயர்களை சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள்.

பெற்றோர் இறந்து விட்டனர். அவர்களுக்கு ஒன்பது பிள்ளைகள். அனைவருக்கும் திருமணம் முடிந்து, பிள்ளைகளோடு வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கும் வயதுகள் முதுமையை அடைந்து விட்டன. அந்த இறந்துவிட்ட பெற்றோர்களுக்கு தேவையான அடக்கச் செலவுகளை அப்போது தங்களிடமிருந்த பணங்களைக் கொண்டு செலவழித்து சரி செய்து கொண்டனர். அவர்களின் மீது எந்தக் கடன்களும் இருக்கவில்லை. அவர்கள் இறக்கும் முன்பாக எந்த வஸிய்யத்தும் செய்யவில்லை. எனினும், தாங்கள் வாழும் காலத்தில் தங்களின் பிள்ளைகள் அனைவருக்குமே சொத்துகளை கூட்டாகவும், தனித்தனியாகவும் பதிவு செய்து கொடுத்திருக்கின்றனர். இப்போது அந்தப் பெற்றோரின் பெயரில் இருக்கக்கூடிய சில சொத்துகளை குறிப்பிட்ட சில சகோதரர்கள் மட்டும் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார்கள். மற்றவர்களுக்கு பிரித்துக் கொடுக்க மறுக்கிறார்கள். மார்க்கம் என்ன சொல்கிறது?

✍ ஒரு மனிதர் இறந்தவுடன் **அவரின் அடக்கச் செலவுகள், பிறகு அவரின் கடன்கள், பிறகு அவர் செய்த வஸிய்யத்துகள் போக** சொத்துகள் மீதம் இருந்தால் அதை அவர்களின் வாரிசுகளுக்கு நடுவில் குர்ஆன், ஹதீஸில் சொல்லப்பட்டப்படி முறையாகப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். அதில் யாரும் எந்தக் கூடுதல் குறைவும் செய்ய முடியாது. ஒருவரை விட்டு இன்னொருவர் மட்டும் அனுபவித்து மற்றவர்களுக்கு பிரித்துக் கொடுக்க மறுப்பாரானால் அல்லது மற்றவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கை அநியாயமாக எடுத்துக் கொண்டு அவருக்கு மோசடி செய்வாரானால் இப்படிப்பட்டவர்களுக்கு மறுமை நாளின் எச்சரிக்கைகள் மிகக் கடுமையாக இருக்கும். யாருக்கு எந்தச் சொத்தை மோசடி செய்து இவர் அனுபவித்து வந்தாரோ அது ஒரு முழம் இடமாக இருந்தாலும் கியாமத் நாளன்று அவர் அந்த இடத்தைதன்முதுகின்மீது சுமந்து கொண்டு வருவார் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள். இதைவிட ஒரு முஃமினுக்கு பெரிய அளவிலான எச்சரிக்கைகள் தேவையில்லை. அல்லாஹ் பாதுகாப்பானாக.

வீட்டில் கண்திருஷ்டி நீங்கிட, என்ன ஓத வேண்டும்? ஏதாவது ஆயத்துகளை எழுதி மாட்டி வைக்கலாமா?

**ஈரோட்டிலிருந்து**
**ஜே.சர்புதீன்**

✍ லிஈலாஃபீ குரைஷின் என்ற சூராவை 7 - 7 தடவைகள் காலையிலும், மாலையிலும் ஓதி, ஊதிக் கொள்ளுங்கள். கண்திருஷ்டியிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு அது ஒன்றே போதுமானது.

☛ செல்போனில் பதிவிறக்கம் செய்து வைத்திருக்கும் குர்ஆன் ஷரீஃபை ஒளு இல்லாமல் பார்த்து ஓதலாமா?

**பனங்காட்டூரிலிருந்து ஜெ.முஹம்மது யூசுப்**

✍ ஓதலாம். எனினும், பரிசுத்த குர்ஆனை ஒளுவுடன் ஓதுவதற்கான பரக்கத்தே அபரிமிதமானது.

☛ இரவில் தூங்கும்போது கெட்ட கனவு கண்டால் என்ன செய்வது?

**மேட்டுப்பாளையத்திலிருந்து ஆர்.சையது முஜ்ஜம்மில்**

✍ படுப்பதற்கு முன்பாக எந்த நிலையிலும் ஆயத்துல் குர்ஸியை ஓதுவதை வழமையாக்கிக் கொள்ளுங்கள். அது எல்லா விதமான தீங்குகளிலிருந்தும் மனிதனைப் பாதுகாக்கும் அற்புதமான கேடயமாகும். அப்படியே கெட்ட கனவுகள் வந்தால் விழித்தவுடன் அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தான் என்று கூறிவிட்டு, மறுபக்கமாக அவர் திரும்பிப் படுத்துக் கொள்ளட்டும். முடிந்தால் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும்

اَللّٰهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ وَالْجُبْنِ وَالْبُخْلِ رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

**"அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல்ஹம்மி வல்ஹஜனி வல்ஜுப்னி வல்புஃக்லி ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத் தவ் வஃபில் ஆகிரத்தி ஹஸனத்தவ் வகினா அதாபன்னார்"** என்ற துஆவை ஓதி வாருங்கள். அல்லாஹ் அனைத்து விதமான தீங்குகளிலிருந்து பாதுகாக்கவும், அனைத்துவிதமான நன்மைகளை வழங்கவும் அந்த துஆக்கள் இன்ஷா அல்லாஹ் போதுமானதாகும்.

☛ பர்னிச்சர் வியாபாரம் செய்து வருகிறோம். சில வாடிக்கையாளர்கள் பூஜைக்கான கதவை கேட்கிறார்கள். அதில் உருவங்கள் இருக்காது. பெல் அடிக்கும் மணிகள் மட்டும் இருக்கும். அப்படிப்பட்ட கதவுகளை விற்பனை செய்யலாமா?

**சென்னையிலிருந்து முபாரக் அலி**

✍ தவிர்த்துக் கொள்ளுங்கள். ஹலாலான வியாபாரத்தின் மூலம் அல்லாஹ் தங்களுக்கு பரக்கத் செய்வான்.

☛ தினமும் சூரா வாகிஆவை ஓதுவதால் ஏற்படும் பயன்கள் என்ன?

**சேலத்திலிருந்து அன்வர்ஜீ**

✍ உறுதியான நிய்யத்துடனும், அல்லாஹ்வின் மீது பரிபூரண மான நம்பிக்கையுடனும் ஒவ்வொரு நாளும் பேணுதலாக அதை ஓதி வந்தால் இன்ஷா அல்லாஹ் வறுமை நம்மை நெருங்காது.

Since 1977-2017
40
Years
Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

☛ பெண்ணும், ஆணும் தலைப் பிள்ளையாக இருக்கும் நிலையில் அவர்களுக்கு மத்தியில் நிக்காஹ் செய்து கொடுக்கக் கூடாது என்று சிலர் கூறுகிறார்கள். மார்க்கம் அப்படி ஏதாவது சொல்கிறதா?

**சேலத்திலிருந்து**
**முஹம்மது அன்வர்**

✍ மார்க்கம் அப்படி எதையும் சொல்லவில்லை. விஞ்ஞான ரீதியாக அல்லது மருத்துவ ரீதியாக ஏதாவது பிரச்சனைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

☛ ஆரோக்கியமாய் வாழவும், நோய் நொடிகள் நீங்கிடவும் என்ன துஆ ஓத வேண்டும்?

**ஈரோட்டிலிருந்து**
**ஹெச்.சுலைமான்**

✍ اللهم عافني في بدني اللهم عافني في سمعي اللهم عافني في بصري لا إله إلا أنت

"அல்லாஹும்ம ஆஃபினீ ஃபீ பதனீ, அல்லாஹும்ம ஆஃபினீ ஃபீ ஸம்ஈ, அல்லாஹும்ம ஆஃபினீ ஃபீ பஸரீ லாயிலாஹ இல்லா அன்த" என்ற துஆவை மும்மூன்று தடவைகள் காலை ஃபஜ்ருக்கு பின்பும், மாலை மக்ரிபுக்கும் பின்பும் ஓதி, ஊதி உடம்பின் மீது தடவிக் கொள்வ துடன் தண்ணீரில் ஊதிக் குடித்து வருவதை வழமையாக்கிக் கொண்டால் இன்ஷா அல்லாஹ் கொ டூ ர மா ன நோய்களிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாத்து சுகமளிப்பதற்கு அவனே போதுமானவன்.

☛ வேலை நிமித்தமாக சவூதியில் இருக்கக்கூடிய ஒருவர் ஹஜ் செய்ய நாடினால் அங்கிருந்தே ஹஜ்ஜுக்குச் செல்லலாமா? அல்லது தாயகம் வந்து இங்கிருந்து தான் செல்ல வேண்டுமா?

✍ அவருடைய வசதிக்குத் தகுந்தவாறு அங்கிருந்தே ஹஜ்ஜுக்குச் சென்று அதன் கடமையை நிறைவுபடுத்தலாம். ஊருக்கு வர வேண்டும் என்று அவசியமில்லை.

☛ முஸ்லிம் பெண்களின் மேம்பாட்டிற்கான அரசின் உதவித் திட்டத்திற்கு நாமும், நமது ஜகாத்தின் ஒரு பங்கினை வழங்கலாமா?

**சிவகங்கையிலிருந்து**
**கமாலுதீன்**

✍ அப்படி வழங்க வேண்டாம். இஸ்லாமியர்களுக்கு உதவக்கூடிய இஸ்லாமிய பைத்துல்மால்களும், இஸ்லாமிய பொது நிறுவனங்களும் ஏராளமாக உள்ளன. முடிந்தால் அவர்களுக்கு முறையாகக் கொடுத்து நம்முடைய ஜகாத் சரியான இடத்திற்குச் சென்றடைய முயற்சிப்போம். இல்லையானால், நமக்குத் தெரிந்த நம்முடைய உறவினர்களில் தேவையோடு இருக்கக்

கூடிய ஏழைகளுக்குக் கொடுத்து உதவுவோம்.

என் தகப்பனார் தன்னுடைய சொத்தை எனக்கும், என் தம்பிக்குமாக சேர்த்து எழுதி ரிஜிஸ்டர் செய்து விட்டார். நான் மனைவி, மக்களோடு இருக்கிறேன். ஆனால், என் தம்பியும், அவரது மனைவியும் வஃபாத்தாகி விட்டார்கள். அவர்களுக்கு ஒரு மகன் மட்டும் இருக்கிறார். நான் என்ன செய்வது?

**திருச்சியிலிருந்து முக்தார் அஹமத்**

தங்களின் சொத்திலிருந்து சரிபாதியைப் பிரித்து அல்லது அதன் கிரயத்தை தம்பி மகனிடம் தாமதமின்றி ஒப்படைத்துவிட வேண்டும். எனினும், அந்த மகன் வயது குறைந்த சிறு வயதுப் பிள்ளையாக இருந்தால் அவரது சொத்தை முறையாகப் பிரித்து, நம்பிக்கையான ஒருவரிடம் பராமரிக்கும்படி கூறி ஒப்படைக்க வேண்டும் அல்லது தானே அதை தனியாக வைத்து பராமரிக்க வேண்டும்.

வறுமை ஒழிந்து ரிஜ்க்கில் பரக்கத் ஏற்பட என்ன செய்ய வேண்டும்?

பாவங்களை விட்டும் தவிர்ந்து, ஹலாலான வழியில் மட்டுமே சாப்பிடுவதை யோசிக்க வேண்டும். கழுத்தின் மீது கத்தி வந்தாலும் ஹராமை நுகர்ந்து பார்க்கக்கூட நாம் நினைத்துப் பார்க்காமல் வாழ்ந்தால் சிறிதளவு கிடைக்கும் ஹலாலான ரிஜ்க்கில் கூட பெரியளவு பரக்கத்தை வழங்கி அல்லாஹ் உதவி செய்வான்.

பிறந்த குழந்தையைப் பார்க்கும்போது ஏதாவது துஆ ஓத வேண்டுமா?

**பழனியிலிருந்து ஜவ்ஹர்**

பிறந்த குழந்தையை முதன் முதலாகப் பார்க்கக்கூடிய அந்த குழந்தையின் தந்தை அல்லது அந்தக் குடும்பத்தின் மூத்த ஆண்கள் யாராவது இருந்தால் அவர்கள் அந்தக் குழந்தையின் வலது காதில் பாங்கும், இடது காதில் இகாமத்தும் சொல்லி ஊத வேண்டும். அதற்குப் பின்னால் பார்க்கக் கூடிய மற்றவர்கள் அந்தக் குழந்தைக்கும், அந்தக் குழந்தையைப் பெற்றவருக்கும் வாழ்த்துச் சொல்லி, அந்தக் குழந்தையின் நலனுக்காகவும், பரக்கத்துக்காகவும் துஆ செய்ய வேண்டும். இமாம் ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறுவதைப் போல

بَارَكَ اللّٰهُ لَكَ فِي الْمَوْهُوبِ لَكَ، وَشَكَرْتَ الْوَاهِبَ، وَبَلَغَ أَشُدَّهُ، وَرُزِقْتَ بِرَّهُ

"பாரக்கல் லாஹு லக ஃபில் மவ்ஹூபி லக வஷகர்த்தல் வாஹிப, வபலக அஷுத்தஹு, வருஜிக்த்த பிர்ரஹு" என்று துஆ செய்யலாம்.

☛ பெண்கள் ஆடு, மாடு, கோழி போன்றவற்றை அறுக்கலாமா?

**சூரமங்கலத்திலிருந்து அன்வர்பாய்**

✍ நன்கு அறுக்கத் தெரிந்தவர்களாக இருந்தால் தாராளமாக அறுக்கலாம்.

☛ மனிதர்களுக்கு கியாமத் நாள் நெருங்கிவிட்டதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் இருக்கிறார்களே!

**விழுப்புரத்திலிருந்து முஹம்மது**

✍ அல்லாஹ் தன் திருமறையில், "மனிதர்களுக்கு அவர்களுடைய கேள்வி கணக்கு (நாள்) நெருங்கிவிட்டது. அவர்களோ மறதியில் அதனைப் புறக்கணித்தவர்களாக இருக்கின்றனர்" என்று எச்சரிக்கை செய்கிறான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நானும், கியாமத் நாளும் இப்படி நெருங்கி இருக்கிறோம்" என்று தங்களின் இருவிரல்களை நெருக்கமாக்கி காண்பித்துள்ளார்கள். கியாமத் நாளின் அடையாளங்களைப் பற்றி வரக்கூடிய ஹதீஸ்களை கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், அதன் பெரும்பாலான அடையாளங்கள் நம் கண் முன்னே வந்து நடந்து கொண்டிருப்பதை நாம் உணருகிறோம். கியாமத் நாள் வருவதற்கான ஒரு சில பெரிய அடையாளங்கள் மட்டுமே மீதியுள்ள நிலையில் நம்மவர்களின் சிந்தனைகள் அனைத்தும் உலகத்தை நோக்கியே உருண்டு கொண்டிருக்கின்றன.

எப்படியிருந்தாலும் மனிதனின் மரண நேரம் மறைத்து வைக்கப்பட்ட நேரமாகும். எவ்வளவு பெரிய அறிவாற்றல் கொண்ட மனிதனும், விஞ்ஞானத்தின் உச்சநிலையைத் தொட்டவனும் கூட, பல கோடி மைல்கள் விண்வெளிப் பயணம் செய்து ஆராய்ச்சியை மேற்கொண்ட மனிதனும்கூட தன் மரணத்தின் நேரத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடிவதில்லை. சிறு வயதிலும் வாலிப வயதிலும் மரணத்தைத் தழுவுபவர்கள் ஏராளமானவர்களை நாம் கண்டு வருகிறோம். வயது முதிர்ந்து கடுமையான நோய்களுக்கு ஆட்பட்டதற்குப்பின்புதான் மரணம் வரும் என்றெல்லாம் யாரும் அழுத்தமாகக் கூறிவிட முடியாது. நிலைமை இவ்வாறு இருக்க, மரணத்தைப் பற்றியோ மறுமை நாளைப் பற்றியோ எந்தச் சிந்தனையும் இல்லாமல் வாழக்கூடிய நம்மவர்களுக்கு அல்லாஹ்தான் தன் அச்சத்துடன் கூடிய நல்ல மரணத்தை நஸீபாக்க வேண்டும்.

☛ வீட்டில் குழந்தைகளின் போட்டோக்களை மாட்டலாமா?

**ஈரோட்டிலிருந்து பாத்திமா**

# மென்மை

"நிச்சயமாக, மென்மை எதில் குடிகொண்டுள்ளதோ, அது அதனை அழகுபடுத்தி விடுகிறது. ஆனால் எதிலிருந்து அது அப்புறப்படுத்தப்படுகிறதோ அது அதனை அழகற்றதாக்கி விடுகிறது" என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம், அபூதாவூத் 4753)


Successful indeed are the Believers

A.R.M

CEMENT KING

www.armsons.in

சிக்கனமான விலையில் சிமெண்ட், கம்பி வாங்கிட

தமிழகத்தின் Ist 24 மணி நேர சிமெண்ட் கடை

A.R.M Sons

The Cement & Steel Market

வடக்கு ராஜ வீதி
புதுக்கோட்டை.
7373798900
7373798930
04322-221649

ஏர்போர்ட் ரோடு
திருச்சி.
7373798944
7373798942
armsonstrichy@gmail.com

ECR.
கோட்டைப்பட்டிணம்.
7373798911, 7373798912
04371-260260 armsonskpm@gmail.com

நகர் முழுவதும் 10 மூட்டைக்கும், மாவட்டம் முழுவதும் 50 மூட்டைக்கும் சிமெண்ட் இலவச டோர் டெலிவரி

✍ கூடாது. இது போன்ற எதற்கும் மார்க்கம் அனுமதி கொடுக்கவில்லை.

☛ எனக்கு மன உளைச்சல் அதிகமாக உள்ளது. சொல்ல முடியாத மன வேதனைகளால் தவித்துக் கொண்டிருக்கிறேன். அவற்றையெல்லாம் அல்லாஹ்விடம் எப்படி முறையிடுவது?

**பெரம்பலூரிலிருந்து சம்சுதீன்**

✍ உலகத்தில் எவ்வளவு பெரிய சிரமமாக இருந்தாலும், சில சமயங்களில் அந்தச் சிரமங்களை தன் பெற்றோர்களிடமோ, தன் மனைவியிடமோ அல்லது தான் பெற்ற பிள்ளைகளிடமோ கூடச் சொல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடலாம். அப்படியே சொன்னாலும்கூட, சில சமயங்களில் ஆறுதல் கிடைக்கும். சில சமயம் அவர்களின் வார்த்தைகள் நமக்கு இன்னும் அதிகமான வேதனையை ஏற்படுத்திவிடலாம். எனவே, எந்த நிலையிலும் நம் மன வேதனைகளை பயப்படாமல் அவசியம் சிறந்த பதில் கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையோடு சொல்லப்படும் இடம் அல்லாஹ்வின் சன்னிதானம் மட்டுமாகும். அவனிடம் நாம் எவ்வளவு புலம்பினாலும் நமது புலம்பல்களை காது கொடுத்துக் கேட்பதற்கு அவன் தயாராக இருக்கிறான். ஆனால், அந்தப் புலம்பலுக்கான தீர்வு சில சமயங்களில் உடனே கிடைத்துவிடும். சிலசமயங்களில் ஏதாவது நல்லதைக் கருதி, அது தாமதப்படுத்தப்படும். எனவே, அல்லாஹ்வையன்றி, நம் சிரமங்களைக் கேட்பவனும், அதற்கான தீர்வை அளிப்பவனும் அவனை விடச் சிறந்தவன் யாரும் இருக்க முடியாது. கேட்பதற்கென்று நேரம் காலம் எதையும் நிர்ணயிக்கவில்லை. ஒரு மனிதன் சந்தோஷத்தில் கேட்டாலும், துக்கத்தில் கேட்டாலும், தொழுகையின் போது கேட்டாலும், தொழுகைக்கு வெளியில் கேட்டாலும், முஸ்லிம் கேட்டாலும், மற்றவர் கேட்டாலும் அனைத்து பிரார்த்தனைகளுக்கும் அவரவர்களின் நலன்களுக்குத் தகுந்தவாறு பதிலளிக்கக்கூடிய ஆற்றல் அந்த அல்லாஹ்வுக்கு மட்டுமே இருக்கிறது என்ற எண்ணத்தை நமக்குள் நாம் பலப்படுத்த வேண்டும்.

---

**தொழுகையைச் சுருக்க வேண்டியதன் அவசியம்**

"உங்களில் ஒருவர் மக்களுக்கு தொழுவிக்கும்போது தொழுகையை சுருக்கிக் கொள்வாராக! ஏனெனில், மக்களில் நோயாளி, வயது நிறைந்த முதியவர், தேவையுடையவர் இருக்கின்றார்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்

நூல் : அபூதாவூத் ஹதீஸ் எண் : 795

# இறைவனைக் காணலாம்!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

மனிதன் மண்ணால் படைக்கப்பட்டவன் என்று குர்ஆன் கூறுகிறது.

"(ஆண் பெண் இருவரின்) கலப்பான விந்திலிருந்து மனிதனைப் படைத்தோம்"

- அல்குர்ஆன் (29 : 2)

என்றும் அல்லாஹ் கூறுகிறான்.

முரண்பாடு அல்ல! மண்தான் விந்தாக மாறி, அதிலிருந்து சந்ததிகள் உருவாக்கப்படுகிறார்கள்.

"நான் அல்லாஹ்வின் நூர் எனும் ஒளியில் நின்றும் இருக்கிறேன். ஒவ்வொரு பொருளும் என் ஒளியில் நின்றும் இருக்கிறது" என நபி மொழி நவில்கிறது.

அல்லாஹ் படைக்கப் படாதவன், அவன் நூர் அந்த நூரே நபி (ஸல்) அவர்கள். நபிமணியின் நூரே எல்லாப் படைப்பிலுமிருக்கிறது.

இல்முல் யகீன், அய்னுல் யகீன், ஹக்குல் யகீன் என மூன்று படித்தரங்கள்.

இல்முல் யகீன் - ரேடியோவில் செய்தி கேட்பதைப் போல்.

அய்னுல் யகீன் - டி.வி.யில் பார்த்து கேட்டு அறிவதைப்போல்.

ஹக்குல் யகீன் - நேரடியாகவே பார்ப்பதைப் போல்.

இம்மூன்று படித்தரங்களை விளங்கிக் கொள்ள ஞான ஆசிரியர்களிடம் அமர வேண்டும்.

அப்போது மண்ணும், விந்தும் நூர் எனும் ஒளியாகி விளங்கும்.

அர்ஷுல்லாஹ், அல்லாஹ் அர்ஷ் எனும் சிம்மாசனத்தில் இருக்கிறான்.

"முஃமினீன்களின் இதயமே இறைவனின் சிம்மாசனம்" என்பது நபிமொழி.

இறைவன் எங்கும் இருக்கிறான் என்பது ஞானிகளின் வழிகாட்டல்.

முகத்துக்கண்ணை
முறுக்கித்திருத்தியே
அகத்துக்கண்ணை அறுத்துப்
பிளந்தபின்
தொகுத்துப் பார்க்க சுகம்
பெற்றாய் நெஞ்சே

-பீர்முஹம்மதுவலியுல்லாஹ் (ரஹ்).

இன்ஷா அல்லாஹ்
அடுத்த இதழ்
**மீலாது சிறப்பிதழ்!**
உங்களை பிரமிப்பில்
ஆழ்த்த **குர்ஆனின் குரல்**
தயாராகி வருகிறது.
படிக்கத் தவறாதீர்கள்!

றாலும் நல்ல தெளிவும், விளக்கமும் பெற அமல்கள் இருக்க வேண்டும்.

குறிப்பாக தஹஜ்ஜத் தொழுகை மனதை தெளிவு படுத்தும். ஞான வாசலைத் திறந்து விடும்.

கல்லாத கல்வியெல்லாம்
கற்றுமுயர் ஞானக்கலை
இல்லார்க்கு இன்பநிலை ஏதோ
நிராமயமே

- குணங்குடியார் (ரஹ்)

மண்ணறை, ஆலமுல் அர்வாஹ் (ஆலமுல் பர்ஜக்)

மரணித்தபின் நடப்பதெல்லாம் கப்ரில் என்று ஒரு மணிமொழி உண்டு.

ஆலமுல் அர்வாஹில்தான் எல்லாம் நடக்கும். கியாமத் வரை எல்லாமே ஆலமுல் அர்வாஹில் தான் என்ற கருத்தும் உண்டு.

இப்படி மனித ரூஹ்கள் பற்றி பல கருத்துக்கள் இருந்தாலும், ஞான ஆசிரியரிடம் பயின்

இதற்கும் மூலமாக இருப்பது இக்லாஸ் மனத்தூய்மை, பொறாமை அகற்றப்பட வேண்டும். ஆசைகள் அடக்கப்பட வேண்டும். பொய் ஒழிக்கப்பட வேண்டும்.

இறைவனைப்பற்றிய சிந்தனை சிறகடித்துப் பறக்க வேண்டும்.

இறைவனைப் பற்றிய கற்பனைக்கதைகளை பேசக்கூடாது.

மறுமைநாள் எப்போது? எனக் கேட்கப்பட்டபோது, அதை அல்லாஹ்வே அறிவான் என நபி மணி (ஸல்) அவர்கள் கூறியதைப் போல்,

ஈமானைப் பாதிக்கக்கூடிய, ஷிர்க்ஏற்படக்கூடியசிந்தனையோ, செயலோ ஏற்படும்போது,

**இஸ்லாத்தின் சிறந்த காரியம் எது?**

"ஒரு முஸ்லிம் தனக்கு சம்பந்தமில்லாதவைகளை விட்டு விடுவதே இஸ்லாத்தின் சிறந்த காரியமாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.
(நூல்: திர்மிதீ)

# AL-BASHARATH
## HAJ & UMRAH SERVICE

**LALPET OFFICE:**
Opp: Mubarak Masjid, Quaid-e-Millath Salai,
Lalpet - 608 303. Ph: 041 44268114
Mob.: +91 9994254304 / 9443741264.

**CHENNAI OFFICE:**
37/77, Krishnan Koil Street, Mannady,
Chennai - 600 001. Ph: 044 66686742
Mob.: +91 95009 92919 / 99942 54304.

## புனித உம்ரா பயணம்

ஒவ்வொரு மாதமும் பயணம்.. பயணத் தேதிகள் பின் பக்கம்

| | |
|---|---|
| எக்கானமி ₹ 85,000/- ECONOMY | டீலக்ஸ் ₹ 99,000/- DELUXE |
| சூப்பர் டீலக்ஸ் ₹ 1,18,000/- SUPER DELUXE | ஹில்டன் ₹ 1,45,000/- HILTON |



**புனித ஹஜ் பயணம் 2024**
35–40 நாட்கள்
புக்கிங் நடைபெறுகிறது!
முந்துங்கள்!!

### புனித ரமலான் உம்ரா பயணம் - 2024

முழு 30 நாட்கள் ₹ 1,99,000/-

முதல் 15 நாட்கள் ₹ 1,30,000/-

இறுதி 15 நாட்கள் ₹ 1,70,000/-

**புனித ஜியாரா பயணம் 2023-24** ₹ 2,60,000/-

ஹாஜி O.M. முஹம்மது சுஹைபு 99942 54304



## அல்-பஷாரத்

### புனித உம்ரா பயணம் - பயணத் தேதிகள்

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் | 05-08-2023 | சனி | 19-08-2023 | சனி | 15 நாள் |
| ஆகஸ்ட் | 09-08-2023 | புதன் | 23-08-2023 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 07-09-2023 | வியாழன் | 21-09-2023 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 17-09-2023 | ஞாயிறு | 01-10-2023 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 10-10-2023 | செவ்வாய் | 24-10-2023 | செவ்வாய் | 15 நாள் |
| அக்டோபர் | 15-10-2023 | ஞாயிறு | 29-10-2023 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 14-11-2023 | செவ்வாய் | 28-11-2023 | செவ்வாய் | 15 நாள் |
| நவம்பர் | 30-11-2023 | வியாழன் | 16-12-2023 | சனி | 17 நாள் |
| டிசம்பர் | 07-12-2023 | வியாழன் | 21-12-2023 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 26-12-2023 | செவ்வாய் | 09-01-2024 | செவ்வாய் | 15 நாள் |
| ஜனவரி | 14-01-2024 | ஞாயிறு | 28-01-2024 | ஞாயிறு | 15 நாள் |
| ஜனவரி | 28-01-2024 | ஞாயிறு | 11-02-2024 | ஞாயிறு | 15 நாள் |
| பிப்ரவரி | 07-02-2024 | புதன் | 21-02-2024 | புதன் | 15 நாள் |
| பிப்ரவரி | 18-02-2024 | ஞாயிறு | 03-03-2024 | ஞாயிறு | 15 நாள் |
| பிப்ரவரி | 29-02-2024 | வியாழன் | 14-03-2024 | வியாழன் | 15 நாள் |

**புனித ரமலான் உம்ரா பயணம் - 2024**

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் 15 நாள் | 11-03-2024 | திங்கள் | 25-03-2024 | திங்கள் |
| முழு 30 நாள் | 14-03-2024 | வியாழன் | 13-04-2024 | சனி |
| இறுதி 15 நாள் | 28-03-2024 | வியாழன் | 13-04-2024 | சனி |

**ஷவ்வால் மாத உம்ரா பயணம் - 2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 15-04-2024 | திங்கள் | 29-04-2024 | திங்கள் | 15 நாள் |

O.M. முஹம்மது சுஹைபு 9994254304

சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட வேண்டும்.

நான் உன் வீட்டுக்கு வந்து யாசகம் கேட்டேனே தெரியுமா? என அல்லாஹ் கேட்க, "அல்லாஹ்வே! நீயா? நீ வந்து கேட்டிருந்தால் என் சொத்து முழுவதும் தந்திருப்பேனே!" என மனிதன் கூறுவான்.

இன்ன தோற்றத்தில் வந்து கேட்டேனே அது நான்தான் என அல்லாஹ் கூறுவதாக மிஷ்காத் நூலில் நபிமணியின் மொழியைக் காணலாம்.

அப்படியானால் நாளை மறுமையில் அல்லாஹ் ஒளிப் பிழம்பாகக் காட்சித் தருவான் என ஹதீஸ் கூறுகிறதே. எப்படி விளங்கிக் கொள்வது?

இறைவனைப் பற்றிய தெளிவு கிடைக்க ஆழ் கடலுக்குள் மூழ்கி மூழ்கித் தேடினாலும் சிக்கல் தான்.

எனவே இவற்றை தன் சக்தி, ஆற்றலுக்குத் தக்கவாறு அறிந்து, அதன்படி அமல்கள் செய்யும் போது போதுமான தெளிவு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

இந்தத் தெளிவே நம் ஞானப் பசிக்குப் போதும். அதன் பின் அல்லாஹ் தன் தஜல்லீயை வெளிப்படுத்தும் போது கிடைக்கும் ஆனந்தம் அதற்கு எல்லையே இல்லை.

## ஸூஃபி நெறியின் விலை என்ன?

மஹான் ஹள்ரத் இப்ராஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்கள் ஒரு சமயம் இரண்டு துறவிகள் தங்களுக்குள் விவாதம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு அவர்களுக்கு அறிவுரை சொன்னார்கள்.

"உங்கள் துறவு நெறி வாழ்வு பயனற்றுப் போகிறது. இதனை நீங்கள் எளிதாகப் பெற்றுள்ளீர்கள் போல் தெரிகிறது. ஆகவே, அதன் மாண்பினை உணராமல் மலிவான விவாதத்தில் மயங்கிக் கிடக்கிறீர்கள்" என்றார்கள்.

ஹள்ரத் அவர்களின் மகத்துவத்தை அறிந்திராத அந்த இரண்டு துறவிகளில் ஒருவர் கோபமாகக் கேட்டார் : "தாங்கள் இந்த நெறியினை என்ன விலை கொடுத்து வாங்கினீர்களோ?" என்று.

ஹள்ரத் இப்ராஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்கள் அமைதியாக பதிலளித்தார்கள் : "நான் எனது இந்தத் துறவு நெறியை பல்க் நாட்டின் (எனது) அரசுக்கு பதிலாகப் பெற்றுக் கொண்டேன். ஆனாலும் கூட நான் கொடுத்த விலை மிகவும் அற்பமானது என்று நம்புகிறேன்" என சாந்தமாகக் கூறினார்களாம்.

**தருபவர் : பா.ஹாஜி முஹம்மது,** சேந்தமங்கலம்.

# அல்லாஹு அஃலம்!

மவ்லவீ ஹாஃபிழ் எஸ்.ஃபக்கீர் முஹம்மது ஜலாலீ

சரியாக நான்கு வருடங்களுக்கு முன் முஸ்லிம் பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்கப் போகிறேன் என்று கிளம்பிய இந்திய ஃபிர்அவ்ன்கள் முத்தலாக் தடைச் சட்டத்தை பகிரங்கமாகவும், ஹஜ்ஜுக்கு மஹ்ரம் இல்லாமலேயே சுதந்திரமாக, தனியாக பெண்கள் செல்லலாம் என்ற ஆணையை ஹஜ்ஜு கமிட்டிக்கு வலியுறுத்தி நடைமுறைப்படுத்தினார்கள்.

இப்போது சவூதி அரசே மஹ்ரம் இன்றி பெண்கள் ஹஜ் செய்ய வரலாம் என்று அனுமதி வழங்கியிருக்கும் செய்தி வெளியாகி இருக்கிறது.

இதில் இந்தியாவின் மோடி, ஆறு முதல் அறுபது வரை பெண்கள் யாருக்கும் மஹ்ரம் தேவையில்லை எனச் சட்டம் சொன்னால் சவூதி அரசு நாற்பத்தைந்து வயதுக்கு மேல் மஹ்ரம் தேவையில்லை எனச் சட்டம் இயற்றியுள்ளது. இதனால் மொத்த இந்தியாவிலிருந்து 4000 பெண்கள் (ஆண் துணையின்றி) ஹஜ் செய்ய அனுமதி பெற்று சென்றுள்ளனர். அதில் கேரளப் பெண்கள் 2733 பேர் என்பது முக்கியச் செய்தி.

இவர்களுக்காக பெண்களே விமானம் ஓட்டி, பெண்கள் மட்டுமே விமானப் பணிப்பெண்களாக இருந்து செல்லும் விமானங்கள் இயக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இஸ்லாத்தின் ஒழுக்க விழுமியங்களில் ஒன்றை நபிநாதர் (ஸல்) அவர்கள் நடமாடிய பூமியில் குழிதோண்டிப் புதைத்துள்ளனர். இதன் மூலம், தியேட்டர், இசைக் கச்சேரிகளின் வரிசையில், தனித்து ஹஜ் செய்யும் பெண்கள் புரட்சியை(?) சவூதி துவக்கி வைத்துள்ளது.

பெண்ணுரிமைக்காகவே வாழ்ந்து, மரணிக்கும் தருவாயிலும் பெண்களைப் பேணிக்கொள்ளுங்கள் என்றே தம் வாழ்நாளை உலகின் பார்வையிலிருந்து முடித்த உத்தமரின் வழி வந்தவர்களாகச் சொல்லிக்கொள்ளும் அரபு தேசத்தவர்கள் இன்னும் என்னென்ன செய்யக் காத்திருக்கிறார்களோ? அல்லாஹு அஃலம்.

# பன்னீர் பூக்கள்

**- அன்வர் ஜீ,** சேலம் – 5.

நபித் தோழர் ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரளி) அவர்கள் கூறுவதாவது :

"ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம், 'எனக்கு ஏதேனும் சுருக்கமாக உபதேசியுங்கள்' என வேண்டி நிற்க, 'தொழும்போது இதுவே கடைசி தொழுகை என்றெண்ணி தொழுது வருவீராக! நீர் அவனைப் பார்க்க வில்லையானாலும், அவனோ உம்மைப் பார்க்கத்தான் செய்கிறான்.

மேலும், எப்பொருள் பிறர் வசம் இருக்கிறதோ அதனை விட்டு தேவையற்று ஆகிவிடுவீரானால், நீர் எல்லோரைக் காட்டிலும் அதிக மனநிறைவு பெற்ற சீமான் ஆகிவிடுவீர்! இன்னும் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுமானால் அப்படிப்பட்ட விஷயத்தை விட்டும் நீர் தவிர்ந்து கொள்வீராக!" என்று நவின்றார்கள். (தர்கீப்)

## நற்செயல்கள்

- விளையாட்டிற்குக்கூட மற்றவருடைய பொருளை எடுத்து வைத்து ஒருவரைக் கவலையுறச் செய்வது கூடாது.
- பிள்ளைகளை மிருகங்களின் பெயரைச் சொல்லி திட்டுவதை யும், சாபமிடுவதையும் பெற்றோர்கள் கண்டிப்பாக தவிர்ந்து கொள்ள வேண்டும்.
- ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய ஒருவர் பேச்சுவார்த்தை நடத்தும்போது, அதன் முடிவு தெரியாதவரை வேறொருவர் அப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள பேசுவது கூடாத காரியம்.
- பிள்ளைகளுக்கிடையே வேறுபாடு காட்டி அநீதமாக நடந்து கொள்வது கெட்ட செயல்களில் உள்ளதாகும்.
- தன்னிடமுள்ள தவறை யாராவது சுட்டிக்காட்டினால், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் தன் தவறை உணர்ந்து மனம் வருந்தி தவ்பா செய்வது ஈமானுக்கு அழகாகும்.
- வீணாகப் பேசினால் மரியாதையை இழப்பாய்!
- அதிகமாகப் பேசினால் அமைதியை இழப்பாய்!
- சிந்தித்துப் பேசினால் சிறப்புப் பெறுவாய்!
- கோபமான நிலையில் தீர்ப்பு செய்வதோ, ஒரு காரியத்தில் முடிவு செய்வதோ கூடாது. பிறகு அதற்காக வருந்த நேரிடும்.

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## நியாயம்!

ஹகம் பின் ஹிஷாம், ஸ்பெயின் தேசத்தை ஆண்ட முஸ்லிம் மன்னர்களில் ஒருவர். ஒரு சமயம் அவருக்கு ஒரு பிரத்தியேக மாளிகை கட்டும் அவா ஏற்பட்டது. மாளிகையின் நிர்மாணப் பணி துவங்கி யது. மாளிகையை ஒட்டி அழகிய பூங்கா ஒன்று அமைய வேண்டிய பரப்பின் ஒரு பகுதி ஆதரவுற்ற ஒரு மூதாட்டியின் சொத்தாக இருந்தது.

அதனை வாங்கிட மன்னர் விலை பேசினார். எவ்வளவு விலை கொடுத்தாலும் அதனை விற்றிட தனக்கு மனமில்லை என்று மூதாட்டி திட்டவட்டமாக அறிவித்து விட்டார். மன்னர் வெகுண்டார். அந்நிலத்தை பறிமுதல் செய்து கொண்டார்.

மூதாட்டி காஜி சாஹிபிடம் முறையிட்டார். நீதியைத் தவிர வேறு எதையும் வழங்கி அறியாத இஸ்லாமியச் சட்டம் அமலில் இருந்த காலம். ஒரு புறம் மன்னர்! மறுபுறம் அபலை!

காஜி சாஹிப் தீர்ப்பளிப்பதாக மூதாட்டியிடம் கூறினார். மூதாட்டி திருப்தியோடு திரும்பினார்.

தனது புதிய பூங்காவில் மன்னர் உல்லாசமாக பவனி வந்து கொண்டிருந்தார். காஜி சாஹிப் அவரை அணுகினார்.

"மன்னவா! சிறிது மண் வேண்டும்" என்றார்.

"அதற்காகத்தான் கழுதையோடு வந்துள்ளீரா?" என்றார் மன்னர்.

"ஆம் மன்னவா!"

"இம்மண்ணிலே என்ன அவ்வளவு விசேஷம் உள்ளது?"

"மன்னவா! சிறிது நேரத்தில் நீரே அறிந்து கொள்வீர்"

"சரி சரி அள்ளிக் கொள்ளும்!"

காஜி சாஹிப் சாக்கு நிறைய மண்ணை நிரப்பினார். பிறகு மூட்டையை கழுதை மேல் ஏற்றிட முனைந்தார். முடியவில்லை.

மன்னரே உதவிக்கு முன் வந்தார். இருவராலும் அதைத் தூக்க முடியவில்லை. காஜி சாஹிப் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்தார். "என்னய்யா குடி முழுகி விட்டது! ஏன் இப்படி இடிந்து உட்கார்ந்து விட்டீர்? பணியாட்களைக் கூப்பிடும்" என்றார். "நான் இடிந்து உட்காரவில்லை மன்னவா! சிந்திக்கிறேன்" என்றார்.

"என்ன பெரிய சிந்தனை?" என்றார் மன்னர். "இன்று இந்த சிறிய மூட்டையைத் தூக்க முடியாமல் நாம் இருவரும் இருக்கிறோம். நீங்கள் மறுமையில் தனியாக இப்பகுதி முழுவதையும் எப்படிச் சுமந்து நிற்பீர்களோ? என்று சிந்திக்கிறேன்" என்றார்.

"நான் ஏன் சுமக்க வேண்டும்?" என்றார் மன்னர்.

"பறிக்கப்பட்ட மண்ணை நீர் சுமந்து தானே ஆக வேண்டும். அல்லாஹ்வின் விசாரணையில் நீங்கள் நியாயத்தைத் தவிர வேறு எதை எதிர்பார்க்க முடியும்?"

மன்னர் மலைத்து நின்றார்; தம் தவறை உணர்ந்தார். மாளிகை முழுவதையுமே மூதாட்டிக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டு மன்னிப்பைக் கேட்டுக் கொண்டார்.

## அண்டை வீட்டார்!

சமுதாயத்தினரால் ஒருவர் நல்லவராக மதிக்கப்பட்டால்தான், சமுதாயத்தில் அங்கமாகத் திகழ்கிற பக்கத்து வீட்டாரிடம் நல்லவர் என்று பெயர் பெற்றால்தான் இறைவனிடம் நல்லவராகத் திகழ முடியும்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து "நாயகமே! எனக்குச் சொர்க்கம் கிடைக்கும்படியான அமல் ஒன்றை அறிவித்துத் தாருங்கள்" என்று வேண்ட,

"நல்லவராக இருப்பீராக!" என நபியவர்கள் சொல்ல,

"நான் நல்லவனாக இருப்பதை, நல்லவன்தான் என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது?" எனக் கேட்க,

"உமது பக்கத்து வீட்டார் நல்லவர் என்று சொன்னால் நீர் நல்லவரே! அவர்கள் உன்னை கெட்டவர் என்றால் நீர் கெட்டவரே" என நபி (ஸல்) அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள்.

ஒவ்வொன்றைப் பற்றியும் உண்மை தெரிவதற்கு உரைகல் உண்டு. நாம் நல்லவரா கெட்டவரா என்பதைத் தெரியப்படுத்து

கின்ற உரைகல் பக்கத்து வீட்டார்தான் என்பதை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

"யா ரசூலல்லாஹ்! பக்கத்து வீட்டார்களுக்குரிய கடமை என்ன?" என்று கேட்டபோது,

"அவர் நோய்வாய்ப்பட்டால் நலம் விசாரிக்க வேண்டும்.

மரணித்து விட்டால் மரணச் சடங்கில் கலந்து கொள்ள வேண்டும்.

கடன் கேட்டால், (இருந்தால்) கொடுக்க வேண்டும்.

குற்றம் கண்டால் மறைக்க வேண்டும்.

அவருக்கு ஓர் இலாபம் கிடைத்தால் சந்தோஷம் காட்ட வேண்டும்.

அவருக்கு ஒரு துக்கம் ஏற்படின் ஆறுதல் கூற வேண்டும்.

அவர் இல்லத்துக்கு செல்லக்கூடிய காற்றைத் தடுக்கும்படி உமது கட்டிடத்தை உயர்த்தக் கூடாது.

அவருக்கு சிறிதளவாகிலும் கொடுப்பதாக இருந்தாலன்றி சமையலின் வாடையைக் கூட வெளிப்படுத்தி அவருக்குக் கஷ்டம் கொடுக்கக் கூடாது"

என்று நபி (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள்.

(தொடரும்)

தமிழ்/ English நாளிதழ்களில் மற்றும்-
குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்ய...

Call-Whatsapp 86952 16016 CityAds

உங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும்?

எங்களிடம் கேளுங்கள்- உங்கள் இல்லம் வந்து சேரும்.

இஸ்லாமிய மற்றும் தமிழ் பதிப்பகங்களின் புத்தகங்கள்
தேவைகளுக்கு Call/Whatsapp: 98410 16016

CityAds BOOKS www.cityadsbooks.com

# நுகர்ந்தவை

**நூல் : சிராஜுல் மில்லத் – ஒரு சகாப்தம்**
**ஆசிரியர் : சேயன் இப்ராஹீம்**
**பக்கங்கள்: 296; விலை : ரூ.300/-**
**வெளியீடு : யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்,**
2, வடக்கு உஸ்மான் சாலை,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்),
தியாகராயர் நகர்,
சென்னை – 600017.
அலைபேசி : 044-28343385

தென்னகத்தின் மதீனாவான கடையநல்லூரைச் சார்ந்த சிறந்த எழுத்தாளரும், பன்னூலாசிரியருமான சேயன் இப்ராஹீம் இந்நூலை மிகச் சிறப்பாக எழுதி நமக்குத் தந்துள்ளார். நூலை நுகர ஆரம்பித்தபின் எத்தனை நாட்களானாலும் முழுமையாக இந்நூலை நுகர்ந்தே ஆக வேண்டும் என்ற உணர்வைத் தூண்டியது. அல்லாஹ் நூலாசிரியரின் அரிய சேவைகளைப் பொருந்திக் கொள்வானாக.

"சிராஜுல் மில்லத்" அப்துஸ் ஸமத் (ரஹ்) அவர்கள் பள்ளிப் படிப்பை முடித்த பின்பு திருகுர்ஆன் மொழிபெயர்ப்புப் பணியில் தன் தந்தைக்கு உதவியாக இருந்து விட்டுப்பிறகு, கல்லூரிப் படிப்பை மேற்கொண்டு முடித்த சாதனையாளர் என்பது இந்நூலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கல்லூரியில் சேர்ந்த முதல் நாள் வகுப்பில் நுழைந்தபோது நடந்த நகைச் சுவை நிகழ்வு நவிலப்பட்டுள்ளது. அவர் நடத்திய பத்திரிகைகள், அவர் வகித்த பொறுப்புகள், அவர் பங்கு கொண்ட நிகழ்ச்சிகள், சமுதாயச் சீர்திருத்தங்கள், தாய்ச் சபையான முஸ்லிம் லீகின் வளர்ச்சிக்காக உழைத்த உழைப்பு ஆகியவை இந்நூலில் உருப் பெருக்கம் செய்யப்பட்டுள்ளன. கஅபாவைக் கழுவும் பாக்கியம் பெற்றது, சவூதி அரேபியாவின் திருகுர்ஆன் அச்சகத்தைப் பார்வையிட்டது, பல நாடுகளுக்குச் சென்று வந்தது என இன்னும் பல அரிய பாக்கியங்களை பெற்றதற்குக் காரணம் திருகுர்ஆன் மொழிபெயர்ப்பை கையால் எழுதும் பணியைச் செய்ததால்தான் என்பதைத் தானே பணிவுடன் கூறுகிறார்.

மதமாற்றத் தடைச் சட்டத்தை அதிமுக அரசு கொண்டு வந்த போது அதனை எதிர்த்தும், புதிதாக இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றவர்களை வரவேற்றும் எழுதிய கட்டுரைகளின் சில பகுதிகள் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

"சிராஜுல் மில்லத்" அவர்களின் பேச்சாற்றலைப் போற்றி அறிஞர்கள் கூறிய பாராட்டுக்கள் இந்நூலை அணி செய்கின்றன. சொல்லப் போனால் "சிராஜுல் மில்லத்" அவர்களின் சகாப்தத்தை சமுதாயத்திற்கு சப்தமிட்டுச் சொல்லும் சங்க நாத நூல் இது.

ஆய்வு : **பாவா**

# இந்திய மண்ணில் முதல் இறை இல்லம்

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

"ஜின்களையும், மனிதர்களையும் (எனக்கு வழிபட்டு) என்னை வணங்குவதற்கன்றி (வேறெதற்காகவும்) நான் படைக்கவில்லை"

- அல்குர்ஆன் (51 : 56)

இத்திருவசனம், படைப்பின் நோக்கத்தைப் பறைசாற்றுகிறது.

"நிச்சயமாகத் தொழுகையோ குறிப்பிட்ட நேரத்தில் (தவறாமல்) நம்பிக்கையாளர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமையாகவே இருக்கின்றது".

- அல்குர்ஆன் (4 : 103)

ஆகவே, மனிதன் பருவமடைந்தது முதல் மரணிக்கும் வரை, தொழுகையை நிறைவேற்றியே தீர வேண்டும். அதற்கு விதிவிலக்கில்லை.

நம்பிக்கையாளர்கள் எந்த நிலையிலும் தொழுகைக் கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதால், அருளாளன் அல்லாஹ், அதனை இலகுவாக்கிக் கொடுத்துள்ளான். பயணத்தின் போது கஸர் செய்து கொள்ளலாம். அதாவது ளுஹர், அஸர், இஷா ஆகியவற்றின் பர்ளுத் தொழுகையை, சுருக்கி இரண்டு ரக் அத்தாகத் தொழ வேண்டும். 'உளூ' செய்து கொள்ளத் தண்ணீர் கிடைக்காதபோது தயம்மும் செய்து கொள்ளலாம். 2½ கி.மீ சுற்றளவில் தண்ணீர் கிடைக்காத போதும், கடுங் குளிர் அல்லது கடும் நோய் இருக்கும் போதும், தயம்மும் மேற் கொள்ளலாம்.

நின்று தொழவேண்டும், முடியாதபோது அமர்ந்தும், நோய் மிகுதியால் படுத்தும், அதுவும் சாத்தியமில்லையென்றால் சைகை செய்தும் தொழ வேண்டும். ஆகவே, எந்த நிலையிலும், தொழுகை நிறைவேற்றப் பட வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் முன் 'தொழுகை, தொழுகை' என்று இரண்டு முறை கூறி, தொழுகையின் முக்கியத்துவத்தை நினைவுபடுத்தினர் என்பதை நாம் நினைவு கொள்ள வேண்டும்.

புறத்தூய்மையை வலியுறுத்தும் இஸ்லாம், பூமி முழுவதிலும், தொழுது கொள்ளப் பணிக்கிறது. இறையில்லம் அல்லது இல்லம் அல்லது பூமியின் எப்பகுதியி

லும், தொழுகைக் கடமையை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

மக்காவில் புனித கஅபாவில், தொழுது வந்த நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் மேற்கொண்டு, மதீனா சென்ற போது, மதீனாவிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் அமைந்திருந்த குபா என்ற சிற்றூரில், ஓர் இறை இல்லத்தை அமைத்தார்கள். பிறகு, மதீனா சென்றடைந்ததும் புகழ் மிக்க நபிப்பள்ளியான மஸ்ஜித் நபவியை கட்டி முடித்து வழிகாட்டினார்கள். ஆகவே, முஸ்லிம்கள் தங்கி வாழுமிடங்களில், இறை இல்லத்தை முதலில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், அங்கு தான், அல்லாஹ்வின் அருட்பேறு வந்திறங்கும். தண்ணீர்த் தொட்டியை உயரத்தில் கட்டி ஊர் முழுவதும் நீர் பாய்ச்சப் படுவது போல், இறைவனின் ரஹ்மத்தும், இறையில்லத்தில் இறங்கி ஊரெங்கும் சென்றடையக் கூடுமல்லவா?

## சேரமன்னர்கள் - சாமரின்

சாமரின் என்ற பெயர் மலையாளத்தை ஆண்ட நாயர் குலத்தைச் சேர்ந்த மன்னர்களின் பட்டமாகிய சாமுரி என்பதன் திரிபாகும்.

மலையாளத்திலுள்ள மகோதை என்ற கொடுங்களூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த மூன்றாம் சேரமான் பெருமான் என்ற மன்னரையே குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சேரமான் பெருமாள் ராமவர்மா குலசேகரா, கேரளத்தை ஆண்ட கடைசி சேரமன்னரான இவர் நபி (ஸல்) அவர்கள் காலத்தவராவார்.

## சந்திரன் பிளக்கப்பட்ட அற்புதம்

"மறுமை நெருங்கிவிட்டது-[அதற்கு அத்தாட்சியாக] சந்திரனும் பிளந்துவிட்டது".

- அல்குர்ஆன் (54 : 1)

"நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் (மினாவில்) இருந்து கொண்டிருந்தபோது, சந்திரன் பிளவுபட்டு இரண்டு துண்டுகளாக மாறிற்று. அப்போது நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் "நீங்கள் சாட்சியாக இருங்கள். நீங்கள் சாட்சியாக இருங்கள்" என்று இரண்டு முறை கூறினார்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள்

(நூல் : ஸஹீஹுல் புகாரி 4865)

"நபி (ஸல்) அவர்கள் சத்திய மார்க்கத்தை பரப்பிக் கொண்டிருந்தபோது, அதனை ஏற்க மறுத்து வந்த குரைஷிக் காஃபிர்கள், நபி (ஸல்) அவர்களிடம், "முஹம்மதே! நீங்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதை யேற்க, ஓர் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டுங்கள்" என்று கேட்டனர்". "சந்திரனை இரண்டாகப் பிளந்து காட்டுக" என்றனர். ஆகவே, தங்களது உண்மைக்குச் சான்றாக நபி (ஸல்) அவர்கள்

இறையருளால், சந்திரனைப் பிளந்து காட்டினர்.

அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரளி) அவர்கள்

நூல் : ஸஹீஹுல் புகாரி 4867

(அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகள், சந்திரன் இரண்டாகப் பிளந்து பின்பு இணைந்திருப்பதற்குரிய அடையாளம் இருப்பதை உறுதி செய்கின்றனர்)

இவ்வற்புத நிகழ்வுக்கு அரேபியர்கள் சாட்சியமளித்தது போல அரபு நாட்டிற்கு வெளியிலிருந்தும் சான்று வழங்கப்பட்டது.

சேரமான் பெருமாள் ராம வர்மா குலசேகரா அவர்கள், தமது அரண்மனையின் மேல் மாடியிலமர்ந்து இளைப்பாறிய போது, சந்திரன் பிளவுண்டதைக் காணும் பேறு பெற்றார்.

வியப்பு மேலிட்ட சேர மன்னர், தமது நாட்டிற்கு வருகை தந்த அரேபிய வணிகர்களிடம் இது பற்றி வினவினார்.

அப்பொழுது ஷைக் ஷஹீருத்தீன் பின் பகீயுத்தீன் என்ற ஓர் அரேபிய வணிகர் நாங்கள் அரபு நாட்டினர். இஸ்லாம் என்ற சத்தியநெறியைப் பின்பற்றும் முஸ்லிம்கள் என்று அறிமுகம் தந்தபின் இஸ்லாம் மற்றும் நபி (ஸல்) அவர்களைப் பற்றயும், மதீனாவைத் தலை நகராகக் கொண்ட இஸ்லாமிய அரசுபற்றியும் எடுத்துரைத் தார். இவரின் மூலம் மேலும் பல செய்திகளைத் தெரிந்து கொண்ட மன்னர் மனதில், இறைத் தூதர் (ஸல்) அவர்களைச் சந்திக்கும் ஆவல் துளிர்த்தது.

சந்திரன் பிளக்கப்பட்ட நிகழ்வு பற்றிய செய்திகளை அரசுப்பதிவேட்டில் பதியச் செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார் மன்னர்.

## ஆதம் மலைப் பயணம்

இலங்கையில் நபி ஆதம் (அலை) அவர்களின் பாதம் பதிந்த மலையைக் காண அரபியர்கள் வருவது வழக்கம். ஷைகு நஸீருத்தீன் என்பவர் தலைமையில் சில முஸ்லிம்கள், இலங்கை நோக்கி ஒரு மரக்கலத்தில் கடற் பயணம் மேற்கொண்டனர். அரபிக் கடலில் திடீரென ஏற்பட்ட பயங்கரப் புயலும், கடல் கொந்தளிப்பும் அவர்களை கேரளக் கடற்கரையோரம் அருகிலுள்ள கொடுங்களூரில் தரை இறங்கச் செய்தன. இப் பயணிகள், மன்னரிடம், மக்களால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

மன்னரிடம், நாங்கள் நபி முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றி இஸ்லாத்தில் இணைந்து கொண்ட முஸ்லிம்கள் என்றும், நபி (ஸல்) அவர்களின் உயர்குணங்கள், அழைப்புப் பணிகள், இறைவேதம் அருளப்பட்ட சிறப்புகள் மற்றும் பல அதிசயங்களையும் அரபியர்கள் சீராக எடுத்துரைத்தனர்.

மன்னரும், சந்திரன் பிளந்து நின்றதைக் கண்டது பற்றியும், அவர்களிடம் கூறி உண்மை தெளிகின்றார். அப்பொழுது அவருக்கு அண்ணலார் மீது பற்றும், நம்பிக்கையும், ஊற்றெடுக்க, மனம் இஸ்லாம் நோக்கி அசைகிறது.

மன்னர் அரபியர்களிடம், நீங்கள் ஆதம் மலை கண்டு திரும்பும்போது என்னைச் சந்தித்து விட்டுச் செல்லுங்கள் என்று கூறினார்.

அவ்விதமே, அவர்கள் மன்னரைச் சந்தித்தபோது, அவர்களுடன் மக்கா செல்வதற்கு தயாராகிவிட்டார்.

அன்றிரவு, சேரமான் பெருமாள் தம் மனைவியை எழுப்பி, தாம் வெளியூர் செல்ல விரும்புவதாகவும் எனவே, அரச பாரத்தை ஏற்குமாறும் கூறினார். அவள் மறுக்கவே, தம் மருமகனுக்கு கைச்சாத்திட்டு, தம் அரசபாரத்தை ஒப்படைத்தார். பிறகு, இரவோடு இரவாக அவ்வூரை விட்டு அந்த அரபிக் குழுவுடன் அகன்றார்.

## அரியபேறு

மக்கா சென்றடைந்த மன்னர், மாநபி (ஸல்) அவர்களைச் சந்திக்கும் அரிய பேற்றினைப் பெற்று, இஸ்லாத்தை ஏற்றார்.

அப்துர் ரஹ்மான் சாமிரி என்று பெயர் மாற்றம் பெற்று, சிலகாலம் அங்கு தங்கினார்.

பின்னர், திமிஷ்க் (டமாஸ்கஸ் நகர் - சிரியா) நாட்டின் மன்னர் மாலிக் ஹபீப் என்பவரின் புதல்வி ருகைய்யாவைத் திருமணம் முடித்து, அங்கு வாழ்ந்தார்.

## கேரளாவில் இஸ்லாம்

தமது நாடான கேரளாவில், இஸ்லாத்தைப் பரப்ப வேண்டும் என்ற பேரவா மன்னர் மனதில் எழுந்தது.

அவரின் வேண்டுகோளையேற்று, மன்னர் மாலிக் ஹபீப், தமது மகனார் மாலிக் இப்னு தீனார் அவர்களையும் அவர்களின் குடும்பத்துடன், சில அறிஞர்களையும் மன்னர் சாமிரியுடன் அனுப்பி வைத்தார். இக்குழுவினர், இஸ்லாமியப் பிரச்சாரத்தை மேற்கொள்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

இக்குழுவினர் பயணத்தைத் தொடங்கி வந்து கொண்டிருந்தபோது, ஏமன் நாட்டின் ஸாபர் துறைமுகத்தை வந்தடைந்த தருணம் (Port of Zabar Yemen) மன்னர் உடல் நலம் குன்றி, இறப்பெய்தி விட்டார். அவருடைய புனித உடல் அங்கேயே நல்லடக்கம் செய்யப்பட்டது. (இன்னாலில் லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்).

மரணத் தருவாயில், சாமிரி மன்னர், கேரள மன்னருக்கு அறிமுகக் கடிதமும், அடையாள அணிகலன்களும், தம் குழுவினரிடம் கொடுத்து, பயணத்தைத் தொடருமாறு கூறினார்.

மாலிக்பின் தீனார் அவர்களின் குழு, பயணத்தைத் தொடர்ந்து சேர நாட்டை அடைந்தது.

# முனவ்வரா மகளிர் அறநிலையம்

மூன்று மாவடி, (சர்வேயர் காலனி பஸ் ஸ்டாப்), மதுரை-625 007.

அலைபேசி : 97156 04495, 95977 25934

எமது நிறுவனம், மதுரை மாநகரில் இறையருளால் கடந்த **54 ஆண்டுகளாக** அநாதை, ஏழை முஸ்லிம் பெண் குழந்தைகளுக்கு '**ஆலிமா**' பட்டப்படிப்புடன் மார்க்கக் கல்வி, அரசு **சமச்சீர் கல்வி,** தையல் பயிற்சியுடன், குர்ஆன் ஷரீஃப், கிதாபுகள், பள்ளிப் புத்தகங்கள், சீருடைகள், மருத்துவ வசதி, மூன்று வேளை உணவு, தங்குமிடம் யாவும் முற்றிலும் **இலவசமாக** வழங்கி (அல்லாஹு தஆலாவிடம் மேலான நன்மையைக் கருதி) சிறப்பாக நடைபெற்று வருகிறது. அல்ஹம்து லில்லாஹ்!

தற்போது நடப்புக் கல்வி ஆண்டு "**புதுச் சேர்க்கை**" நடைபெறுவதால் விருப்பமுள்ள மாணவிகள் தக்க பொறுப்பாளருடன் தம் மஹல்லா முஸ்லிம் ஜமாஅத்தின் கடிதம் பெற்று உடனே நேரில் வந்து இந்நல்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் விழைகிறோம்.

இப்படிக்கு

**நிர்வாகக் குழுவினர்**

★ **'ஆலிமா' வகுப்புக்கு வருடம் முழுவதும் எந்நாளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்•**

**எமது இந்நிறுவனத்திற்கு 'நிதி வசூலிப்போர்' யாரும் நியமிக்கப்படவில்லை.**

**எனவே, முனவ்வரா மகளிர் அற நிலையத்திற்கு உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நேரடியாகவே எங்களுக்கு**

**"MUNAWWARAH GIRLS ORPHANAGE TRUST"**

**என்ற பெயரில் DD/செக் / M.O. மூலம் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவிட வேண்டுகிறோம்.**

மன்னர் சாமிரி, தமது கடிதத்தில், இஸ்லாத்தை மக்களிடம் கொண்டு செல்ல, மாலிக் பின் தீனாருக்கும் மற்றும் அவர் குழுவினர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு பணித்திருந்தார்.

கேரள அரசரும், அவரின் குடும்பத்தவர்களும், மன்னரின் கட்டளைப்படி, இஸ்லாத்தைப் பரப்பவும், இறை இல்லங்களை எழுப்பவும் பெரிதும் உதவினார்கள்.

கி.பி.612-ல் கொடுங்களூரில், முதல் இறை இல்லத்தை, மாலிக் பின் தீனார் அவர்கள் கட்டி, வரலாறு படைத்தனர்.

சேரமான் பெருமாள் அவர்களின் உதவியினால் கட்டப்பட்ட இப்பள்ளி அன்னாரை நினைவு கூறும் பொருட்டு 'சேரமான் ஜூம்ஆ பள்ளி' என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

## கட்டுமான அமைப்பு

இப்பள்ளி, இந்தியாவின் முதல்பள்ளி என்பதற்கு, இதன் அமைப்பே ஓர் சான்றாகும். ஏனெனில், இந்து கட்டடக் கலையை ஆதாரமாகக் கொண்டு கட்டப்பட்டதால், கட்டடம் கிழக்குத் திசையை நோக்கி அமைக்கப்பட்டு விட்டது. பிறகு மேற்கு நோக்கி அமைக்கப்பட்டது. இப்பள்ளியில் மினராக்கள் இல்லை. அரைக்கோள மேற்புறங்கள் உருண்டையான அமைப்பு (Dome) இல்லை. மிகவும் சாதாரணமான கட்டடமாகவே இருந்தது. பழைய பகுதிகளுக்கு, எவ்விதச் சேதாரமும் ஏற்படாதவாறு புதிய முறையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

## சிறப்புகள் (இணையதளம்)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காலத்திலேயே கட்டப்பட்டது.

மற்ற மதத்தவர்களும் இங்கு வருகின்றனர்.

சேரமான் பெருமான் அவர்களின் வம்சா வழியினரான கொச்சி அரசக் குடும்பத்தினருக்கு இங்கு முதல் மரியாதை கொடுக்கப் படுகிறது.

இங்கு பழமையான ஒரு தாமிர விளக்கு உள்ளது. இதற்கு, எல்லா மதத்தினர்களும் எண்ணெய் கொண்டு வருகின்றனர். மிம்பர் படிகள் (சொற்பொழிவுப் படிகள்) கருங்காலி மரப்பலகை (Rose Wood)யாலும், கரும் பளிங்குக் கற்களாலும் கட்டப்பட்ட பழமையானவை யாகும். கரும்பளிங்குக் கற்கள் மக்கா நகரிலிருந்து கொண்டுவரப்பட்டவை என நம்பப்படுகிறது.

## அரியவாய்ப்பு

ஹி 10-11-1444 / 30-05-2023 புதன்கிழமை சேரமான் ஜூம்ஆ மஸ்ஜித் சென்று அங்கு, அஸர் தொழும் வாய்ப்பை அல்லாஹ் எனக்கு வழங்கினான். அல்ஹம்துலில்லாஹ்!

சிறிய கட்டிடம். சுமார் 30 பேர்கள் நின்று தொழும் அளவு உள்பள்ளி அமைந்துள்ளது. உள்ளே நுழைந்தவுடன் பத்து 13 பேர் அமர்ந்து உளூ செய்யும் அளவு, ஒரு சிறிய ஹவுள் (நீர்த் தடாகம்) அமைந்துள்ளது. இது பள்ளியின் ஆரம்ப காலத்தில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. உள்பள்ளியின் இருபுறமும் 25 பேர் நின்று தொழும் அளவு வெளிப்பள்ளி காணப்படுகிறது.

உள்பள்ளியின் நடுவில், மேற்குறிப்பிட்ட புராதன தாமிர விளக்கு வைக்கப்பட்டுள்ளது. சுமார் 6 அடி உயரம். விளக்கு எரிக்கப்படுவதில்லை. பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பள்ளியின் விரிவாக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

கொடுங்களூர், திருச்சூர் மாவட்டத்தில் உள்ளது. கொச்சியிலிருந்து 35 கி.மீ. தூரமாகும்.

## அழைப்புப் பணி

இஸ்லாத்தின் அழைப்புப் பணியைத் தொடர விரும்பி ஹள்ரத் மாலிக் இப்னு தீனார் அவர்கள் கேரளாவின் பல பாகங்களுக்கு தம் குழுவினரை அனுப்பி வைத்தனர்.

கொடுங்களூரைத் தலைநகராக வைத்துக் கொண்டனர்.

இவர்களின் மகனார் ஹள்ரத் மாலிக் முஹம்மது அவர்கள், குமரி மாவட்டத்தில் அழைப்புப் பணியை மேற்கொண்டனர்.



மணம் முடித்துக் கொடுத்து விட்டு ஹஜ்ஜுக்கு போ! கடன்களை முழுமையாக அடைத்து விட்டு போ! மனைவி மக்கள் தங்கு வதற்கு ஒரு நடுத்தரமான வீட்டைக் கட்டிக் கொடுத்து விட்டு போ! என்றெல்லாம் சொன்னார்கள்.

இன்றைய ஹஜ் பயணம் என்பது விமானத்தில் சில மணி நேரம் பயணம் செய்து ஹஜ்ஜுடைய வணக்கங்கள், மக்கா-மதீனாவில் செய்ய வேண்டிய உபரியான வணக்கங்கள் எல்லாவற்றையும் முடித்து விட்டு 35 அல்லது 40 நாட்களுக்குள் ஊர் திரும்பி வந்து விடுகிறோம். இதில் பயணச் சிரமம் என்பது பெரிய அளவில் இல்லை. இந்த ஹஜ் பயணத்தில் நாம் பயணிக்கும் விமானம் மற்றும் பேருந்து முழுவதும் ஏ.சி. அமைக்கப்பட்டுள்ளது. அங்கே நாம் போய் தங்கும் விடுதிகள், தொழும் பள்ளிவாசல்கள் எல்லாம் ஏ.சி. அமைக்கப்பட்டுள்ளது. எவ்விதச் சிரமமுமின்றி ஏதோ சுற்றுலா போய் வந்ததைப் போல் ஒரு சுகமான பயணமாக மாறியிருக்கிறது.

பயணத்தின் நேர காலங்கள் சுருங்கி மிக சுகமாக்கப்பட்டிருக்கின்ற இந்தக் காலத்திலும் கூட தலைமுடி நரைக்கும் முதுமைக் காலத்தில் ஹஜ் செய்யலாம் என்றெண்ணி விலைமதிக்க முடியாத வாலிபக் காலத்தை வீணடிப்பது மாபெரும் தவறாகும். எந்தவொரு வணக்கத்தையும் முதுமையில் நிறைவேற்றுவதைவிட இளமைப் பருவத்தில் நிறைவேற்றுவது அதிகமான நன்மைகளைத் தரும் என்று இஸ்லாம் இயம்புகிறது.

**“எவர்கள் அங்கு பயணம் செய்யச் சக்தி உள்ளவர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மனிதர்கள் மீது அல்லாஹ்வுக்காக [அங்கு சென்று] அந்த ஆலயத்தை ஹஜ் செய்வது கடமையாகும். எவரேனும் [இதை] நிராகரித்தால் [அதனால் அல்லாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை. ஏனென்றால்] நிச்சயமாக அல்லாஹ் உலகத்தாரை விட்டும் தேவையற்றவனாக இருக்கிறான்”**

- அல்குர்ஆன் (3 : 97)

வசதி இருந்தும் காலம் கடத்துவதற்குத் தான் அல்லாஹ் இவ்வசனத்தில் “நிராகரிப்பு” என்ற பதத்தைப் பயன்படுத்துகிறான். காலம் கடத்துவதே இறைநிராகரிப்புக்குச் சமம் என்பதை இதன் மூலம் விளங்கலாம்.

**நாயகம் [ஸல்] அவர்கள் அல்லாஹ் கூறுவதாக [ஹதீஸ் குத்ஸியை] கூறினார்கள். “ஓர் அடியானுக்கு நான் உடல் நலத்தையும், வாழ்க்கையில் [பொருளாதார] விசாலத்தையும் கொடுத்து அவர் அதே நிலையில் 5 ஆண்டுகள் கழித்த பிறகும் ஹஜ்ஜின் மூலமாக என்னைச் சந்திக்க வரவில்லையானால் அவர் [என்**

# துக்கத்தின் போது...

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

ٱلَّذِينَ إِذَآ أَصَٰبَتْهُم مُّصِيبَةٌ قَالُوٓا۟ إِنَّا لِلَّهِ وَإِنَّآ إِلَيْهِ رَٰجِعُونَ

**"அவர்கள் தமக்குத் துன்பம் ஏதேனும் நேர்ந்தால் "நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள் அவனிடமே நாங்கள் திரும்பிச் செல்பவர்கள்" என்று கூறுவார்கள்.** - அல்குர்ஆன் 2:156

இறைநம்பிக்கையாளர்களாகிய நாம், பயம், வறுமை, நோய் மற்றும் உயிரிழப்பு, செல்வ இழப்பு ஆகியவற்றால் சோதனையைச் சந்திக்கும்போது புலம்பித் திரியக் கூடாது. அது (களா கத்ரு எனும்) இறைவனின் தீர்ப்புக்கு எதிரானது. ஆகவே, பொறுமையோடு இருந்து அல்லாஹ்வை நம்பிய நிலையில்திருகுர்ஆனின் கூற்றுக் கேற்ப "நாங்கள் அல்லாஹ் வுக்கே உரியவர்கள் அவனிடமே நாங்கள் திரும்பிச் செல்பவர்கள்" என்ற இறை வசனத்தை ஓதிக் கொண்டே இருக்க வேண்டும்.

இதன் மூலம்தான் நாம் மன அமைதி பெற முடியும். இந்தப் பொறுமைக்கு ஈடாக அதை விடச் சிறந்ததுமானஇறைவனின் மன்னிப் பும், கருணையும் கிடைக் கும் என்கிறது அல்குர்ஆன்.

## சொர்க்கமே கூலி

ஹள்ரத் அம்ரு பின் ஷுஐப் (ரஹ்) அவர்கள் அப்துல்லாஹ் பின் அப்திர் ரஹ்மான் பின் அபீ ஹுசைன் (ரஹ்) அவர்களுக்கு இறந்துவிட்ட அவர்களின் புதல்வர் குறித்து இரங்கல் தெரிவித்துக் கடிதம் எழுதினார்கள்.

அக்கடிதத்தில் அவர்கள் "இறைநம்பிக்கை கொண்ட ஓர் அடியாருக்கு இப்பூமியில் அவருக்குப் பிரியமான (குழந்தை, பெற்றோர், மனைவி, சகோதர, சகோதரிகள், நண்பர்கள் போன்ற) வர்கள் இறந்துபோய் அதற்காக அவர் பொறுமையைக் கடைபிடித்து (அல்லாஹ்விடம்) நன்மையை எதிர்பார்த்து அவருக்குக் கட்டளையிடப்பட்ட (இன்னா லில்லாஹி... என்ப)தைச் சொன்னால் அவருக்குச் சொர்க்கத்தைத் தவிர வேறு எதையும் கூலியாக வழங்க அல்லாஹ் விரும்புவதில்லை" என்று அண்ணல்நபி (ஸல்) அவர்கள் சொன்னதாக தன் பாட்டனார் ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ் (ரளி) அவர்கள் அறிவித்

தார்கள் எனக் குறிப்பிட்டிருந் தார்கள். (நூல்: நஸாயீ 1848)

ஹஜ்ரத் அபூஸினான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது: "இறந்து போன என் மகன் ஸினானை நான் அடக்கம் செய்தேன். அப்போது மண்ணறையில் இருந்து என்னை அபூதல்ஹா அல்கவ்லானீ (ரஹ்) அவர்கள், எனது கையைப் பற்றித் தூக்கி வெளியேற்றிவிட்டு, நான் உமக்கு ஒரு நற்செய்தி சொல் லட்டுமா? என்று கேட்டார்கள். நான் சரி (சொல்லுங்கள்) என்றேன்.

அவர் கூறினார்: அபூமூஸா (ரளி) அவர்கள் அறிவிப்பதாவது, (ஓர் அடியாரின் குழந்தை இறந்து விட்டால்) அல்லாஹ் (உயிரைப் பறிக்கும் வானவரை அழைத்து) "மரணத்தின் வானவரே! என் அடியாரின் குழந்தையைக் கைப்பற்றினீரா? அவரது கண் குளிர்ச்சியை அவரது இதயக்கனி யைக் கைப்பற்றினீரா?" என்று கேட்பான். அதற்கு அவர், "ஆம்" என்பார். "அப்போது என் அடியார் என்ன கூறினார்?" என்று அல்லாஹ் கேட்பான். அதற்கு (இறைவா) அவர் உன்னைப் புகழ்ந்தார். அத் துடன் 'இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்' என்று கூறினார். என்பார். அப் போது, அல்லாஹ் "என் அடியாருக் காகச் சொர்க்கத்தில் ஒரு மாளிகை எழுப்புங்கள், அதற்குப் "புகழ் இல்லம்" எனப் பெயரிடுங் கள்" என்று (வானவர்களிடம்) கூறுவான் என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்".

(நூல் : முஸ்னது அஹ்மத், தஃப்சீர் இப்னுகஸீர் அல்பகரா வசனம் 157)

## எல்லோரும் வந்து விட்டால்

ஹஜ்ரத் பின் அப்துல்லாஹ் (ரளி) அவர்கள் கூறியதாவது: "அகழ் வெட்டும் பணியில் ஈடு பட்டுக் கொண்டிருந்தபோது கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் கடும் பசியுடன் இருப்பதை அறிந்தேன். எனவே, நான் அண்ணலாரிடம் சென்று (இரகசியமாக) "நாயகமே! நான் உங்களுக்காக என்னிடம் இருந்த ஓர் ஆட்டுக்குட்டியை அறுத்து சமைத்து வைத்துள்ளேன். அதனுடன் சில ரொட்டிகளையும் சமைத்து வைத்துள்ளேன். நீங்கள் என்னுடன் என் இல்லத்துக்கு வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்றேன். நான், என்னுடன் அண்ணலார் மட்டும் வரவேண்டும் என்று நாடினேன். ஆனால் நான் இதனை அண்ணலாரிடம் கூறியபோது, அண்ணலார் "சரி (வருகிறேன்)" என்று கூறி அழைப்பாளரிடம் (அழைப்பு கொடுக்குமாறு) உத்தரவிட்டார்கள். அவ்வழைப் பாளர், "அண்ணலாருடன் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரளி) அவர்களின் இல்லத்திற்குத் திரும்புங்கள்" என்று அழைப்பு விடுத்தார்.

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

நான் (இதைச் செவியுற்ற தும்) "இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்" என்று (வியப்புடன்) கூறினேன். பிறகு அண்ணலாருடன் மக்களும் சேர்ந்து புறப்பட்டனர். அண்ணலார் (என் இல்லத்திற்கு வந்து) அமர்ந் தார்கள். அண்ணலாருக்கு அவ் வுணவைக் கொண்டு வந்து வைத் தோம். அண்ணலார் அருள்வளத் திற்காகப் பிரார்த்தித்து, அல்லாஹ் வின் பெயரைக் கூறி உட்கொண் டார்கள். அதனைத் தொடர்ந்து (அங்கு வந்த) மக்கள் அனைவரும் (அவ் வுணவிலிருந்து) உட் கொண்டு திரும்பினர்.

(நூல் : சீரத் இப்னு ஹிஷாம், முஸ்னது அஹ்மத், அல்பிதாயா வந்நிஹாயா)

ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர் கள் வீட்டில் இருந்த சிறிதளவு உணவுப் பொருட்களை வைத்து ஓரிரு பேர் உண்ணுவதற்குண் டான அளவு தான் சமைக்க முடிந் தது. எனவே, அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மட்டுமாவது வயி றார உண்ணட்டும் என்றெண்ணி அவ்வாறு கூறினார். ஆனால், அண்ணலார் உணவு உண்ண அனைவரும் வாருங்கள் என அழைப்பு விடுத்ததும் ஜாபிர் (ரளி) அவர்களுக்கு தர்மசங்கடமாகி விட்டது. எல்லோரும் வந்து விட் டால் அந்த உணவிலிருந்து அண்ணலார் வயிறார உண்ண முடியாதே என்ற கவலையில் தான் அவர் "இன்னாலில்லாஹி" என்று துக்கத்தின்போது சொல்லப் படும் வார்த்தையைக் கூறினார். எனவே, மனதில் சிறிதளவு கவலை ஏற்பட்டாலும் "இன்னா லில்லாஹி" ஓதினால் போதும் அது சரியாகிவிடும்.

## ஆட்சி அதிகாரம்

(கலீஃபா எனும்) ஆட்சி யாளர் சுலைமான் பின் அப்துல் மலிக் என்பவர் எழுதிய ஆவணத் தில் உள்ளவை : "எனக்குப் பிறகு உமர் பின் அப்துல் அஸீஸ் அவர் களை முறைப்படி கலீபாவாக நியமிக்கிறேன். அவருக்குப் பிறகு அப்துல் மலிக்கின் குடும்ப வாரிசு கலீஃபாவாக நியமிக்கப் பட வேண்டும் என்று எழுதப் பட்டிருந்தது. சுலைமான் பின் அப்துல் மலிக்கின் இறப்புக்குப் பின் மக்கள் மன்றத்தில் ராஜஅ பின் ஹய்வா என்பவர் இந்த ஆவணத்தை வாசித்தபோது, உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் இன்னல் ஏற்படும் போது சொல்லும் "இன்னாலில் லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்" என்ற வார்த்தையை அதிர்ச்சியுடன் உச்சரித்துவிட்டு அப்படியே அமர்ந்து விட்டார்கள்.

சுலைமான் பின் அப்துல் மலிக்கின் உடலை நல்லடக்கம் செய்யும் பணிகள் முடிந்து திரும்பி வரும்போது உமர் (ரஹ்) அவர் களின் பணியாள், "தாங்கள் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுகிறீர்களே ஏன்? என்று கேட்டார். உமர் (ரஹ்) அவர்கள்,

"ஆட்சிப் பொறுப்பு என்பது பளு நிறைந்தது. இது பற்றி மறுமை யில் என்னிடம் விசாரிக்கப்படும். ஆகவே தான் கவலையுடன் இருக் கிறேன்" என்று பதிலளித்தார்கள்.

பிறகு அன்னார் தன் தாடி கண்ணீரால் நனைந்திருந்த நிலையில் வீட்டுக்குள் நுழைந் தார்கள். இதைப்பார்த்துப் பதைத்துப்போன அன்னாரது மனைவியார் உடல் நலம் குறித் துக் கேட்டார். அன்னார், "மக்கள் அனைவருடைய சுமையும் என் தோள் மீது சுமத்தப்பட்டுள்ள நிலையில் எப்படி நலமாக இருக்க முடியும்? இந்தப் பணிச்சுமை குறித்து மறுமை நாளின் விசாரணையின்போது ஏற்படும் தோல்வி பயம் தான் கண்ணீ ருக்கான காரணம்" என்று விவரித்தார்கள்.

## நோவினை தரும் காரியம்

ஒருநாள் இரவில் அருமை நாயகம் (ஸல்) அவர்களின் விளக்கு அணைந்தது. உடனே அண்ணலார் "இன்னாலில்லாஹி" என்று கூறினார்கள். அப்போது 'இதுவும் துன்பமா?' என்று கேட்கப் பட்டது. அண்ணலார் "ஆம்! இறை நம்பிக்கையாளருக்கு நோவினை தரும் ஒவ்வொரு காரியமும் துன்பமாகும்" என்று கூறினார்கள்.

நூல் : தஃப்சீர் ராஸீ

ஹள்ரத் ஸயீத் பின் முஸய்யிப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "ஒருமுறை ஜனாதிபதி உமர் (ரளி) அவர்களின் செருப்பின் நடு வார் அறுந்துவிட்டது. அப்போது அன்னார், "இன்னாலில்லாஹி..." என்று கூறினார்கள். அங்கிருந் தோர் "ஜனாதிபதி அவர்களே! செருப்பு வார் அறுந்துவிட்டதற் கும் இன்னாலில்லாஹி கூறு கிறீர்களே?" என்று வினவினர். உமர் (ரளி) அவர்கள் "ஓர் இறை நம்பிக்கையாளரை வருந்தச் செய்யும் ஒவ்வொரு செயலும் அவருக்குத் துன்பம் தான்" என்று கூறினார்கள்".

நூல் : கன்ஸுல் உம்மால், பைஹகீ, ஹயாத்துஸ் ஸஹாபா பாகம் 2, பக்கம் 799.

மரணச் செய்தியைக் கேள்விப் பட்டால் மட்டும்தான் "இன்னா லில்லாஹி" என்று சொல்ல வேண்டும் என்று சிலர் எண்ணு கிறார்கள் அது தவறு. மனதிற்கு சிறு வருத்தத்தைத் தரும் ஒரு காரியம் நடந்துவிட்டாலும் கூட அதற்கும் "இன்னாலில்லாஹி..." என்று கூறியே இறைவனிடம் மன ஆறுதலைத் தேட வேண்டும்.

மார்க்க அறிஞர்கள் கூறு கிறார்கள். ஒருவர் ஏதேனும் ஒரு பொருளை எங்காவது வைத்து மறந்து விட்டு தேடிக்கொண் டிருக்கும் போது, "இன்னாலில் லாஹி..." ஓதினால் காணாமல் போனது கிடைத்து விடக் கூடும்.

## இறைவழிபாடு தவறும்போது

ஒருநாள் உமர் (ரளி) அவர் கள் தங்கள் தோட்டத்திற்குச் சென்றார்கள். திரும்பி வந்து

பார்க்கும்போது அஸர் தொழுகையின் ஜமாஅத் முடிந்து மக்கள் கலைந்து சென்று கொண்டிருந்தனர். இதைக்கண்ட உமர் (ரளி) அவர்கள் "இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" எனக்கு அஸர் தொழுகை ஜமாஅத் தவறிவிட்டதே! அந்தத் தோட்டத்தினால் தானே எனக்கு இந்நிலை ஏற்பட்டது. அத்தோட்டத்தை ஏழைகளுக்கு தர்மம் செய்து விட்டேன் என்பதற்கு மக்களே! நீங்கள் சாட்சியாக இருங்கள்" என்று கூறினார்கள்.

நூல் : அல்கபாஇர் இமாம் தஹபீ

நாம் வழமையாகச் செய்து வந்த ஓர் இறைவழிபாடு தவறும் போது அதற்கு நம்முடைய பொடுபோக்குத்தனம் என்ற பாவம்தான் காரணம் என்று விளங்க வேண்டும். நம்மிடம் ஏற்பட்ட பாவம் என்பது நாம் வருத்தப்பட வேண்டிய ஒரு துக்கமான காரியமே. அதை நாம் எண்ணும்போது "இன்னாலில் லாஹி..." என்று சொல்வது இயல்பாகி விடும்.

## அதைவிடச் சிறந்தது

அன்னை உம்மு ஸலமா (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒரு முஸ்லிமுக்கு ஏதேனும் துன்பம் நேரும்போது அவர் அல்லாஹ்வின் கட்டளைக் கேற்ப (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) "நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்" என்றும், "இறைவா! எனக்கு ஏற்பட்ட இத்துன்பத்திலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக! இதற்குப் பகரமாக இதைவிடச் சிறந்ததை எனக்கு வழங்குவாயாக! என்றும் கூறினால், அதற்கு ஈடாக அதைவிடச் சிறந்ததை அவருக்கு அல்லாஹ் வழங்காமல் இருப்பதில்லை" என்று அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

என் முதல் கணவர் அபூஸலமா (ரளி) அவர்கள் இறந்த போது நான் "அபூஸலமாவை விட முஸ்லிம்களில் சிறந்தவர் எவர் இருக்க முடியும்? அண்ணலாரிடம் முதன்முதலில் நாடு துறந்து வந்த குடும்பம் (அவருடைய குடும்பம் தான்)" என்று எனக்குள் நானே கூறிக் கொண்டேன். ஆயினும் (அண்ணலாரின் கூற்றுக்கேற்ப) இன்னாலில்லாஹி... என்று நான் சொன்னேன். பிறகு, எனக்கு அண்ணலாரையே மணந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. அல்லாஹ் அபூஸலமாவுக்கு மாற்றாக, அவரைவிடச் சிறந்தவராகிய அண்ணலாரையே எனக்கு (இரண்டாவது கணவராக) வழங்கி விட்டான்".

(நூல் : முஸ்லிம் 1674, இப்னுமாஜா 1437)

ஹள்ரத் அலாஇ (ரளி) அவர்கள் கூறியதாவது : "நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்

# AL-MASJIDUL IKHLAS JUM'AA MASJID

# அல்-மஸ்ஜிதுல் இக்லாஸ் ஜும்ஆ பள்ளிவாசல்

## "GOMATHIPURAM MUSLIM JAMATH"

**2/455, Pandian Street, Gomathipuram, Madurai-625 020.**

கண்ணியமிகு தங்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்...

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும், நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தாலும், மதுரை கோமதிபுரம் 6–வது மெயின்ரோட்டில் அமைந்திருக்கும் **அல் மஸ்ஜிதுல் இக்லாஸ் ஜும்ஆ பள்ளிவாசலின்** வளர்ச்சி மற்றும் இட நெருக்கடியைப் போக்கும் விதமாகவும், நமது பள்ளியை விஸ்தீரணப் படுத்துவதற்காகவும் அல்லாஹ் நமது பள்ளிவாசலின் அருகில் 10 செண்ட் இடத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளான். அல்ஹம்துலில்லாஹ்!

அந்த இடத்தை விலைபேசி முன் பணமாக ரூபாய் ஐந்து இலட்சம் (ரூ.**5,00,000/–**) மட்டும் கோமதிபுரம் முஸ்லிம் ஜமாஅத் மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தின் மொத்த மதிப்பு தொகை ரூபாய் **ஒரு கோடியே ஐம்பது இலட்சம்.**

எனவே இஸ்லாமிய பெருமக்கள் அனைவரும் தங்களின் மனம் திறந்த உதவிகளை, சொர்க்கத்தில் தங்களுக்கான மாளிகையைச் சொந்தமாக்கிக் கொள்ளும் எண்ணத்துடன், நன்கொடைகளை அளித்து பள்ளிக்கான இடத்தினை விரைவில் பதிவு செய்ய ஒத்துழைக்குமாறு, அன்புடன் வேண்டுகிறோம்.

**இப்படிக்கு : மதுரை கோமதிபுரம் முஸ்லிம் ஜமாஅத்.**

| தலைவர் : | செயலாளர் : |
|---|---|
| அல்ஹாஜ் **S.M.காஜா மைதீன்** | அல்ஹாஜ் **S.செய்யது பஷீர் அஹமது** |
| **செல் : 9894017478** | **செல் : 9787963051** |

**BANK DETAILS : GOMATHIPURAM MUSLIM JAMATH**

Canara Bank : SB A/c No. **342010100928**
Branch : Gomathipuram Branch,
IFSC CODE : CNRB 0003420

மரண நேரம் நெருங்கியதும் (அவர்களின் மகளார்) ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்கள் அழுதார்கள். அப்போது அண்ணலார், "என் அருமை மகளே! அழாதே, மாறாக, நான் மரணித்து விட்டால் 'இன்னா லில்லாஹி...' கூறுவாயாக! ஏனெனில், அவ்வாறு கூறும் ஒவ்வொரு மனித னுக்கும் அவனின் எல்லா விதமான நஷ்டத்திற்கும் பகரம் கிடைத்துவிடும்" என்று கூறினார்கள். உடனே ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்கள், "நாயகமே! உங்களை இழந்தாலும் பகரம் கிடைக்குமா? என்று வினவினார்கள். அதற்கு அண்ணலார் ஆம்! என்னை இழந்தாலும், இக் கலிமாவை (இன்னாலில்லாஹி...) கூறினால் பகரம் கிடைக்கும்" என்று கூறினார்கள்".

(நூல் : தபகாத் இப்னு ஸஅத், ஹயாத்துஸ் ஸஹாபா பாகம் 2, பக்கம் 430)

**அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "ஒருவருக்கு ஒரு துன்பம் ஏற்பட்டது (பிற்காலத்தில்) அவர் தமக்கு ஏற்பட்ட துன்பத்தை நினைவு கூர்ந்தார். அப்போதும் அவர் புதிதாக இன்னாலில் லாஹி... என்று கூறினால், அத்துன்பம் ஏற்பட்டு நீண்ட காலம் ஆகியிருந்தாலும் அத் துன்பம் ஏற்பட்ட (முதல்) நாளில் அவருக்கு வழங்கப்பட்டதைப் போன்ற அதே நன்மையை அவருக்கு அல்லாஹ் எழுதுகிறான்".**

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹுஸைன் பின் அலீ (ரளி) அவர்கள் (நூல் : இப்னுமாஜா 1589, முஅத்தா மாலிக் 497, தாரிமீ 84, 85, தப்ரானீ)

இஸ்லாம், மனிதன் சஞ்சலத்தில் இருக்கும் போது அதற்கு ஒத்தடமாக, ஆறுதலுக்கான அருள்மொழிகளைக் கூறுமாறு இயம்புகிறது. எனவே, நம்முடைய இக்கட்டான நேரத்தில் அந்த அருள்மொழிகளை தியானித்து, இறையருளைப் பெறுவோமாக!

## அல்லாஹ் வெறுக்கிறான்....

"கடின சுபாவமுடைய, அதிகம் சாப்பிடக்கூடிய, கடை வீதிகளில் கூச்சலிடக்கூடிய, இரவில் பிணத்தைப் போல் தூங்கக்கூடிய, பகலில் கழுதையைப் போல் உலக வேலைகளில் ஈடுபாடுடைய, உலகக் காரியங்களை நல்ல முறையில் அறிந்து, மறுமையின் காரியங்களில் அறிவு - ஞானமற்றிருக்கும் ஒவ்வொருவரையும் அல்லாஹ் வெறுக்கிறான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.
(நூல் : இப்னு ஹிப்பான்)

தருபவர் : அல்ஹாஜ் **கே.கே.சைய்யது சுலைமான்,** தென்காசி.

எல்லாம் வல்ல இறைவன் மதுவையும், சூதாட்டத்தையும் இரண்டையும் இணைத்து இரண்டு இடங்களில் குறிப்பிடு கின்றான்.

"[நபியே!] மதுபானத்தை யும், சூதாட்டத்தையும் பற்றி அவர்கள் உம்மிடம் கேட்கின்ற னர். நீர் கூறும் : 'அவ்விரண்டி லும் பெரும்பாவம் இருக்கிறது. மனிதர்களுக்கு [அவற்றில் சில] பலன்களுமுண்டு, ஆனால், அவ்விரண்டிலும் உள்ள பாவம் அவ்விரண்டிலும் உள்ள பலனைவிடப் பெரிது'".

- அல்குர்ஆன் 2:219

"நம்பிக்கை கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும், [வணக்கத்திற்காக நட்டு வைக்கப் பட்டிருக்கும்] சிலைகளும், குறி பார்க்கும் அம்புகளும் ஷைத் தானின் அருவருக்கத் தக்க செய லாகும். ஆகவே, இவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங் கள்! அத னால் நீங்கள் வெற்றியடைவீர் கள்" - அல்குர்ஆன் (5 : 90)

மதுவையும், சூதாட்டத்தை யும் இறைவன் இணைத்து இவ் விரு இடங்களில் கூறுவதிலி ருந்து அறிய வேண்டிய விஷயம் யாதெனில், மதுவைப் போன்று சூதாட்டமும் ஒரு போதைதான்.

சூதாட்டம் பெரும்பாவம். சூதாட்டத்தில் ஈடுபடுவது பெரும்பாவம் என்று அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

பெரும்பாவம் என்பதின் அளவுகோல் என்பது எந்தக் காரியம் செய்தால், அதற்கு தண்டனை கிடைக்குமோ அல்லது அதற்காக நரகம் குறித்து எச்சரிக்கை விடப்படுகிறதோ அல்லது இறைவனின் சாபமும் அல்லது அவனின் கோபமும் அதில் ஈடுபடுபவனுக்கு உண்டாகுமோ அத்தகைய காரியங்கள் யாவுமே பெரும்பாவங்கள் தான்.

இதன் அடிப்படையில் சூதாட்டமும் பெரும் பாவம்தான். சூதாட்டத்தின் மூலமாக அடுத் தவரின் பொருளை, அடுத்தவரின் உழைப்பை அநியாயமான முறை யில், ஹராமான வழியில் சுரண்டிச் சாப்பிடும் நிலை ஏற்படுகிறது.

ஹராமான முறையில் சம்பாதிப்பதும், ஹராமான சம்பாத்தியத்தில் சாப்பிடுவதும் குற்றம்தான். இத்தகைய செயலுக்கு நரகம்தான் தண்டனை என்று எச்சரிக்கை விடப்படுகிறது.

**'ஹராமான வருமானத்தில் வளர்ந்த ஒவ்வொரு உடலுக்கும் அதற்கு நரகம்தான் ஏற்றமானது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'.** அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் (நூல் : தப்ரானீ)

**'நிச்சயமாக அல்லாஹ் மதுவையும், சூதாட்டத்தையும், இசையையும் ஹராமாக்கி விட்டான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் (நூல் : அபூதாவூத்)

சூதாட்டத்தின் மூலமாக வரக்கூடிய வருமானம் அது ஹராமாகும். அது ஹலாலாக ஆகாது.

ஒரு மனிதன் ஒரு பொருளை அல்லது பணத்தைப் பெற வேண்டுமானால், ஒன்று அவன் வியர்வை சிந்தி உழைப்பின் மூலமாக அந்தப் பொருளையோ, அந்தப் பணத்தையோ பெற வேண்டும் அல்லது அன்பளிப்பின் வழியே பெற வேண்டும் அல்லது தர்மத்தின்வழியே பெறவேண்டும்.

இந்த மூன்று வழிகள் அல்லாத வகையில் அவன் ஒரு பொருளைப் பெறுவது ஒன்று லஞ்சமாக இருக்க வேண்டும் அல்லது ஊழலாக இருக்க வேண்டும் அல்லது வட்டியாக இருக்க வேண்டும் அல்லது அபகரித்ததாக இருக்க வேண்டும் அல்லது திருடியிருக்க வேண்டும் அல்லது மோசடி செய்திருக்க வேண்டும் அல்லது சூதாட்டத்தில் ஈடுபட்டு வரவு வைத்திருக்க வேண்டும். இந்த வழிகளில் வருமானத்தைத் தேடுவது ஹராமாகும்.

சூதாட்டம் என்பது பணத்தைப் பணயமாக வைத்து பந்தயம் கட்டி ஆடுவது. இதில் இருவர் ஈடுபடலாம் அல்லது பலரும் ஈடுபடலாம். அவர்களில் ஒருவர் வெற்றி பெறும்போது, அவரிடம் தோல்வியைத் தழுவியவர்களின் ஒட்டு மொத்த பணமும் வெற்றிபெற்ற ஒருவரிடம் குவிந்து விடுகிறது. இதில் வெற்றியாளர் எவ்வித உழைப்பும் இன்றி முதலே போடாமல் அடுத்தவரின் உழைப்பைச் சுரண்டி அடுத்தவரின் பொருளை அபகரித்து, சுருட்டி, பெரும் முதலாளியாக ஆகிவிடுகிறார்.

தோல்வியைத் தழுவியவர் பணம், சொத்துக்களையெல்லாம் இழந்து, துவண்டு போய், நடுத்தெருவுக்கு வந்து, வீதியில் பிச்சையெடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு விடுகிறார்.

வெற்றியாளர் கைமேல் பணமும், தோல்வியாளர் கை சேதமும் அடைகின்றனர். எனவே தான் இஸ்லாம் இத்தகைய விளையாட்டை, இத்தகைய போட்டியை, இத்தகைய பந்தயத்தை ஹராம் என்று கூறித் தடை செய்கிறது.

பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மானிர்ரஹீம்
எல்லாப் புகழும் இறைவனுக்கே!

# இஸ்லாமிய மணமகன், மணமகள் தகவல் மையம்

**35 வயதுக்கு மேற்பட்ட மணமகன், மணமகள் தகவல்களை பதிவிடவும், தகவல்களை தெரிந்து கொள்ளவும் இந்த சேவை துவங்கப்பட்டுள்ளது**

# 35plusnikkah

35 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் சுய விவரக் குறிப்புடன் **35plusnikkah@gmail.com** என்ற மெயிலில் பதிவு செய்யவும்.

மணமகன் – மணமகள் தரப்பினர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

உங்களின் மெயில் வந்தவுடன் உங்கள் பகுதி ஜமாஅத்தை விசாரித்தபின் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளப்படும்.

பதிவு செய்ய கட்டணம் இல்லை.

**தொடர்புக்கு :**

**35plusnikkah@gmail.com**

http://www.35plusnikkah.com

**8148463579**

தவறான தகவல்களுடனும், தவறான நோக்கத்துடனும் பதிவிட வேண்டாம். உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

போட்டியில் பங்கு பெறுவோரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு, அவர்களில் வெற்றி பெறுவோருக்கு மட்டும் அனைவரின் பணத்தையும் ஒருவரிடமே அள்ளிக் கொடுப்பது கூடாது. ஒருவர் பணத்தை இழப்பதும், மற்றொருவர் அவரின் பணத்தை சுருட்டுவதும், சுரண்டுவதும் தான் சூதாட்டம்! இது தடை செய்யப்பட்ட ஆட்டம்!

சூதாட்டம் என்பது பழங் காலத்திலிருந்து நவீன காலம் வரைக்கும் பல்வேறு பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது. காலத்திற்கேற்ற மாதிரி அந்த விளையாட்டு தம்மை தகவமைத்துக் கொண்டது.

அறியாமைக் காலத்து அரபிகள் 10 பேர் சேர்ந்து ஓர் ஒட்டகத்தில் பங்கு சேருவார்கள். அவர்களில் பத்து பேர்களை சீட்டில் எழுதி, சீட்டுக்குலுக்கிப் போட்டு அதிலிருந்து ஏழு நபர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். மீதி மூன்று நபர்களைக் கழித்து விடுவார்கள். பாதிக்கப்பட்ட மூன்று நபர்களின் பங்குகளையும், உழைப்புகளையும் மீதி ஏழு நபர்கள் தங்களுக்குள் பங்கு போட்டு சுருட்டிக் கொள்வார்கள். இஸ்லாம் வந்த பின் இத்தகைய சூதாட்டத்தை தடை செய்தது.

சூதாட்டத்தின் மறுவடிவம் தான் சீட்டாட்டம். பணத்தை வைத்து சீட்டாடிய இளைஞர்கள் மனைவியின் தாலியை வைத்து சீட்டாடி பேயாட்டம் போட்ட ஒரு காலம் உண்டு! அதன் உச்சகட்டமாக வீட்டை வைத்து, சொத்தை வைத்து அதன் எல்லைக்கே சென்று அனைத்து சொத்துக்களையும் சீட்டாடியே தோற்றுப் போய் நடுத்தெருவுக்கே வந்த குடும்பமும் உண்டு! விரக்தியில் உயிரை மாய்த்துக் கொண்ட குடும்பமும் உண்டு!

## லாட்டரி சீட்டு

தமிழகத்தில் 1968-ல் 'விழுந்தால் வீட்டுக்கு, விழாவிட்டால் நாட்டுக்கு' என்ற முழக்கத்தோடு தொடங்கப்பட்டது தான் லாட்டரி சீட்டு! இந்தச் சீட்டுக்கு, ஆரம்பத்தில் மக்கள் மத்தியில் வரவேற்பு இருந்தாலும் காலப் போக்கில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. லாட்டரி சீட்டுக்கு, அடிமையான அன்றாடங் காய்ச்சிகள் தங்களது அன்றாட வருமானத்தை லாட்டரிக்கே இழந்து, சோற்றுக்கேலாட்டரி அடித்தார்கள்.

தங்களின் அன்றாட சிறு சேமிப்பையும் லாட்டரி வாங்குவதற்கே செலவழித்தார்கள். கடன் வாங்கி லாட்டரி வாங்கி கடனையும் அடைக்க முடியாமல், இழந்து போன சொத்துக்களையும் மீட்க முடியாமல், அன்றாட தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாமல் இறுதியாக விரக்தியில் தற்கொலை செய்து கொண்டோர் பலர். கோடியில் ஒருவனுக்கு கோடி விழுவதற்கு, கோடிக்கணக்கானோர் தமது

குடியைக் கெடுத்து வழிகேட்டில் வீழ்ந்தோர் ஏராளம்! ஏராளம்! சுடுகாட்டில் எரிந்தோர் ஏராளம்! ஏராளம்! இடுகாட்டில் சமாதி யானோர் ஏராளம்! ஏராளம்! இறுதியில் 2003-ம் ஆண்டு லாட்டரிக்கு சமாதி கட்டப்பட்டு விட்டது. இது தமிழகத்தில் நடந்தது. ஆனாலும் அண்டை மாநிலமான கேரளாவில் லாட்டரி கொடிகட்டிப் பறக்கிறது. இன்னும் வேதனையான ஒரு விஷயம் என்னவெனில், அரேபிய வளை குடா நாடுகளான துபை, சார்ஜா, அபுதாபி போன்ற நாடுகளில் இஸ்லாமிய அரசாங்கமே ஹராமான லாட்டரிச் சீட்டை அனுமதித்து, அரசாங்கமே நடத்தி வருகிறது.

நபி (ஸல்) அவர்கள் பிறந்து, வாழ்ந்து, மறைந்து போன நிலப்பரப்பில், அல்குர்ஆனும், ஹதீஸும் தடைசெய்த, அல்லாஹ்வும், அல்லாஹ்வின் தூதரும் ஹராமாக்கிய லாட்டரி சூதாட்டத்தை ஆட்சியாளர்கள் ஏன் அனுமதிக்கிறார்கள்? அரபு நாடுகள் எங்கே செல்கின்றன? அரபு நாடுகளின் அரசாங்கம் என்ன வேலை செய்து கொண்டிருக்கின்றன?

அரபு நாடுகள் லாட்டரி சீட்டை அனுமதிப்பதன் மூலம் அவர்கள் ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயலை சந்தைப்படுத்துகிறார்கள். ஷைத்தானின் உடன்பிறந்த சகோதரர்களாகி, கைக்கோர்த்து, கடுஞ் செயலைக் கண்டும் காணாமல் கடந்து போய் விடுகின்றார்கள். மேலும் அவர்கள் ஷைத்தானின் செயலான சூதாட்டத்திற்கு அரசின் பிரதிநிதிகளாகவும், ஷைத்தானின் தூதர்களாகவும் செயல்படுகின்றார்கள்.

'வா! சூதாட்டம் விளையாடலாம்!' என்று தமது தோழரைப் பார்த்துக் கூறுவதே பாவம் என்று இஸ்லாம் பேசுகிறது. சூதாட்டத்தில் ஈடுபட்டால் அது எவ்வளவு பெரிய பாவமாக ஆகிவிடும்?

**"வா! சூது விளையாடுவோம்!" என்று ஒருவர் தம் நண்பரிடம் கூறினால், அவர் (அதற்குப்) பரிகாரமாக எதை யேனும்) தர்மம் செய்யட்டும்! என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (புகாரி : 4860)

ஓர் அரசோ அல்லது தனி நபரோ எப்படியும் சம்பாதிக்கலாம் என்றோ அல்லது வருமானத்தை எப்படியும் இரட்டிப்பாக ஆக்கலாம் என்றோ அல்லது ஹராமான வழியில் வருமானத்தைப் பெருக்கி அதை அரசுக் கருவூலத்தில் குவித்து, அதை வைத்து மக்களுக்கு நலத்திட்டங்களை செயல்படுத்தலாம் என்பதற்காக அரசோ, தனி நபரோ தமது

வருவாயை ஈட்டினால் அது முற்றிலும் தவறு!

ஹராமான வருவாயை வைத்து எந்த நல்லறத்தைச் செய்தாலும் அல்லது எந்தவித மான நலத்திட்டங்களைச் செய் தாலும் அது ஏற்றுக்கொள்ளப் படாது. அதற்கு நன்மையும் கிடைக்காது. பாவம்தான் பரிசாகக் கிடைக்கும்.

**'நிச்சயமாக இறைவன் தூய்மையானவன்; அவன் தூய்மையானதைத் தவிர வேறெதையும் ஏற்றுக் கொள்ள மாட்டான்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம்)

இறைவன் தூய்மையான, ஹலாலானவற்றைத்தான் ஏற்றுக் கொள்வான். ஹராமானவற்றை ஏற்றுக் கொள்ள மாட்டான்.

லாட்டரி சீட்டு போன்ற சூதாட்ட வழியில் வரும் வருமானத்தின் மூலமாக நிறை வேற்றப்படும் தான தர்மத்தை, ஜகாதை, ஹஜ்ஜை, நலத் திட்டத்தை, எந்தவிதமான நல்லறத்தையும் இறைவன் ஏற்றுக் கொள்ளமாட்டான்.

வருவாயைப் பெருக்குவதற் காக வழிதவறி முறைகேடாகச் சம்பாதிப்பது உலக அழிவுநாளின் அறிகுறியாகும். அந்த நாளில் அவன் வருமானம் ஹலாலா? ஹராமா? என்று கூட யோசிக்க மாட்டான்.

**'தாம் சம்பாதித்தது ஹலாலா? ஹராமா? என்று மனிதர்கள் பொருட்படுத்தாத ஒரு காலம் வரும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்'.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (புகாரி : 2083)

இந்த வகையில் தற்போது பிரபலமாக இருக்கும் ரம்மி போன்ற ஆன்லைன் சூதாட்டத்தையும் இஸ்லாம் தடை செய்கிறது.

ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபடும் இளைஞர்கள் பலர் பலகோடிகளை இழந்து, மன உளைச்சல் ஏற்பட்டு, கொத்து கொத்தாகத் தற்கொலை செய்வது சர்வ சாதாரணமாக ஆகிவிட்டது. எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தாலும் ஆன்லைன் சூதாட் டத்தில் வெற்றி பெற முடியாது. ஆன்லைன் சூதாட்டத்தை அரங்கேற்றுவது பெரும் பெரும் கார்ப்ரேட் நிறுவனமாகும். இதற்கு ஆதரவு தரும் விளம்பரதாரர்கள் பெரும் பெரும் நடிகர்களாக உள்ளனர்.

**மதுவும், சூதாட்டமும் தடை செய்யப்படுவதற்கு மிக முக்கிய காரணங்கள்:**

1. இவை ஷைத்தானின் அரு வருக்கத்தக்கசெயல்களாகும்.
2. மதுவைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும்

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

# பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் - 623 501.

போன் : 04567-224500, 228500
செல் : 9443255158

## ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

**OXFORD ENGLISH SCHOOL (CBSE)**
**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**
**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ ஹாஸ்டல் வசதி உண்டு.
- முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ்,** M.B.A.,M.Sc.,Ph.D.
Founder & Chairman.

தொடர்புக்கு : Email : oxfordescdm@gmail.com
Tel : +91-7373030412, 414, 421.
WhatsApp : +91-9566247805 https://oxfordenglishschool.info

ஷைத்தான் விரும்புவதெல்லாம் மக்களிடையே பகைமையைத் தான்.

3. மதுவைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் ஷைத்தான் விரும்புவதெல்லாம் மக்களிடையே வெறுப்பை உண்டு பண்ணத்தான்.

4. மதுவைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் ஷைத்தான் விரும்புவதெல்லாம் இறைவனை நினைப்பதிலிருந்து தடுத்து விடத்தான்.

5. மதுவைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் ஷைத்தான் விரும்புவதெல்லாம் தொழுகையிலிருந்து முஸ்லிம்களை தடுத்து விடத்தான்.

6. மதுவும், சூதாட்டமும் தவிர்ந்து கொள்ள வேண்டிய செயல்கள்.

7. மதுவும், சூதாட்டமும் விலகி இருக்க வேண்டிய தீய செயல்கள்.

8. சூதாட்டம் என்பது மனிதனை உழைப்பதை விட்டும், முயற்சி செய்வதை விட்டும், நெற்றி வியர்வை சிந்துவதை விட்டும் தடுத்து விடுகிறது. அதிர்ஷ்டத்தின் மூலமாக சம்பாதிப்பதையும், தற்செயலாக சம்பாதிப்பதையும் அது நம்ப வைத்து விடுகிறது.

9. சூதாட்டம் என்பது வீடுகளைத் தகர்த்துவிடும் கருவியாகவும், ஹராமான முறைகளில் செல்வங்களை இழக்கச் செய்யும் கருவியாகவும், பணக்காரக் குடும் பங்களை ஏழ்மை நிலைக்குத் தள்ளிவிடும் கருவியாகவும், கண்ணியமிக்க மனிதர்களை தாழ்மை நிலைக்குத் தள்ளிவிடும் கருவியாகவும் மாறிவிடுகிறது.

10. சூதாட்டம் என்பது ஒருவர் மற்றவரின் பொருளை வீணான முறையில் சாப்பிடுவதைக் கொண்டும், அவர்களின் பொருளை உரிமையின்றி அடைவதைக் கொண்டும் இருவருக்கிடையே கோபத்தையும், குரோதத்தையும் ஏற்படுத்தி விடுகிறது.

11. சூதாட்டம் என்பது அதை விளையாடக் கூடியவர்களிடையே கெட்ட சிந்தனைகளையும், அருவருக்கத்தக்க நடவடிக்கைகளையும் ஏற்படுத்தி விடுகிறது.

12. சூதாட்டம் என்பது அது ஒரு பாவமான பொழுது போக்கு. நேரத்தையும், முயற்சியையும் பாழ்படுத்தி வீணாக்கும் ஒரு பொழுதுபோக்கு. அது சோம்பேறித் தனத்தை மீட்டி வரும் மோசமான பொழுது போக்கு. அது சமுதாயத்தை நற்செயல் புரிவதை விட்டும், நல்ல முடிவு கிடைப்பதை விட்டும் சீர்குலைக்கும் வழி கேடான பொழுதுபோக்கு.

13. சூதாட்டம் என்பது சூதாடுபவனை சமூகக் குற்றச் செயல்களில் ஈடுபடுவதைத் தூண்டி

விடுகிறது. ஏனெனில், சூதாட்டம் சூதாட்டத்தில் திவாலாகிப் போன ஒரு பிரிவினரை இழந்துபோன பொருளாதாரத்தை ஈட்ட ஏதேனும் மாற்றுவழியில் அல்லது குறுக்கு வழியில் பணத்தை சம்பாதிக்கவும், திருட்டு வழியில் அல்லது கற்பழிப்பு வழியில் அல்லது லஞ்சம் பெறுவதில் அல்லது பிறர் பொருளை அபகரிக்கும் வழியிலும் அவர்களைத் தள்ளி அவர்களை சமூகக் குற்ற வாளியாக மாற்றிவிடுகிறது.

14. சூதாட்டம் என்பது அதில் தோல்வி ஏற்படும் போது அவனுக்குக் கவலையை ஏற்படுத்தி விடுகிறது. அவனுக்கு விதவிதமான நோயை உண்டு பண்ணிவிடுகிறது. அவனது நரம்புகளை நொறுக்கும் ஒரு செயலாக ஆகி விடுகிறது. அது வெறுப்பை விதைக்கிறது. அது பெரும்பாலும் குற்றம் புரிவதை தூண்டிக் கொண்டேயிருக்கிறது.

சூதாட்டம் என்பது தற்கொலையை நாடும் படி தூண்டுகிறது. பைத்தியத்தை ஏற்படுத்தி விடுகிறது. குணமாகாத விதவிதமான புதுவிதமான நோய்களை ஏற்படுத்தி விடுகிறது.

15. சூதாட்டம் என்பது மனக் கவலையை ஏற்படுத்தி, குடிப் பழக்கம், போதை மாத்திரைகளை உட்கொள்ளும் பழக்கம், போதை ஊசிகளைப் பயன்படுத்தும் பழக்கம் போன்ற கேடு கெட்ட பழக்க வழக்கங்களுக்கு சூதாடுபவனை அடிமையாக்கி விடுகிறது.

இதுபோன்ற பழக்க வழக்கங்களின் காரணமாகத்தான் இஸ்லாம் மதுவையும், சூதாட்டத்தையும் தடை செய்துள்ளது.

சூதாட்டம் என்பது ஒரு சமூகக் குற்றம். சூதாட்டம் என்பது ஒரு பாவச்செயல், சூதாட்டம் என்பது ஒரு மன்னிக்க முடியாத மாபாதகச் செயல், சூதாட்டம் என்பது ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல், சூதாட்டம் என்பது இஸ்லாமியப் பார்வையில் ஒரு பெரும்பாவச் செயல். சூதாட்டம் என்பது ஷைத்தானின் வெறியாட்டம். அது எந்த விதத்தில் வந்தாலும் அது தடை செய்யப்பட வேண்டும்.

## இறைநம்பிக்கையும் அகம்பாவமும்

"தமது உள்ளத்தில் கடுகு மணியளவு இறைநம்பிக்கையுள்ள எவரும் நரகத்தில் நுழைய மாட்டார். தமது உள்ளத்தில் கடுகு மணியளவு அகம்பாவமுள்ள எவரும் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள்

(நூல் : ஸஹீஹ் முஸ்லிம்)

# வரலாற்றில் ஓர் ஏடு

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"நாம் ஸஜ்தாவில் இருக்கும்போது நீங்கள் தொழ வந்தால், நீங்களும் ஸஜ்தாவில் சேர்ந்து கொள்ளுங்கள். (எனினும்) அதைக் கணக்கில் சேர்க்காதீர்கள். யார் ருகூஉவை (இமாமுடன்) பெற்றுக் கொண்டாரோ (ருகூஉவில் சேர்ந்து விட்டாரோ) அவர் அந்த ரக்அத்தைப் பெற்றுக் கொண்டவர் ஆவார்."

(சுனன் அபூதாவூத் - 759)

"(நீண்ட கிராஅத் ஓதி) தொழுகையை நீளமாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நான் தொழ நிற்கிறேன். அப்போது குழந்தையின் அழுகுரலைக் கேட்டு அதன் தாய்க்குச் சிரமத்தை ஏற்படுத்த விரும்பாமல் தொழுகையை (கிராஅத்தை) சுருக்கிக் கொள்கிறேன்" என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

(சுனன் அபூதாவூத் - 670)

வரலாற்றில் ஒரு நாள் :

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் பள்ளியின் நுழைவாயிலுக்கு அருகே பட்டு கலந்த துணிகள் விற்கப்படுவதைக் கண்டு, அவற்றை வாங்கி, "வெள்ளிக்கிழமையன்றும், தூதுக்குழுவினர் வரும் போதும் தாங்கள் அணிந்து கொள்ள வேண்டும்" என்று நபி (ஸல்) அவர்களிடம் சொன்னார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் மறுமையில் எந்த நற்பேறும் இல்லாதவன்தான் (உலகில்) இதனை அணிவான்" என்று சொன்னார்கள்.

சில நாட்களுக்குப்பின் தமக்கு அன்பளிப்பாக வந்த இதே போன்ற பட்டாடைகளை ஹள்ரத் உமர் (ரளி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் கொடுத்தபோது, மேற்கண்ட நிகழ்வை ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் நினைவுபடுத்தினார்கள். "நீங்கள் அணிய நான் கொடுக்கவில்லை" என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னபோது, மக்காவிலிருந்த (இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாத) இணை வைப்பாளரான தமது சகோதரருக்கு ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் கொடுத்து விட்டார்கள்.

ஆதாரம் : சுனன் அபூதாவூத், ஹதீஸ் எண் : 909

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

## முதல் மேயர்

இங்கிலாந்து நாட்டின் உலகப் புகழ் பெற்ற ஆக்ஸ்போர்டு மாநகர மேயராகத் தேர்வு செய்யப்பட்டு சரித்திரச் சாதனை படைத்துள்ளார் 34 வயது லுப்னா அர்ஷாத்.

கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு 15 ஆண்டுகள் கணினி தொழில் நுட்பப் பொறியாளராகப் பணியாற்றி வந்த லுப்னா அர்ஷாத், 2018ஆம் ஆண்டு நடந்த ஆக்ஸ்போர்டு மாநகரத் தேர்தலில் கவ்லி மார்ஷ் வார்டு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக மதச் சுதந்திரம், இளைஞர் நலன், வறுமை ஒழிப்பு போன்ற பிரச்சனைகளுக்குத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்த லுப்னா அர்ஷாதின் செயல்பாடுகளுக்குப் பரிசாக மேயர் பொறுப்பை வழங்கி ஆக்ஸ்போர்டு மாநகரம் பெருமை கொள்கிறது.

மேயருக்கான பாரம்பரிய உடையுடன் ஹிஜாப் அணிந்து பொறுப்பேற்றப்பின் தனது பதவிக் காலத்தில் மனிதநேயம் சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்க விரும்புவதாக அறிவித்த லுப்னா அர்ஷாத் அதற்காக HUMANITY FIRST எனும் பரப்புரையையும் தொடங்கியுள்ளார்.

ஆக்ஸ்போர்டு மாநகரின் முதல் இளம் மேயர், ஐரோப்பியர் அல்லாத முதல் மேயர், முஸ்லிம் சமூகத்தின் முதல் பெண் மேயர் எனும் பல்வேறு சிறப்புக்குரிய லுப்னா அர்ஷாத் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவராவார். மகாத்மா காந்தியின் உற்ற தோழர் கஷ்மீரின் அஹமதுத்தீன் சவுத்ரியின் கொள்ளுப்பேத்திதான் லுப்னா என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மோடியின் கல்வித் தகுதி விவகாரம் : கெஜ்ரிவால் மறு ஆய்வு மனு

பிரதமர் நரேந்திர மோடி தனது தேர்தல் விண்ணப்பப் படிவங்களில் கல்வித் தகுதியில் தான் முதுகலைப் பட்டம் பெற்றதாகக் குறிப்பிட்டிருந்தார். இது பல்வேறு தளங்களில் விவாதங்களை ஏற்படுத்தியது. "மோடியுடன் படித்தவர்கள் யார்?" "அவரின் ஆசிரியர்கள் யார்?" என்று பலமுறை கேள்விகள் எழுப்பப்பட்ட போதும் பிரதமர் மோடி அதற்கு பதிலளிக்கவில்லை. தனது முதுகலைப் பட்டத்தையும் அவர் இதுவரை வெளியிடவில்லை.

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், பிரதமர் நரேந்திர மோடியின் முதுகலைப் பட்டத்தின் நகலை வழங்குமாறு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கை விடுத்திருந்தார். இத்தகவல்களை வழங்கு

மாறு தகவல் ஆணையர் உத்தர விட்டபோது குஜராத் பல்கலைக் கழகம் நீதிமன்றத்தை நாடியது. வழக்கை விசாரித்த குஜராத் உயர் நீதிமன்றம் இது தொடர்பான விபரங்கள் அனைத்தும் குஜராத் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் இருப்பதாகக் கூறியது. அத்துடன் இந்த வழக்கை தொடுத்ததற்காக அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு 25 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது.

இத்தீர்ப்பை மறு ஆய்வு செய்யுமாறு குஜராத் உயர் நீதிமன்றத்தில் கெஜ்ரிவால் மேல்முறையீட்டு மனுவை தாக் கல் செய்துள்ளார். குஜராத் பல் கலைக்கழகம் சார்பாக வழக்கில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேதா கூறியது போல் மோடியின் முதுகலைப் பட்டம் குறித்த விபரங்கள் குஜராத் பல் கலைக்கழகத்தின் இணைய தளத் தில் இல்லாத காரணத்தினால் வழக்கை மேல்முறையீடு செய் துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். தன் மீது விதிக்கப்பட்ட அபராதத் தையும் ரத்து செய்யுமாறு அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## கொக்கு என்ன செய்யும்? பாவம்!

உத்தரபிரதேச மாநிலம் அமேதியைச் சேர்ந்த விவசாயி முஹம்மது ஆரிஃப், தனது மனிதா பிமான செயல்பாட்டுக்காகக் கொடுக்கும் விலை மிக மிக அதிகம். தனது நிலத்தில் காய மடைந்து விழுந்து கிடந்த பறவை ஒன்றைக் காப்பாற்றிய தற்காக அவர் நீதிமன்ற வழக்கை எதிர்கொள்ளும் நிலையை அடைந்ததற்குக் காரணம் : அதிகாரவர்க்கத்தின் அசட்டுத்தன மான அணுகுமுறை என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடிய வில்லை.

கடந்தாண்டு பிப்ரவரி மாதம் ஒருநாள் வழக்கம்போல தனது நிலத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார் விவசாயி முஹம்மது ஆரிஃப். வரப்பு வழி யாக நடந்து கொண்டிருந்த ஆரிஃபின் கண்ணில் பட்டது காலில் காயத்துடன் பறக்க முடியாமல் விழுந்து கிடந்த சாரஸ் கொக்கு.

அந்தப் பறவையை தனது வீட்டுக்கு எடுத்துச் சென்றார் ஆரிஃப். கடுகு எண்ணையில் மஞ்சளைக் கலந்து காயம்பட்ட பறவையின் காலில் தடவிக் கட்டுப் போட்டார். பறவைக்கு தண்ணீர் கொடுத்துக் காப்பாற்றினார்.

தனது வீட்டிலேயே வைத்து அந்த சாரஸ் கொக்கைப் பாது காத்தார் விவசாயி முஹம்மது ஆரிஃப். அதற்கு உணவளித்து, காயத்தையும் குணப்படுத்திப் புத்துயிர் அளித்தார். சில வாரங் கள் கழிந்தன. அந்தப் பறவை யைச் சுதந்திரமாக உலவ விட்டி ருந்தும்கூட அது பறந்து போகத் தயாராக இல்லை. அவர் எங்கே போனாலும், அவரது தோளில் அமர்ந்தபடி அதுவும் கூடவே

செல்லும் என்கிற அளவுக்கு அவருடன் ஒட்டிக் கொண்டுவிட்டது.

ஆரிஃபும், சாரஸ் கொக்கும் இணைபிரியாமல் இருக்கும் விஷயம் சமூக ஊடகங்களில் வெளிவரத் தொடங்கின. ஆரிஃப் அந்த சாரஸ் கொக்கைக் காப்பாற்றியதும், அந்த கொக்கு அவரது குடும்பத்தில் ஓர் உறுப்பினராக மாறியிருப்பதும் உத்தர பிரதேசத்தைத்தாண்டி, தேசிய அளவில் கவனத்தை ஈர்த்த போது, அதுவே ஆரிஃப் - சாரஸ் கொக்கு உறவுக்கு வினையாக முடிந்துவிட்டது.

அழிவின் விளிம்பிலிருக்கும் பறவை இனங்களின் பட்டியலில் சாரஸ் கொக்கும் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், உத்தர பிரதேச மாநிலத்தின் மாநிலப் பறவையாக அறிவிக்கப்பட்டிருப்பதும் சாரஸ் கொக்குத்தான். அதனால் விஷயம் கேள்விப்பட்ட வனத் துறை அதிகாரிகள் அமேதிக்கு விரைந்தனர்.

ஆரிஃபிடமிருந்து அந்த சாரஸ் கொக்கைக் கைப்பற்றினார்கள். அதோடு நின்றிருந்தால் கூட பரவாயில்லை. வன விலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஆரிஃப் மீது வழக்குத் தொடுத்து, அவரை அலைய விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

விவசாயி ஆரிஃபிடமிருந்து கைப்பற்றிய சாரஸ் கொக்கை என்ன செய்வது என்கிற கேள்வி எழுந்தது. அதை ரேபரேலியில் உள்ள சமஸ்பூர் பறவைகள் சரணாலயத்தில் கொண்டு போய் விட்டனர். ஆனால், அந்தப் பறவை ஏனைய பறவைகளுடன் மரங்களில் போய் தங்கத் தயாராக இல்லை. ஒரு வாரம் கழித்துப் பார்த்தால், நாய்களால் துரத்தப்பட்டு, பயந்து நடுங்கியபடி அந்த சாரஸ் கொக்கு ஒரு மரக்கிளையில் துவண்டுபோய் அமர்ந்திருப்பது தெரிந்தது.

இப்போது அதை கான்பூர் உயிரியல் பூங்காவில் ஒரு கூண்டில் அடைத்திருக்கிறார்கள்.

கான்பூர் உயிரியல் பூங்காவில் சாரஸ் கொக்கைப் பார்க்கச் சென்றார் ஆரிஃப். அவரைப் பார்த்ததுதான் தாமதம் கூண்டுக்குள் துள்ளிக் குதிக்கத் தொடங்கிவிட்டது அந்தப் பறவை. ஆரிஃப் தன்னை கூண்டிலிருந்து விடுவித்து அழைத்துச் செல்வார் என்று நம்பிய அந்தக் கொக்குக்கு ஏமாற்றம். இப்போது சரியாக உணவு சாப்பிடுவதுகூட இல்லை. கான்பூர் உயிரியல் பூங்காவில் கூண்டில் அடைப்பதற்கு பதிலாக அதை விவசாயி ஆரிஃபிடமே ஒப்படைத்திருக்கலாமே என்கிற கேள்விக்கு அவர்களிடம் எந்த வித பதிலுமில்லை. வன விலங்கு பாதுகாப்புச் சட்டப்படி அழிவின் விளிம்பிலிருக்கும் பறவை இனத்தைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தனியாரிடம் விடக் கூடாது.

பறவையின் ஆய்வாளர்கள் இது குறித்துப் பல செய்திகளைக் கூறுகிறார்கள். மனிதர்களுக்கும்,

பறவைகள் - விலங்கினங்களுக்கும் இடையே நெருக்கம் ஏற்படுவது புதிதல்ல. மிருகங்களுக்கு இடையேகூட அதிசயிக்கத்தக்க விதத்தில் நட்பு ஏற்படுவதுண்டு. வன விலங்குகளில் சில மனிதர்களுடன் பாசத்தால் தங்கிவிடுவதும், அவர்களையே தங்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர்களாகக் கருதிவிடுவதும் புதிதல்ல.

கிரேக்கத்தின் ஆண்ட்ரோகிலிசும், சிங்கமும் அதற்கு ஓர் உதாரணம். ஹிந்து புராணங்கள் அதைப் பூர்வ ஜென்மத் தொடர்பு என்று வர்ணிக்கின்றன.

வனவிலங்குகளே அப்படியென்றால், பறவைகளும், நாய், பூனை, மாடு, ஆடு போன்ற வளர்ப்புப் பிராணிகளும் மனிதர்களிடம் நன்றி பாராட்டுவதும், அடைக்கலமாவதும் ஆச்சரியம் ஏற்படுத்தவில்லை.

விவசாயி ஆரிஃபிடமிருந்து, அந்த சாரஸ் கொக்கை பலவந்தமாக எடுத்துச் செல்வதற்கு முன்னர், வன விலங்கு அதிகாரிகள் இது குறித்து சிந்தித்திருக்கவேண்டும். மனிதர்களின் பிணைப்பில் இணைந்துவிட்ட பறவையோ, மிருகமோ அதனுடைய இனத்தைச் சேர்ந்த ஏனைய பறவைகளுடன் இணைந்து வாழ முடியாது என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவே இல்லை.

விவசாயி ஆரிஃபின் அன்பிலும், ஆதரவிலும் கிடைக்காத பாதுகாப்பை நிச்சயமாக கான்பூர் உயிரியல் பூங்கா கூண்டில் அடைக்கப்பட்டிருக்கும் சாரஸ் கொக்குக்கு வனத்துறை அதிகாரிகள் தந்துவிட முடியாது. கூண்டுக்குள் அடைத்து வைப்பது அந்தப் பறவைக்கு சுதந்திரம் வழங்குவதாகாது. சாரஸ் கொக்கை கூண்டிலிருந்து விடுவித்து, விவசாயி முஹம்மது ஆரிஃபிடம் ஒப்படைப்பது மட்டுமல்லாமல் அவர் மீது தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கையும் திரும்பப் பெற வேண்டும்.

## பெங்களூர் மருத்துவக் கல்லூரி முதல்வராக முஸ்லிம்!

கர்நாடகா மாநிலம் பெங்களூர் மருத்துவக் கல்லூரியின் முதல்வராக Dr. அசிமா பானு நியமிக்கப்பட்டுள்ளார்.

பெங்களூர் மருத்துவக் கல்லூரி வரலாற்றின் முதல் முஸ்லிம் முதல்வரும் இவரே.

எந்த மாநிலத்தில் பாரதீய ஜனதா, ஹிஜாப் சர்ச்சையை கிளப்பியதோ, அதே மாநிலத்தில் ஹிஜாப் அணிந்த முஸ்லிம் பெண்களைப் பெருமைப்படுத்துகிறது காங்கிரஸ்!

## விண்வெளியில் முதல் முஸ்லிம் பெண்மணி!

உலகம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. அனைத்துத் துறைகளிலும் தங்கள் திறமையை வெளிப்படுத்தி உலக அளவில் முஸ்லிம் பெண்கள் சாதனை படைத்து வருகின்றனர். ஒரு

முஸ்லிம் பெண்மணிகூட விண் வெளியில் இதுவரை கால் வைக்க வில்லை என்றிருந்த குறையை ரையானத் போக்கிவிட்டார்.

2023 மே மாதம் 21ஆம் தேதி அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாகாணத்தில் கென்னடி ஆய்வு மையத்திலிருந்து Space X Falicon 9 என்ற ராக்கெட் மூலம் விண்வெளிப் பயணம் மேற் கொண்ட நான்கு பேரில் சவூதி அரேபியாவின் ரையானத் பர்னாவியும் ஒருவர்.

அரேபியா அரசின் அறிவியல் துறை மூலம் தேர்வு செய்யப்பட்டு ஆறு மாத கடுமையான பயிற்சிக்குப் பின்னர் விண்வெளிக்குப் பயண மாகியுள்ள 33 வயதான ரையானத், பயோ மெடிக்கல் அறிவியல் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். கடந்த 9 ஆண்டுகளாக மார்பகப் புற்றுநோய் குறித்தும், ஸ்டெம் செல் சிகிச்சைப் பிரிவி லும் ஆராய்ச்சி செய்து மருத்துவத் துறைக்கு அளப்பரிய பங்களிப்புச் செய்தவர்.

இவருடன் சவூதி அரேபியா வைச் சேர்ந்த அலீ அல்கர்னி எனும் விமானியும் விண்வெளிப் பயணம் மேற்கொண்டுள்ளார். இருவரும் 15 நாட்கள் சர்வதேச விண்வெளி மையத்தில் தங்கியி ருந்து சவூதி அரேபியா அரசின் விஷன் 2030 திட்டத்தின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான சாத்தியங்களைக் கண்டறிவது இவர்களுடைய பயணத்தின் நோக்கமாகும்.

அத்துடன் விண்வெளிக்குப் பயணம் சென்ற முதல் முஸ்லிம் பெண்மணி எனும் சாதனைப் பட்டியலிலும் இடம் பிடித்துள்ளார் ரையானத்.

## ஜப்பானில் தொடர்ந்து சரிந்து வரும் மகப்பேறு விகிதம்!

ஜப்பானில் தொடர்ந்து ஏழா வது ஆண்டாக மகப்பேறு விகிதம் குறைந்துவருகின்றது. 2022ஆம் ஆண்டில் இந்த விகிதம் மிகவும் குறைந்துள்ளது என ஜப்பானின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள் ளது. நாட்டின் மக்கள் தொகை யில் ஏற்பட்டு வரும் இந்த வீழ்ச்சி மற்றும் பெருகிவரும் முதியோர் எண்ணிக்கை காரணமாக நாடு பேரபாயத்தின் பிடியில் சிக்கி வரு கின்றது என்றும் தெரிவித்துள் ளது சுகாதார அமைச்சகம்.

ஒரு ஜப்பானியப் பெண் தன் வாழ்நாளில் பெற்றுக் கொள்ளும் குழந்தையின் விகிதம் 2022ல் 12,565ஆகப் பதிவாகியுள்ளது. 2005ஆம் ஆண்டில் இது 12,601 என்ற அளவில் பதிவாகி இருந்தது. ஜப்பானில் நிலையான மக்கள் தொகை நிலவ வேண்டு மெனில், ஒரு பெண் 2.07 என்ற விகிதத்தில் குழந்தைகளைப் பெற வேண்டும். ஆனால் நிலைமை தலைகீழாக உள்ளது.

இந்த மோசமான நிலையை மாற்றுவதற்காக வேண்டி ஜப்பானின் பிரதமர் ப்யூமியோ கிஷிடா தனது அரசின் முன்

னுரிமையை இவ்விவகாரத்தில் செலுத்தி போர்க்கால நடவடிக்கை களை மேற்கொள்ளத் திட்ட மிட்டுள்ளதாகக் கூறுகின்றார். ஏற்கனவே ஜப்பான் கடுமையான கடன் நெருக்கடியில் சிக்கித் தவித்து வந்த போதிலும் 3.5 ட்ரில்லியன் யென்களை (ஜப்பானியப் பணம்) அதாவது 25 பில்லியன் டாலர்களை குழந்தைகள் நலம் மற்றும் பெற்றோர்களுக்குத் தேவை யானவற்றை செய்து தருவதற்கு அடுத்த ஓர் ஆண்டில் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளார் ஜப்பானியப் பிரதமர்.

ஜப்பானில் உள்ள இளைஞர் களின் எண்ணிக்கை 2030ஆம் ஆண்டில் இருந்து வேகமாக சரியத் தொடங்கிவிடும். இது தான் நமக்கான கடைசி வாய்ப்பு. அதற் குள்ளாக நாம் நிலைமையைச் சீராக்கிட வேண்டும் என்றார் பிரதமர்.

ஜப்பானில் கடந்தாண்டு புதிதாகப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 5 சதவிகிதம் குறைந்து 7,70,747 ஆகப் பதிவாகி யுள்ளது. அதே வேளையில் இறப் பெய்துபவர்களின் எண்ணிக்கை 9 சதவிகிதம் அதிகரித்து 1.57 மில்லியனாக பதிவாகியுள்ளது. கடந்தாண்டு 47 ஆயிரத்திற்கும் அதிகமான இறப்புகள் பெருந் தொற்று காரணமாக ஏற்பட்டது என்கின்றன புள்ளி விபரங்கள்.

## பெங்களூரில் நடைபெற்ற தேசிய அளவிலான கிராஅத் போட்டியில் காயல்பட்டிணம் அல்ஹாஃபிழ் எஸ்.எம்.ஹெச்.முஹம்மது ஃபரீதுத்தீன் முதலிடம்!

கூத்தாநல்லூரை பூர்வீக மாகக் கொண்டவரும் காயல் பட்டிணம் முஸ்லிம் மாணவர் பேரவை நகர துணைச் செயலாள ரும், காயல்பட்டிணம் ஜாவியா அரபிக் கல்லூரி முதல்வர் மவ்லவீ அல்ஹாஃபிழ் எஸ்.கே.எம். காஜா முஹ்யித்தீன் அவர்களின் மூத்த புதல்வருமான எஸ்.எம்.ஹெச். முஹம்மது ஃபரீதுத்தீன் பெங்களூ ரில் நடைபெற்ற தேசிய அளவி லான கிராஅத் போட்டியில் முத லிடம் பெற்றார். இதற்கு முன் தமிழக அளவில் நடைபெற்ற கிராஅத் போட்டியில் முதல் பரிசை வென்ற தைத் தொடர்ந்து தேசிய அளவில் முதல் பரிசை வென்றி ருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றி பெற்ற எஸ்.எம்.ஹெச். முஹம்மது ஃபரீதுத்தீனை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம்.முஹம்மது அபூபக்கர் மற்றும் தூத்துக்குடி மாவட்ட, காயல்பட்டிணம் நகர நிர்வாகி கள் வாழ்த்து தெரிவித்தனர்.

தொகுப்பு : **பாவா.**
**ஜே.அப்துஸ் ஸலாம்**

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்
**94420 56547**

"நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி
மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்."

- நபி (ஸல்) அவர்கள்
(நூல் : திர்மிதி)

என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...




சீருக்கும்... சிறப்புக்கும்...

சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

கும்பகோணம் - திருவாரூர்

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் - 612001.
T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in
T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com





Customer Care: 9962 99 4444 | Missed Call: 9543006000

மாவட்ட வாரியான உதவிக்கு : • சென்னை : 7823997001, 7823997004, • பாண்டிச்சேரி - விழுப்புரம் : 7823997003, • வேலூர் - திருப்பத்தூர் : 7823997013 • மதுரை திண்டுக்கல் - காரைக்குடி : 7823997002 • சேலம் - ஓசூர் : 7823997005 • கோவை : 7823997007 • ஈரோடு - திருப்பூர் : 7823997006 • திருச்சி - தஞ்சாவூர் - புதுக்கோட்டை : 7823997015 • திருநெல்வேலி - நாகர்கோவில் : 7823997010

"இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை"

# AL HUSSAM

*Travel & Tours India (p) Ltd*

Specialist in: Haj & Umrah

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் - 2:196



**Platinum Package**
(31 - 33 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
(18 - 21 DAYS)
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.

## இந்தியா முழுவதிலும்
# குர்ஆனின் குரலை
## விற்பனை செய்ய
# ஏஜண்டுகள் தேவை!

குறைந்த பட்சம் 10 இதழ்களை விற்பனை செய்பவரை இன்ஷா அல்லாஹ் குர்ஆனின் குரல் ஏஜண்டாக பதிவு செய்யப்படும்.

**தபால் செலவு இலவசம்!**

## 25% கமிஷன் வழங்கப்படும்.

சேவை மனப்பான்மை கொண்டவர்களே.....!
வல்ல அல்லாஹ்வின் அருளைப் பெற்றிடுங்கள்!
இன்றே குர்ஆனின் குரலை பரப்பும் பணியில் ஈடுபட்டு
இம்மை மறுமையின் வெற்றியை சுவைத்திடுங்கள்!

**உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

# குர்ஆனின் குரல்

4/25, எழில் நகர் (முதல் மாடி), மேலமடை,
மதுரை – 625 020.
9442056547, 9486729192

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
**செ.திவான் M.A.,M.Phil.,**

## டெல்லியில் முஸ்லிம் அரசுகள்

டெல்லி சுல்தான்களின் ஆட்சி கி.பி.1206இல் துவங்கி, 1526 வரை நீடித்தது.

320 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த டெல்லி சுல்தான்களை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

| | |
|---|---|
| முஹம்மது கஜினி | கி.பி. 971 - 1030 |
| முஹம்மது கோரி | கி.பி. 1173 - 1206 |

ஆட்சியைத் தொடர்ந்து டெல்லியில் சுல்தான்கள், முந்திய துருக்கிய அரசர்கள் ஆட்சி புரிந்தனர்.

### முந்திய துருக்கிய அரசர்கள் (அடிமை வம்சம்)

| | |
|---|---|
| குத்புதீன் ஐபக் | கி.பி. 1206 - 1210 |
| ஆரம்ஷா | கி.பி. 1210 - 1211 |
| இல்துமிஷ் | கி.பி. 1211 - 1236 |
| ரஸியா சுல்தானா | கி.பி. 1236 - 1240 |
| பஹ்ரம்ஷா | கி.பி. 1240 - 1242 |
| மசூத் | கி.பி. 1242 - 1246 |
| நசிருத்தீன் முஹம்மது | கி.பி. 1246 - 1266 |
| கியாசுதீன் பால்பன் | கி.பி. 1266 - 1286 |
| கைகோபாத் | கி.பி. 1286 - 1290 |

### கில்ஜி மன்னர்கள்

| | |
|---|---|
| ஜலாலுதீன் கில்ஜி | கி.பி. 1290 - 1296 |
| அலாவுதீன் கில்ஜி | கி.பி. 1296 - 1316 |
| முபாரக்ஷா | கி.பி. 1316 - 1320 |

### துக்ளக் மன்னர்கள்

| | |
|---|---|
| கியாசுதீன் துக்ளக் | கி.பி. 1320 - 1325 |
| முஹம்மது பின் துக்ளக் | கி.பி. 1325 - 1351 |

| | |
|---|---|
| பிரோஷ் ஷா | கி.பி. 1351 - 1386 |
| துக்ளக் ஷா | கி.பி. 1386 - 1389 |
| அபூபக்கர் | கி.பி. 1389 - 1390 |
| முஹம்மது II | கி.பி. 1390 - 1394 |
| முஹம்மது ஷா | கி.பி. 1394 - 1412 |

**சையியிது மன்னர்கள்**

| | |
|---|---|
| கிசர்கான் | கி.பி. 1414 - 1421 |
| முபாரக் ஷா | கி.பி. 1421 - 1434 |
| முஹம்மது ஷா | கி.பி. 1434 - 1445 |
| அலாவுதீன் ஆலம்ஷா | கி.பி. 1445 - 1450 |

**லோடி மன்னர்கள்**

| | |
|---|---|
| பஹ்லோல் லோடி | கி.பி. 1451 - 1489 |
| சிக்கந்தர் லோடி | கி.பி. 1489 - 1517 |
| இப்ராஹிம் லோடி | கி.பி. 1517 - 1526 |

இதற்குப்பிறகு முகலாயப் பேரரசு ஏற்பட்டது. அதன் விபரம் இதோ :

**முகலாய மன்னர்கள்**

| | |
|---|---|
| பாபர் | கி.பி. 1526 - 1530 |
| ஹிமாயூன் | கி.பி. 1530 - 1540 |
| ஷெர்ஷா (சூர்வம்சம்) | கி.பி. 1541 - 1554 |
| ஹிமாயூன் | கி.பி. 1555 - 1556 |
| அக்பர் | கி.பி. 1556 - 1605 |
| ஜஹாங்கீர் | கி.பி. 1605 - 1627 |
| ஷாஜஹான் | கி.பி. 1627 - 1656 |
| அவுரங்கஜேப் | கி.பி. 1658 - 1707 |

**பிரித்தாளும் சூழ்ச்சியும் பிரித்தானிய ஆட்சியும்**

| | |
|---|---|
| பஹதூர் ஷாஹ் | கி.பி. 1707 - 1711 |
| ஜஹான்தார் ஷாஹ் | கி.பி. 1712 - 1713 |
| ஃபாரூக் ஸியா | கி.பி. 1713 - 1719 |
| ரஃபீயுத் தரஜாத் | கி.பி. 1719 |

# அல்லாஹ்வுக்காக ஓர் வேண்டுகோள்!

அல்லாஹ்வின் பேரருளால் புதுக்கோட்டை காமராஜபுரம் **“மஸ்ஜிதே முஹம்மது இப்ராஹீம்”** ஜும்ஆ பள்ளிவாசல் கட்டிட விரிவாக்க பணிகள் மிக வேகமாக நடந்து வருகின்றன. தங்களின் நல்ல பணங்காசுகளும் அந்தக் கட்டிடத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில் இந்த வேண்டுகோள் சமர்ப்பிக்கப்படுகிறது.
**வாருங்கள்! விரைந்து உங்களின் உதவிகளைத் தாருங்கள்.**
அல்லாஹ் தனது உயர்ந்த சொர்க்கத்தை உங்களுக்கு தருவதற்கு காத்திருக்கிறான்.

இப்படிக்கு : **நிர்வாகிகள், “மஸ்ஜித் முஹம்மது இப்ராஹீம்” ஜும்ஆ பள்ளிவாசல்,**
காமராஜபுரம் ஒன்பதாவது தெரு, புதுக்கோட்டை - 622 001.

**வங்கி விபரம் :** **“JUMMA MAZJID KAMARAJAPURAM”**
Current Account No : **510101005523881**
**UNION BANK OF INDIA** IFSC Code : **UBIN0911241**
Micr Code: **622026008** Branch : **PUDUKKOTTAI.**

தலைவர் : ஹாஜி **அப்துல்லாஹ்** - 9715265709
செயலாளர் : ஹாஜி **ஏ.ஆர். முஹம்மது மீரா** - 9443346313
பொருளாளர் : ஜனாப் **பி.எஸ்.எம். முஹம்மது அப்துல்லாஹ்** - 9486265728


★ “சூரியன் மேற்கிலிருந்து உதயமாகுமுன் எவர் (தம் குறையறிந்து) பாவமன்னிப்புக் கேட்டாலும் இறைவன் அவருடைய பாவத்தை மன்னித்து விடுவான்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : முஸ்லிம்)


# பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை–1.

04373-254354; 253339; 99444 54354

| | |
|---|---|
| ரஃபீயுத் தவ்வா | கி.பி. 1719 |
| முஹம்மது ஷாஹ் | கி.பி. 1719 - 1748 |
| அஹ்மத் ஷாஹ் | கி.பி. 1748 - 1756 |
| இரண்டாம் ஆலம் கீர் | கி.பி. 1756 - 1759 |
| இரண்டாம் ஷாஹ் ஆலம் | கி.பி. 1759 - 1805 |
| இரண்டாம் அக்பர் | கி.பி. 1806 - 1837 |
| இரண்டாம் பகதூர்ஷா | கி.பி. 1837 - 1858 |

இதன் பின் வணிகக் கொடி பிடித்து வஞ்சகவலை விரித்து வந்த வெள்ளையர்கள் தங்களது பிரித்தாளும் சூழ்ச்சியால் பிரித் தானிய ஆட்சியை இந்தியாவில் ஸ்தாபித்தனர். 1947 ஆகஸ்ட் 15இல் இந்தியத் திருநாடு சுதந்திரம் பெறும் வரை வெள்ளையர் கரங்களில் அன்னைத் திருநாடு வீழ்ந்து கிடந்தது.

மேலே கண்ட முஸ்லிம் மன்னர்கள் பட்டியலில் – துக்ளக் பரம்பரை மன்னர்களில் முஹம்மது பின் துக்ளக் பற்றி இனி பார்ப்போம்.

## துக்ளக்

துக்ளக் என்பது ஒரு குடும்பம் அல்லது ஓர் இனத்தைக் குறிக்கும் சொல் என்பர். துக்ளக் தனி மனிதரின் பெயர் என்பர். மங்கோலியத் தலைவர் துக்ளக் என்ற பெயரை வைத்திருந்தார் என்று அமீர் குஸ்ரு துக்ளக் நாமாவில் தெரிவித்துள்ளார். துக்ளக் மன்னர்கள் எழுவரில் மூவர் பெயரில் மட்டுமே துக்ளக் என்று வருவதை முன்னரே பார்த்தோம்.

நாணயங்களும், சாசனங்களும் துக்ளக் என்பது தனி மனிதரின் பெயர் என்பதை வலியுறுத்துகின்றன. குலம் அல்லது குடும்பம் அல்லது இனம் சார்ந்திருந்தால் எல்லா அரசர்களும் துக்ளக் என்ற பெயரை வைத்திருப்பார்கள். ஆனால், அவ்வாறு வைத்திட வில்லை என்பதால் அதை தனி மனிதப் பெயராகக் கருதலாம்.

### கியாஸ் உத்தீன் துக்ளக்

துக்ளக் என்ற பெயர் தாங்கி முதலில் டெல்லி அரியணை ஏறியவர் கியாஸ் உத்தீன் துக்ளக், கி.பி.1320 முதல் கி.பி. 1325 வரை இவரது ஆட்சி இருந்தது.

கி.பி.1325இல் இவரைக் கொன்று விட்டு முஹம்மது பின் துக்ளக் அரியணை ஏறினார் என்று வரலாற்றில் சில முஸ்லிம் வரலாற்றாசிரியர்களாலேயே சொல்லப்படுகிறது.

இதில் உண்மை நிலை என்ன? இதோ வரலாற்றின் வெளிச்சத்தில் முஹம்மதுபின் துக்ளக்.... *(தொடரும்)*

# சீரத்துந் நபி (ஸல்) அவர்களின் சீரிய பார்வையில்....

மவ்லானா முஃப்தீ முஹம்மது ஹுஸைன் காஸிமி

காது சோணைகளுக்கு நேராக தலையின் பின்புறத்திலுள்ள முடிகளையும் வைக்க வேண்டும். அதற்குக் கீழுள்ள அதாவது பிடரியின் மீதுள்ள முடிகளை எடுப்பது கூடும்.

காதுகளின் மீதுள்ள முடிகளை அகற்றுவது கூடும்.

கண் புருவ முடிகளை முழுவதுமாக மழிப்பதோ வெட்டுவதோ கூடாது. ஆனால், புருவ முடிகளில் ஏதாவது சில முடிகள் நீட்டிக் கொண்டிருந்தால் அதைச் சமப்படுத்துவது கூடும்.

(ரத்துல் முஹ்தார், ஆலம்கீரி)

நெஞ்சில் மற்றும் கெண்டைக்கால்களில் உள்ள முடிகளை அகற்றுவது தவறில்லை. (ஃபதாவா ரஷீதிய்யா)

கீழ் உதட்டின் கீழே நடுப்பகுதியிலுள்ள முடிகளை வெட்டுவது கூடாது.

நீளமான முடிகள் வைத்துள்ள ஆண்கள் முடிகளை ஜடை போட்டு அல்லது முடிகளை கட்டி வைத்துத் தொழுவது மக்ரூஹாகும்.

குழந்தைகள், சிறுவர், சிறுமியருக்குக் கூட அந்நிய கலாச்சாரத்தின் படி முடி வைப்பதை, முடி கத்தரிப்பதை இஸ்லாம் தடை செய்கிறது. சிறுபிள்ளைகள் தானே, பருவமடைந்தபின் இஸ்லாமிய வழிமுறைகளைப் பின்பற்றுவார்கள் என சில பெரியவர்கள் தப்புக்கணக்கு போடுவதுண்டு. இஸ்லாமிய ஒழுக்கம், கலாச்சாரம், பண்பாடு சிறுபிராயத்திலிருந்தே துவங்கி விடுகின்றன.

முஸ்லிம் ஷரீஃபில் பதிவான மேலே கூறப்பட்ட ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் சிறுவனின் முடி முறைகேடாக வெட்டப்பட்டிருப்பதை கண்டித்துள்ளார்களே. சிறுவன் தானே என விட்டு விடவில்லையே ஏன்? தனது பேரர் ஹஸன் (ரளி) அவர்கள் தவழ்ந்து வரும் பாலகனாக இருந்த பருவத்திலும் ஸதகாவின் பொருளாக வைக்கப்பட்டிருந்த பேரீத்தங்கனி ஒன்றை எடுத்து வாயில் போட்டதைக் கண்ட கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் உடனடியாக விரைந்து வந்து வாயில் விரல் நுழைத்து அக்கனியை வெளியில் எடுத்து ஸதகாவின் பொருட்கள் நம்மவர்களுக்கு

ஹலால் இல்லை என்று கூறியது உம்மத்துகளாகிய நமக்கு படிப்பினை அல்லவா? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? விளையும் பயிர் முளையிலே தெரியும் போன்ற பழமொழிகள், பொன்மொழிகள் அல்லவா? இன்றைய சிறுவர்கள் நாளைய இளைஞர்கள். இவர்களே எதிர்கால இஸ்லாமியத் தலைமுறைகள் என்பதை மறந்து விடாதீர். இஸ்லாமிய இயற்கையான குணங்கள் மீது நமது செல்லக் குழந்தைச் செல்வங்களைப் பிறக்கச் செய்த அல்லாஹ், அவர்களை நாம் இஸ் லாமிய முறைப்படி பராமரித்தோமா? வளர்த்தோமா? அல்லது யூதர்கள், கிறிஸ்தவர்கள், நெருப்பு வணங்கிகள், சிலைகள், சிற்பங்களை வணங்குபவர்களின் வழிமுறைப்படி வளர்த்தோமா? என்று நிச்சயம் கேள்வி கேட்பான். நாம் அதற்குத் தகுந்த பதிலளிக்காமல் தப்பி விட முடியாது. நாம் என்ன பதில் சொல்லப் போகிறோம்? தயவு கூர்ந்து ஒரு கணம் சிந்தியுங்கள். செயல்திறனை அல்லாஹ்வே அருள் புரிவான்.

## நரைமுடிகளா? நற்பாக்கியங்களா?

**வெளுத்துவிட்ட நரை முடிகளுக்கு சாயம் பூசலாமா?**

ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் காலத்திலிருந்து தான் முடி நரைத்துவிடும் நிகழ்வு மனிதர்களுக்கு ஏற்பட்டது. அதற்குமுன் இவ்வாறு முடி நரைக்கவில்லை. முதலாவதாக ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் தாடி நரைக்கவே அவர்கள் வியப்புடன் "இது என்ன?" என்று அல்லாஹ்விடம் கேட்க, அதற்கு அல்லாஹ் "இது கம்பீரம், கௌரவத்தின் வெளிப்பாடாகும்" என்று பதில் கூறியதாக ஹதீஸ் நூற்களில் காணப்படுகிறது.

(நூல் : ஈளாஹுல் புகாரி பாகம் 1)

முதுமையின் அடையாளமாக ஏற்படத் துவங்கிய இந்த நரை காலம் செல்லச் செல்ல சில வைட்டமின் சத்துகள் குறைவின் காரணமாகவும் ஏற்படத் துவங்கிவிட்டது. ஆக ஒரு மனிதருக்கு முதுமையின் காரணமாகவோ அல்லது அதற்கு முன்னதாகவோ

## கடல் நுரையளவு தவறுகளை அழிக்கும் தஸ்பீஹ்!

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "சுப்ஹானல்லாஹி வபி ஹம்திஹி (அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கின்றேன்)" என்று யார் ஒரு நாளில் நூறு முறை சொல்வாரோ அவருடைய தவறுகள் அழிக்கப்பட்டு விடுகின்றன. அவை கடலின் நுரை போன்று இருந்தாலும் சரியே. – புகாரி (6405)

முடி நரைத்துவிட்டால் மருதாணி போன்ற சில பொருட்களை உபயோகப்படுத்தி அந்த முடியின் வெண்மையை மாற்றிக் கொள்வதற்கு இஸ்லாம் அனுமதிக்கிறது. அது மட்டுமல்ல விரும்பத்தக்கது என்றும் கூறியுள்ளது.

யூதர்களும், கிறிஸ்தவர்களும் தங்கள் நரைகளுக்கு மருதாணி சாயம் பூசுவதில்லை. எனவே, நீங்கள் (தங்கள் நரைகளுக்கு மருதாணி சாயம் பூசி) அவர்களுக்கு மாற்றம் செய்யுங்கள்.

(நூல் : புகாரி, முஸ்லிம், அபூதாவூது)

சாயம் பூசாமல் அப்படியே வெண்மையாகவே முடிகளை வைத்துக் கொள்ளவும் அனுமதியுண்டு. தாடி முடி நரைத்து விட்ட அடியானின் பிரார்த்தனையை அங்கீகரிக்காமல் மறுக்க அல்லாஹ் வெட்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. இமாமுல் அஃளம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்கள் ஐம்பத்தொரு ஹஜ் செய்ததாகவும், அதில் தனது இறுதி ஹஜ்ஜின் போது கஃபாவின் திரையை ஒரு கரத்திலும், தனது நரைத்த தாடியை மறுகரத்திலும் பிடித்த நிலையில் தன்னையும், தன் மார்க்கப் பணிகளையும் கபூல் செய்து மன்னித்து பொருந்திக் கொள்ளுமாறு பிரார்த்தித்தார்கள் என வரலாறு கூறுகிறது.

(தொடரும்)

ஆனந்தமாய் வாங்க! திருமண சீர்வரிசை பாத்திரங்கள் வாங்க!!

N.S.ஸ்டீல் ஹவுஸ்



எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.
செல் : 9944001362

# உலகம் சுற்றும் குரல்

**தென்காசி மஸ்ஊது**

ஜம்மு கஷ்மீர் குல்கம் மாவட்டத்தில் பள்ளிவாசல் இமாமாகப் பணியாற்றும் ஒருவரின் இரண்டு மகள்களான சையய்து ஸஃபியா, சையய்து பிஸ்மா ஆகிய இருவரும் நீட் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர். இருவரும் இரட்டையர்கள் ஆவர்.

* * * * *

பாகிஸ்தானைச் சேர்ந்த அப்ரார் ஹாசன் என்ற இளைஞர், தனது பி.எம்.டபிள்யூ. என்ற பைக்கில், கேமரா பொருத்தப்பட்ட ஹெல்மெட் அணிந்து கொண்டு இந்தியா முழுவதும் சுமார் 30 நாட்கள் வலம் வந்துள்ளார். இவர் பயணம் செய்த பல நகரங்களில் இவருக்குச் சிறந்த உபசரிப்பும், உணவும் வழங்கப்பட்டுள்ளன. இந்தியாவின் பல அரண்மனைகள், கோவில்கள், பள்ளிவாசல்கள் ஆகியவற்றை இவர் படம்பிடித்துள்ளார். இந்திய மக்களின் நட்பு எனது பயணத்தை மிகவும் சிறப்புக்குள்ளாக்கியது என்று இவர் தனது பயண முடிவில் கூறியுள்ளார்.

* * * * *

ஒவ்வோர் ஆண்டும் உலகில் சராசரியாக 14 கோடி பேர் பிறக்கிறார்கள். 6 கோடி பேர் இறக்கிறார்கள்.

* * * * *

50,000 கோடி நெகிழிப் பைகள் உலகில் ஒவ்வோர் ஆண்டும் பயன்படுத்தப்படுகின்றன.

* * * * *

பனையூர் சுப்பிரமணியன் சேஷாத்ரி என்பவர் தனது 65வது வயதில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் தபால்தலைகளைச் சேகரித்து லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்றுள்ளார். பாகிஸ்தானிய நண்பர் மூலம் இந்தியர்களால் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்காவின் யூனிக் வேல்டு ரெக்காட்ஸ் பற்றி அறிந்து 2017ஆம் ஆண்டு இந்தச் சாதனைச் சான்றிதழைப் பெற்றுள்ளார்.

* * * * *

அந்தமான், தாய்லாந்து, துபாய் போன்ற இடங்களில் நடைபெற்ற யோகா போட்டியில் நெல்லையைச் சார்ந்த சிறுவர் ரைஹான் சுலைமான் (வயது 11) முதல்பரிசு வென்று சாதனை படைத்துள்ளார்.

# நான் கண்ட அபுதாபி

அல்ஹாஜ் **சையத் ரஹ்மான்,** நாமக்கல்.

ஆசை! ஆசை!! அது யாரை விட்டது? குழந்தைகள் முதல் அனைவருக்கும் வித விதமான ஆசைகள்! ஓய்வூதியனான எனக்கும் ஓர் ஆசை! அதை இலட்சியம், கனவு என்றும் கூட சொல்லலாம்.

உண்மையிலேயே அப்படி ஒரு கனவு ஆசையை அனுபவிக்க அழைப்பு வந்தபோது நான் அசந்து விட்டேன்.

அரபு நாடுகள்... துபாய், ஷார்ஜா, அபுதாபி இப்படி பேசப்படும் இடங்களுக்கு நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஓய்வூதியனான நானும் போக முடியும் என்று கிஞ்சிற்றும் நான் நினைத்துப் பார்த்ததில்லை.

அபுதாபியில் என் சகலை நல்ல வேலையில் இருந்தார். பேச்சுவாக்கில் அங்கெல்லாம் சென்று பார்க்க வேண்டும் என்ற அவாவினை சொல்லப் போக, எனக்கு வேண்டிய பாஸ்போர்ட், விசா, பயணச் சீட்டு என எல்லாவற்றுக்கும் ஏற்பாடு செய்து விட்டார்.

திருச்சியில் தொடங்கியது எனது விமானப்பயணம். வேறு பயணிகள் நிறைய இருந்தனரே தவிர, எனது குடும்பத்தினர் எவரும் உடன் வரவில்லை. இது ஒரு புது அனுபவமாக அச்சமும், வியப்பும் கலந்த அனுபவமாக அமைந்தது. பயண நடைமுறைகளை சக பயணிகளிடம் கேட்டுக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

விமானம் கிளம்பத் தொடங்கியது. ஒரே தட தட சப்தம். ஓட்டம் அதிகரிக்க அதிகரிக்க கன சுகம்! சுமார் 2800 கிலோ மீட்டர் போனதே தெரியவில்லை. ஷார்ஜாவில் இறங்கினேன். முதன் முறையாக இருந்த போதிலும் எவ்விதத் தடையுமின்றி எனது உடைமைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு விமான நிலையத்திலிருந்து வெளிவந்தேன்.

என் சகலையின் நண்பர் என்னைக் கண்டறிந்து, முகமன் கூறி, அவரது காரில் ஏற்றினார். ஷார்ஜாவிற்கும் அபுதாபிக்கும் இருநூறு கிலோ மீட்டர் இருக்கும். இடையில் துபாய்.

அப்பப்பா, சாலையா அது! எவ்வளவு அகலம்! எவ்வளவு தரம்! எவ்வளவு சுத்தம்! ஒரு குறிப்பிட்ட வேகத்திற்கும் குறையாமல் சரமாரியாக கார்கள் சென்றவண்ணமே உள்ளன. விதிகள் மீறுதல்

என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. நடைப் பயணிகளையோ, குறுக்கிடும் பிராணிகளையோ பார்க்கவே முடியாது. எல்லாம் துல்லியமாக நடைபெறக் கடுமையான கண்காணிப்பு. தவறுக்கு அதை விடக் கடுமையான தண்டனை! "யார் துணிவார் இடையூறு செய்ய?" பாட்டல்ல. உண்மை!

எங்கும் விளக்குகள், மின் விளக்குகள் எண்ணிப் பார்த்தேன். இயலவில்லை. வீடுகள் வீடுகளல்ல, மாடிகள்! அடுக்கு மாடிகள்! எண்ணெய் வளம் தவிர நீர்வளமோ, நிலவளமோ இல்லாத ஒரு பிரதேசம். எங்கிருந்து வருகுதோ இன்சுவைத் தண்ணீர்! பாடத் தோன்றியது. ஏராளமான மின் சக்தி, தாராளமான வசதிகள் மறத்தல் இயலாது என்றாலும் சொல்லி விடுகிறேன்.

மரம் செடி வளர்வதற்கு மண்வளம் இல்லை. தொட்டி போன்ற அமைப்புகளில் இறக்குமதி செய்யப்பட்ட உரமூட்டிய மண்ணைக் கொட்டி சொட்டுநீர்ப் பாசன முறையில் செடிகளை வளர்க்கிறார்கள். நம் நாட்டில் விழா நிகழ்ச்சிகளுக்கு மேஜையின் மீது பூ ஜாடிகள் வைப்பது நினைவுக்கு வந்தது. அங்கு இச்செய்முறை பெருந் திட்டம்!

நண்பகலில் கடும் வெப்பமும், அனல் காற்றும் வெற்றிக் கொடி நாட்டும்! இரவிலோ மூடுபனிக்கும் கடுங்குளிருக்கும் செல்வாக்கு! மரம், செடி, கொடிகளின் இலைகள் பச்சையம் குன்றி, நரைத்தும் பழுத்தும் காணப்படும்.

தொழிற்சாலைகளும், பள்ளிகளும் மட்டுமே பெரிய வேன்களையும், பஸ்களையும் பயன்படுத்துகின்றன. மற்றவர் களுக்கெல்லாம் கார்கள்தாம். பெட்ரோல் விலை மிக மிகக் குறைவு. அதனால் எங்கு நோக்கினும் கார்கள்தான். தெருவிலேயே நாம் கார்களை நிறுத்தலாம். நாம் விட்டுச் செல்லும் பொருளை நாமாக வந்து எடுத்தால்தான் உண்டு. யாரும் தொடமாட்டார்கள். திருட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை.

தெருக்களிலும், சாலைகளிலும் நினைத்த இடத்தில் குப்பை களைக் கொட்ட முடியாது. சிறுநீர் கழித்தல், மலம் கழித்தல் அசிங்கப் படுத்துதல் முதலியனவும் செய்ய முடியாது. சட்டங்கள் அவ்வளவு கடுமை! தண்டனையில் சலுகையோ, பாரபட்சமோ கிடையாது. இரவில் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குப்பின் நடமாட்டம் இருக்காது. இப்படியெல்லாம் கட்டுப்பாடு இருப்பதற்கு யாரும் குறைபட்டுக் கொள்வதும் இல்லை. எல்லாம் அவர்களின் நல்வாழ்விற்குத்தானே, மகிழ்ச்சிதான்!

சூப்பர் மார்க்கெட்டைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது: போயிருந்தேன். சூப்பர் மார்க்கெட்டா அது ஹைபர் மார்க்கெட்! அதாவது மிகப் பெரிய சூப்பர் மார்க்கெட். மிக அகன்ற கட்டடம்.

மிகவும் நீளமானதும் கூட. உலக நாடுகளின் விளைபொருட்கள், உற்பத்திப் பொருட்கள் எல்லாம் அங்கு கிடைக்கின்றன. எல்லாமே வெவ்வேறு பிரிவுகளாக, புதுமையாக, சுத்தமாக, சரியான அளவில், சரியான விலையில் நேர்த்தியாக வைத்து விற்கப்படுகின்றன. பார்க்கவே கண்ணுக்கு மிகக் கவர்ச்சியாக இருந்தது.

நமக்கு வேண்டியதை நாமாக எடுத்து தள்ளுவண்டியில் போட்டுக் கொள்ளலாம். அவை சரியாகக் கணக்கிடப்பட்டு, பேக் செய்யப்பட்டுத் தரப்படுகின்றன. பழங்களும், காய்கறிகளும் மற்றும் பலவகைப் பொருட்களும் சரியாக வரிசைப்படுத்தப்பட்டு காட்சி தருவதை மீண்டும் மீண்டும் பார்க்கலாம் போல் இருந்தது.

என்னையறியாமலே எனக்கு சொந்த நாட்டு நிலவரங்கள் தலை தூக்கி "இங்கு காயலான் கடை எங்கே இருக்கிறது?" என்று கேட்டு விட்டேன். என்னை அழைத்துப் போன நண்பர் சிரித்து விட்டார். "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டேன். அவர் மீண்டும் சிரித்தபடியே இத்தனை சௌகரியங்கள் இருக்கும்போது இவற்றை அனுபவிக்காமல் கெட்டதையும், பட்டதையும் சரி செய்யத்தான் வேண்டுமா?" என்றார். பயன்படுத்த இயலாததை வீட்டுக்கு வெளியே வைத்து விட்டால் போதும்; அது போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போய் விடும்.

வேலைக்காகவும், பார்வைக்காகவும் வெளிநாட்டினர் வந்து செல்வதால் அவர்கள் நினைத்தபடி திரிவதும் இல்லை. அரபு மொழியே பேசப்படுவதால் அதையறியாத நான் வீட்டிலேயே முடங்கி விட்டேன். என் சகலைக்குத் தரப்பட்டிருந்த வீடு ஓர் அரண்மனை என்றே சொல்லலாம். அவ்வளவு விசாலம். அத்தனை வசதிகள். எல்லாம் தாராளமாகவும், ஏராளமாகவும் கிடைக்கின்றனவே என்பதற்காக எதையும் யாரும் வீணாக்குவதில்லை. இரவு, பகல், தட்பவெப்பம் கொஞ்சம் கொஞ்சமாக எனக்குப் பழக்கப்பட்டதால் எனது உணவும், உணவு நேரங்களும் மாறலாயின. அங்கு உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் செல்லவும், பொது உணவு விடுதிகளில் சாப்பிட்டுப் பார்க்கவும் வாய்ப்புகள் கிடைத்தன.

'சரவண பவன்' அங்கேயும் இருக்கிறது. நம்மவர்கள் எங்கிருந்தாலும் அவர்களின் நேசமும், உபசரிப்பும், சிந்தனைகளும் என்றென்றும் நிரந்தரமானவைதாம் என்பதையும் புரிந்து கொண்டேன். ஒன்று மட்டும் உண்மை : ஆங்காங்கு கிடைக்கும் வசதி, வாய்ப்புகளுக்கு ஏற்ப நாமும் இயைந்து செயல்பட்டால் எல்லாமே சுகம்தான்!

என்னைப் பொறுத்தவரையில் அபுதாபி எனக்கு இப்படித்தான் தோன்றுகிறது.

ஆம். அபுதாபி அநேகம் புதுமைகள் தாங்கிய பிரதேசம்!

# தாகம் எடுத்தால் மட்டுமே தண்ணீர் குடித்தால் போதுமா?

செ.கீர்த்தனா

பசி எடுத்தால் மட்டுமே உணவு உண்ண வேண்டும் என்பது ஆரோக்கியத்துக்கான அடிப்படை விதி. அப்போது 'தாகம் எடுத்தால் மட்டுமே தண்ணீர் குடிக்க வேண்டும்' என்பது தண்ணீர் குடிப்பதற்கான விதி முறை என்றுதானே மனதில் தோன்றும். இது சரியான அணுகுமுறையா?

வெளிவெப்பத்தைச் சமாளிக்கச் சருமத்தை ஈரப்பதமாக வைத்திருக்க வேண்டியது உடலுக்கு அவசியமாகிறது. அதற்கான வழிமுறைதான் உடல் வெளிப்படுத்தும் வியர்வை. சருமத்தை ஈரப்பதமாக வைத்திருக்க உடல், வியர்வையை வெளித் தள்ளிக் கொண்டேயிருக்கும். அது உடலின் வெப்பநிலை அதிகமாகாமல் தடுத்து சமநிலையில் வைத்திருக்க உதவும். கோடைக்காலத்தில் உடலில் நீர் குறையக் குறைய உடல் உள்ளுறுப்புகளின் செயல்பாடுகளுக்கும், உடல் வியர்வையை வெளிப்படுத்த வேண்டிய வேலைக்கும், தேவைக்கும் உடலில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும்.

தாகம் என்பது உடலின் தண்ணீர் தேவைக்கான முதல் அறிவிப்பு அல்ல. தாகம், உடலில் ஓர் அளவிற்குக் கீழ் தண்ணீர் குறையும் நிலையில் உடல் அடிக்கும் அபாய எச்சரிக்கைமணி. தாகம் எடுத்தால் மட்டும் தண்ணீர் குடிக்கும்பொழுது, உடலின் தண்ணீர் தேவையைச் சரிக்கட்ட மிக அதிகளவு தண்ணீர் ஒரே சந்தர்ப்பத்தில் அல்லது குறைவான நேரத்தில் குடிக்க நேரிடும். அதற்கு பதிலாக நேரடியாகத் தண்ணீரோ அல்லது வேறு நீர் ஆகாரமோ குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அருந்தி வருவது உடல் நலத்துக்கு நல்லது. மேலும் 'தாகம் எடுக்கும்போது மட்டும் தண்ணீர் குடிப்பது' எனும் கொள்கையை வைத்துக் கொண்டால், தாகம் எடுக்கும் போது தண்ணீர் கிடைக்காத சூழலில் நாம் அவதிப்பட நேரிடலாம் அல்லது நல்ல குடிநீர் கிடைக்காத சூழ்நிலையில் நாம் இருக்க நேரிடலாம்.

## பாதிப்புகள்

பொதுவாகத் தண்ணீர் குறைவாக அருந்துவது சிறுநீரகக் கற்கள் உருவாவதை ஊக்குவிப்பதாக மருத்துவ அறிவியல் தெரிவிக்கிறது. அது மட்டுமல்லாமல், கடுமையான

கோடை வெயிலின் தாக்கத்தினால், உடல் தண்ணீரின்றி வறண்டு போகும்போது வாந்தி வரும் உணர்வு, வாய் வறட்சி, தலைவலி, தலைச்சுற்றல், உடல் பலவீனம், நெஞ்சு எரிச்சல், தசைப் பிடிப்பு, இதயப் படபடப்பு, வேகமாக மூச்சுவிடுதல், சிறுநீர் உற்பத்தி குறைதல் போன்ற உடல் அறிகுறிகள் அதிகரித்து உடல் வியர்க்காத நிலை, நினைவு தவறுதல், மறதி, மயக்கம், வலிப்பு போன்றவற்றில் போய் முடியும் என்று மருத்துவ அறிவியல் எச்சரிக்கிறது.

**பலவீனமான பிரிவினர்**

குறிப்பாகப் பச்சிளம், இளம் குழந்தைகள், கர்ப்பிணிகள், ஏற்கனவே நீரிழிவு, இரத்தக் கொதிப்பு, புற்றுநோய் போன்ற இணை நோய்கள் உள்ளவர்கள், மனநோயாளிகள், வெயிலில் வேலை செய்பவர்கள், குளிர் பிரதேசத்திலிருந்து வெயில் பிரதேசத்திற்குப் பயணம் செய்பவர்கள், முதியோர் ஆகியோர் வெயிலின் தாக்கத்தினால் வெகு எளிதில் பாதிக்கப்படக் கூடிய பலவீனமான பிரிவினராக உள்ளனர். இந்தப் பலவீனமான பிரிவினர் கோடை வெயிலை அசட்டையாகக் கருதிச் செயல்பட்டால் விளைவுகள் மோசமானதாக இருக்கும். அதே நேரம் தீவிர இதய நோய், சிறுநீரகப் பாதிப்பு, சிறுநீரகச் செயலிழப்பு போன்ற


# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal ayurveda

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

# குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

94433 46313, 98650 48082 Email : kottakkalayurvedapdkt@gmail.com

பாதிப்புகளைக் கொண்டவர்கள் தங்கள் மருத்துவருடைய ஆலோசனைப்படி நீர் அருந்துவது சிறந்தது.

குழந்தை பிறந்து ஆறு மாதம் வரை தாய்ப்பாலே போதும். வேறு எதுவும் தேவையில்லை. இத்தகைய குழந்தைகள் கோடைக் காலத்தில் அழுது கொண்டே இருப்பது பசியினால் மட்டுமல்ல. உடலில் ஏற்படும் நீர்ச்சத்து குறைவினாலும்கூட. எனவே, இத்தகைய குழந்தைகளுக்கு அவ்வப்போது தாய்ப்பால் கொடுத்து வருவது கோடைக் காலத்தில் நலம் பயப்பதாக இருக்கும்.

**பாதுகாக்கும் கேடயம்**

வெயிலின் தாக்கத்தினால் நமது உடலும் மனமும் பாதிக்கப் படாமல் இருக்கத் தண்ணீரும் இதர நீர் ஆகாரமுமே நமக்கு உதவும். மோர், இளநீர், பழச்சாறு போன்றவை இதர நீர் ஆகாரங்களில் அடங்கும். பொதுவாகதிரவ உணவாக மட்டுமல்லாமல், நீர்ச்சத்து நிறைந்த சுரைக்காய், முள்ளங்கி, நூல்கோல் போன்ற காய்கறிகளையும், ஆரஞ்சு, திராட்சை, தர்ப்பூசணி போன்ற பழங்களையும் அவ்வப்போது உண்பதும் பலனளிக்கும். தேநீர், காபி, மது, குளிர்பானங்கள், புகை பிடித்தல் போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் இவை உடலில் நீர் இழப்பைத் தூண்டும்.

உடலின் ஒவ்வொரு செல்லும், அனைத்து உறுப்புகளும் தங்கு தடையின்றி தனது செயல்பாடுகளை முழுமையாக நிறைவேற்ற, குறைந்தபட்சம் அரை மணி முதல் ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை தண்ணீர் அருந்துவது நல்லது. இதர நீர் ஆகாரங்களையும் அருந்தலாம். இதுவே கோடையிலிருந்து நம்மைக் காக்கும் சிறந்த பாதுகாப்புக் கேடயம்.

குளிர்ப்பதனப் பெட்டியிலிருந்து சில்லென்ற தண்ணீரை அப்படியே குடிப்பது தாகத்தை உடனடியாகத் தீர்ப்பது போலிருக்கும். ஆனால், இதில் குறைந்தளவு தண்ணீர் குடித்தாலே தாக உணர்வு தணிந்து விடும். எனவே, ஐஸ் தண்ணீர் குடிப்பவர்கள் உடலுக்குத் தேவையான அளவு தண்ணீர் குடிக்காமல், தவறவிடும் சாத்தியம் அதிகம். மேலும், ஏற்கெனவே சூடாக உள்ள உடலை, சட்டென்று செயற்கையாகக் குளிர்ச்சிப்படுத்துவது தவறு. எனவே, குளிர்ச்சியான தண்ணீர் அருந்துவதைத் தவிர்ப்பதே நல்லது.

இந்த உலகம் மட்டுமல்ல; நமது உடலும்கூட 70% நீரினால் ஆனது. நமது மூளை அதைவிடச் சற்று கூடுதலாக 85% வரை நீரினைக் கொண்டுள்ளது. ஒவ்வொருவரும் இதனை உணர்ந்து, சரியான முறையில் சரியான அளவில் நீர் அருந்துவது நலமான வாழ்விற்கு வழிவகுக்கும்.

# வெற்றியின் அடித்தளம் ஸஃபர் மாதம்!

மவ்லவீ அல்ஹாஜ் "அப்ஸலுல் உலமா"
ஜே.ஏ.நைனார் முஹம்மது பாகவீ

இன்றைய அறிவியல் உலகத்திலும் கூட ஸஃபர் மாதம் பீடை பிடித்த மாதம் என்று பல முஸ்லிம்கள் கருதுகின்றனர். அது முற்றிலும் தவறான கணிப்பாகும். இஸ்லாமிய மாதங்கள் அனைத்தும் சிறப்பிற்குரியவையே! இவற்றில் எதனையும் கெட்ட மாதம் என புறந்தள்ள முடியாது. மாதங்களை தன்சுய விருப்பப்படி ஹலாலாக்கிக் கொள்வதும், ஹராமாக்கிக் கொள்வதும் காஃபிர்களின் வழக்கமாகும் என வல்லோன் இறைவன் திருமறையில் எச்சரிக்கிறான்.

"(புனித மாதங்களை அவர்கள்) பிற்படுத்திவைப்பதெல்லாம் குஃப்ரை (நிராகரிப்பை) அதிகப்படுத்துவதாகும். காஃபிர்கள் அதன் மூலம் வழிகெடுக்கப்படுகின்றனர். (தம் விருப்பப்படி) ஏதேனும் ஓராண்டில் (அதனை பிற்படுத்துவதை) ஹலாலாக்கிக் கொள்கின்றனர். வேறு ஏதேனும் ஓராண்டில் அதனை ஹராமாக்கிக் கொள்கின்றனர்".

-அல்குர்ஆன்(9:37)

நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் அரேபிய மண்ணில் நபியாக வந்த சமயம் அம்மக்களிடம் ஏராளமான மௌட்டீக மூடக் கொள்கைகள் நிறைந்திருந்தன. அவை அனைத்தும் ஒழிந்திட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு மூச்சாக பாடுபட்டார்கள். ஸஃபர் மாதத்தில் நல்ல காரியங்களை ஒதுக்கியும் பறவை ஜோதிடம், ஆந்தை சகுனம், தொற்று நோய் உண்மையானது என நம்பி வாழ்ந்த அரபு மக்களிடம் அவை மூடத்தனங்கள் என்று நபியவர்கள் உரக்கச் சொல்லி அவர்களை மாற்றியமைத்தார்கள்; செம்மைப் படுத்தினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

"தொற்று நோய் என்பதும் இல்லை, பறவை ஜோதிடம் என்பதும் இல்லை, ஆந்தை சகுனம் என்பதும் இல்லை, ஸஃபர் பீடைக்குரிய மாதமும் அல்ல".

(நூல் : புகாரீ)

மேலும் ஸஃபர் கெட்ட மாதமல்ல. அது ஒரு வெற்றிக்கு

அடித்தளமிட்ட மாதம் என்பதை நிரூபிக்கும் வண்ணம் நபிகளாரின் வாழ்வியலிலிருந்து பற்பல எடுத்துக்காட்டுகளை காணலாம்.

**இஸ்லாத்தின் அசுர வளர்ச்சிக்கும், அதீத வெற்றிகளுக்கும், புரட்சிகரமான திருப்புமுனைக்கும் பெரும் காரணியான ஹிஜ்ரா பயணம் மக்காவிலிருந்து ஸஃபர் பிறை 27ல் துவங்கியது கவனிக்கத்தக்கதாகும்.**

ஹஸ்ரத் முஹம்மது இப்னு இஸ்ஹாக் (ரஹ்) அவர்களின் கூற்றாவது:-

அருமை நபி (ஸல்) அவர்கள் புரிந்த முதலாவது போர் அப்வா ஆகும். இது மதீனாவிலிருந்து இருபத்தி மூன்று மைல் தொலைவில் உள்ளது. இங்கு பனூ ழமிரா எனும் கூட்டத்தினர் முஸ்லிம்களுக்கெதிராக செயல்படுவதை அறிந்து அவர்களை எச்சரிக்கை செய்வதற்காக அருள் நபியும், அருமை சஹாபாக்களும் அப்வா என்ற இடத்திற்கு சென்ற போது அவர்கள் சமாதானத்திற்கு வந்தனர். இதனால் இங்கு யுத்தம் நடைபெறவில்லை. இப்பயணம் நபியவர்கள் மதீனாவிற்கு வருகை புரிந்த 12வது மாத தொடக்கத்தில் ஸஃபர் மாதத்தில் நிகழ்ந்தது.

(நூல் : புகாரீ ஸானி)

இதுமட்டுமல்ல. வரலாற்றுச் சிறப்புமிக்க கைபர்போர் நடந்ததும், அதில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்ததும் ஸஃபர் மாதத்தில்தான்.

கைபர் மதீனாவிலிருந்து சிரியா வழியில் 96 மைல் தொலைவில் உள்ள ஒரு நகரமாகும். இதில் யூதர்கள் அதிகமாக வாழ்ந்தனர். இவர்கள் மதீனாவில் வாழும் யூதர்களுடன் சேர்ந்து முஸ்லிம்களுக்கெதிராக செயல்படவும், மக்கா காஃபிர்களுக்கு உதவிகள் புரிந்தும் நபியால் நாடு கடத்தப்பட்ட துரோகிகள் பனூ நளீருடன் கைகோர்த்து நயவஞ்சகத்தனமான நாசச் செயலிலும் ஈடுபட்டனர். இதனால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1500க்கும் அதிகமான சஹாபாக்களுடன் ஹிஜ்ரி 7ல் முஹர்ரம் மாத இறுதியில் சென்று பத்திற்கும் அதிகமான நாட்கள் கைபரை முற்றுகையிட்டு நடந்த போரில் முஸ்லிம்களில் 15பேரும் யூதர்களில் 93பேரும் உயிரிழந்து இறுதியில் கைபர் கோட்டை, பேரீச்ச தோட்டங்கள், விளைநிலங்களை முஸ்லிம்கள் கைப்பற்றி வெற்றி வாகை சூடியதும் இந்த ஸஃபர் மாதத்தில்தான். நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் கைபர் போர் முடித்து வாதில் குரா என்ற ஊருக்குச் சென்று அங்குள்ள யூதர்களையும் முற்றுகையிட்டு எச்சரித்து பெரும் போர்ச் செல்வங்களுடன் மதீனா திரும்பிய போது ஏற்கனவே அபிசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்தவர்கள் மதீனா வந்தார்கள். அதில் ஹஸ்ரத் ஜஃபர் இப்னு அபூதாலிப் (ரளி) அவர்களும் வந்திருந்ததை கண்டு நபியவர்கள் உற்சாகமடைந்து

"எனக்கு கைபரின் வெற்றி மகிழ்ச்சியை தந்ததா அல்லது தோழர் ஜஃபரின் மதீனா வருகை மகிழ்ச்சியை ஏற்படுத்தியதா நான் அறியேன் எனக் கூறினார்கள்.

(பத்ஹுல் பாரீ)

ஹிஜ்ரி 9-ம் ஆண்டு ஸஃபர் மாதம் ஹள்ரத் உக்பதிப்னு ஆமிர் (ரளி) அவர்கள் தலைமையில் இருபது வீரர்கள் கஸ்அம் கூட்டத்தாரிடம் அனுப்பப்பட்டார்கள். இப்போரில் தளபதி ஷஹீதானாலும் முடிவில் முஸ்லிம்கள் வெற்றி பெற்று ஏராளமான போர்ச் செல்வங்கள், கால்நடைகள், ஆண் மற்றும் பெண் கைதிகள் ஆகியவற்றை மதீனாவிற்கு கொண்டு வந்தார்கள். தீ அம்ரு யுத்தம், பனூ அத்ரா யுத்தம் ஸஃபரில் தான் நடந்துள்ளன.

ஹிஜ்ரி 8ம் ஆண்டு அபிசீனியா நாட்டில் அரசர் நஜ்ஜாஷியிடம் இருந்த அம்ருப்னுல் ஆஸ், காலிதுப்னுல் வலீத், உஸ்மானிப்னுல் வலீத் ஆகியோர் புனித இஸ்லாத்தை ஏற்று ஸஃபர் மாதம் தான் மதீனா வந்தடைந்தார்கள்.

ஹள்ரத் எஹ்ஹாக்கிப்னு சுஃப்யானுல் கிலாபி (ரளி) அவர்களின் தலைமையில் பனூ கலப் கூட்டத்தார் மீது ஒரு சிறுபடையை ஸஃபர் மாதமே அனுப்பப்பட்டது. ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்க அழைத்தனர்; அவர்களோ இஸ்லாத்தை ஏற்க மறுத்தனர். இதனால் அவர்களிடம் யுத்தம் புரிந்து வெற்றி வாகைசூடி மதீனா திரும்பினார்கள்.

மேற்காணும் அரசியல் சார்ந்த யுத்தங்கள் நடந்து வெற்றியும் கிடைத்திருப்பது ஸஃபர் மாதத்தில் தான் என்பது ஸஃபர் வெற்றி தரும் மாதம் என்பதை துல்லியமாக சொல்கிறது.

இருலோகத்தலைவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு முறை ஹள்ரத் அபூபக்கர் (ரளி) அவர்கள், ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்களை மண முடிக்க விருப்பம் தெரிவித்தார்கள். அதற்கு நபியவர்கள் எவ்வித பதிலும் கூறவில்லை. இதே போன்று ஹள்ரத் உமர் (ரளி) அவர்களும் பெருமானாரிடம் கேட்க நபியவர்கள் எவ்வித பதிலும் உரைக்கவில்லை. பிறகு அல்லாஹ்வின் புலி ஹள்ரத் அலீ (ரளி) அவர்களின் குடும்பத்தினர் நபி (ஸல்) அவர்களிடம் ஹள்ரத் அலீ(ரளி) அவர்களை பெண் பேசச் சொன்னார்கள். அப்போது ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் "ஹள்ரத் அபூபக்கருக்கோ, உமருக்கோ பெண்தராத நபியவர்கள் எனக்கு எப்படி தருவார்கள்? என்று வியப்புடன் வினவ, ஹள்ரத் அலீ (ரளி) அவர்களின் குடும்பத்தினர் நபி (ஸல்) அவர்களிடம், ஃபாத்திமா (ரளி) அவர்களை ஹள்ரத் அலீ (ரளி) அவர்களுக்கு திருமணம் செய்து தரும்படி கேட்ட பொழுது நபிமணி (ஸல்) அவர்கள் சம்மதம் தெரிவித்தார்கள். பிறகு ஹள்ரத் அலீ (ரளி) அவர்களிடம் "மஹருக்காக என்ன வைத்திருக்கிறாய்?"

என்று நபியவர்கள் கேட்டார்கள். "என்னிடம் ஓர் ஒட்டகமும், ஓர் உருக்குச் சட்டையும் இருக்கின்றன" என்று கூற "அலீயே! ஒட்டகம் உங்களுக்கு வாகனிக்க அவசியமானது. ஆகையால் உருக்குச் சட்டையை விற்று பணத்தைக் கொண்டு வாருங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூற ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் அந்த உருக்குச் சட்டையை நானூற்றி எண்பது திர்ஹங்களுக்கு விற்று அதை நபியிடம் மஹராக சமர்ப்பித்தார்கள். அப்போது நபியவர்கள் "அலீயே! இதில் மூன்றில் இரு பங்கில் வாசனை பொருட்கள் வாங்கிக் கொள், மீதியை உம்முசுலைம் (ரளி) அவரிடம் கொடுத்து சீர்சாமான்கள் வாங்கி வரும்படி சொல்லும்" எனக் கூறினார்கள். உம்முசுலைம் (ரளி) அவர்கள் இரண்டு சட்டைகள், இரண்டு வெள்ளிக்காப்புகள், இருதுப்பட்டிகள், ஒரு பாத்திரம், ஓர் அடுப்பு, இரண்டு தண்ணீர் எடுக்கும் தோல்பைகள், ஒரு குவளை, பேரீத்த நாரால் செய்யப்பட்ட ஒரு தலையணை, ஒரு சல்லடை, ஒரு மண்பானை ஆகியவற்றை வாங்கி வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் அருமை மகள் ஹள்ரத் பாத்திமா (ரளி) அவர்களிடம் இப்பொருட்களை ஒப்படைத்தார்கள். இவர்களுக்கு ஹஸன் (ரளி), ஹுஸைன் (ரளி), முஹ்ஸின் (ரளி), உம்முகுல்ஸூம் (ரளி), ஜைனப் (ரளி) ஆகிய குழந்தைகள் பிறந்தன.

(நூல் : பிதாயா வன்னிஹாயா)

இவர்களின் திருமணம் ஸஃபரில் நிகழ்ந்ததிலிருந்து ஸஃபர் மாதத்திலும் திருமணம் நடத்துவது நபியின் மேலான சுன்னத்து என்பதை அறிகிறோம். இவ்வளவு விளக்கங்களை தெரிந்த பிறகும் எந்த முஸ்லிமாவது ஸஃபரை பீடை மாதம் எனக்கூறினால், நம்பினால் அவருக்கு மார்க்க அறிவு குறைவு என்றுதான் சொல்ல முடியும்! எனவே ஸஃபர் மாதத்தில் தாராளமாக நற்காரியங்கள் நடத்தி மார்க்கத்தின் தெளிவை, தீர்வை மக்களிடம் நிலை நாட்டுவோம்!

அதற்கு அல்லாஹ் அருள் பாலிப்பானாக!

## பசுவின் பால்!

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"பசுவின் பாலை உபயோகியுங்கள். ஏனெனில், அது எல்லா வகையான மூலிகைகளையும் மேய்கிறது. ஆகவே, அதன் பாலில் அநேக வியாதிகள் நிவாரணமடைகின்றன"

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள்.

(நூல் : முஸ்த்தத்ரக் - எண் : 7164)

**தருபவர் : அல்ஹாஜ் கே.கே.செய்யது சுலைமான்,** தென்காசி.

# ஹராமா?

# வேண்டவே வேண்டாம்!

செங்கம் எஸ்.அன்வர்பாஷா

**“விசுவாசிகளே! உங்களுக்குள், சம்மதத்தின் பேரில் நடைபெறும் வர்த்தக மூலமாகவன்றி, உங்களில் ஒருவர், மற்றவரின் பொருள்களை தவறான முறையில் விழுங்கி விடவேண்டாம்”.**

- அல்குர்ஆன் (4:29)

மேற்படி திருமறையின் வசனத்தில், “ஒருவர் மற்றவர்களின் பொருள்களை, அநியாயமாக அபகரித்து உண்ண வேண்டாம்” என்று தடுக்கப்பட்டுள்ளது.

அது முஸ்லிமானவர்களின் பொருளாக இருந்தாலும் சரி அல்லது மற்றவர்களின் பொருளாக இருந்தாலும் சரியே. இரண்டுமே ஹராம்தான். உணவு மட்டுமில்லை. ஹராமான பொருளினால் வாங்கப்பட்ட உடை, வாகனம் இவற்றை உபயோகிப்பதும் தடுக்கப்பட்டுள்ளது. முறைகேடான முறையில் சம்பாதிக்கப்பட்ட அனைத்துமே ஹராம்தான். வட்டி வாங்குவதும் கொடுப்பதும் ஹராம்தான். இதைப்பற்றி திருமறையிலும், ஹதீஸிலும் பல இடங்களில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஹராமான பொருளை உபயோகிப்பதால் தொழுகை போன்ற வணக்கமும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

“பத்து திர்ஹங்களில் வாங்கப்பட்ட ஒரு துணியில், ஒரு திர்ஹம் அதில் ஹராமாக இருந்தால் அத்துணியை உடுத்தித் தொழுதால், இறைவன் அந்த தொழுகையை ஏற்றுக் கொள்ளமாட்டான்” என்று அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

“ஹராமான ஒருகவளம் உணவை உண்டவரின் நாற்பது நாட்கள் வரையிலான எந்த வணக்கமும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை” என்றும் நாயகம் (ஸல்) அவர்கள் சத்தியமிட்டு கூறியுள்ளார்கள்.

ஹராமான பொருளை இறைவன் பெயரால் தானம் செய்தால், அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது! அந்த அடியான் கேட்கும் பாவ மன்னிப்பும் அங்கீகரிக்கப்படமாட்டாது. எவ்வித புண்ணியமும் கிடைக்காது! அடியானின்

ஹலாலான பொருளால் செய்யப் படும் தானத்தை மட்டும் தான் இறைவன் ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பு அளிப்பான். அழுக்கு படிந்த துணியை தண் ணீர் தூய்மையாக்கும். ஆனால் தண்ணீரே அசுத்தமாக இருந் தால், அது எப்படி அழுக்கை அகற்றும்?

ஹராமான பொருளை நல்ல காரியங்களில், செலவிடுவதே முதல் குற்றம். அதற்குமேல், புண்ணியம் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருப்பது இரண்டாவது குற்றமாகும்.

"ஹராமான உணவை உண்டு வளர்ந்தவர், சுவனம் போகமாட்டார். அதாவது, அந்த மனிதர் தண்டனை அனுபவித்த பின்பு தான் சுவனத்தில் நுழைய முடியும்" என்று ஹள்ரத் அபூ பக்கர் சித்தீக் (ரளி) அவர்கள், நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள் ளதாக அறிவித்துள்ளார்கள்.

"ஹராமான உணவை உண்பவர், தவசீலர்களின் உடையை உடுத்திக்கொண்டு, இறைவனின் உண்மையான அடியானைப்போல் தன்னை காட்டிக்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று, ஆகாயத்தை நோக்கி கைகளை உயர்த்தி துஆ கேட்டாலும், அது எப்படி ஏற்றுக்கொள்ளப்படும்?" என்று அருமை நாயகம் (ஸல்) அவர்கள் வினவியுள்ளார்கள்.

(ஆதாரம் : முஸ்லிம்)

தவறு என்று குற்றம் சொல்லமுடியாத, ஒருமிகச் சிறிய செயலை, ஒரு மாபெரும் இறைநேசர் தன்னை அறியா மல் செய்துவிட்டார். அதனால் என்ன நேர்ந்தது என்பதை காண்போம்.

ஹள்ரத் இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்) அவர்கள், தன் ஆட்சியின் முடியை துறந்து, துறவறத்தை மேற்கொண்ட தவசீலர். இவர் ஒருமுறை மக்காமா நகரின் ஒரு கடையில் சிறிது பேரீச்சம் பழங்களை விலைக்கு வாங்கினார். எதிர் பாராமல், இரண்டு பழங்கள் அவருடைய இரண்டு கால் களுக்கு இடையில் பூமியில் விழுந்துவிட்டன. தான் வாங்கிய பேரீச்சம் பழங்களிலிருந்து, அவை தவறி விழுந்து இருக்கும் என்ற எண்ணத்தில், அவற்றை எடுத்து உண்டுவிட்டார்.

இதன் பிறகு சிலகாலம் கழித்து, அந்த இறைநேசர் பைதுல் முகத்தஸ் சென்றார்.

அங்குள்ள "குப்பதுஸ்ஸகரா" என்ற புனிதமான பகுதிக்குள் சென்றார். அங்கு தினந்தோறும் அஸர் தொழுகைக்குப்பின் இரவு முழுவதும் மலக்குமார்கள், வந்து தங்கி வணக்கத்தில் ஈடுபடுவது வழக்கம். அதனால், அங்கு

இருப்பவர்களை, நிர்வாகிகள் அஸருக்குப்பின் வெளியேற்றி விடுவார்கள். இதை அறிந்து கொண்ட ஹள்ரத் இப்ராஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்கள் யாரும் அறியாத வண்ணம் ஓரிடத்தில் மறைந்து கொண்டார்கள். மற்றவர்கள் அனைவரும் வெளியேறிவிட்டனர்.

மாலையில் வானவர்கள், அங்கு வரத்தொடங்கினார்கள். தங்களுக்குள் பேசிக்கொண்டனர். அதனை இறைநேசர் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். ஒரு வானவர், "இங்கு யாரோ ஒரு மனிதர் உள்ளார் போல் தெரிகிறதே?" என்றார். அதற்கு மற்றொரு வானவர் "குராஸான் நாட்டின் ஆபித் இப்றாஹீம் பின் அத்ஹம் போல் தெரிகிறது" என்றார். மூன்றாம் வானவர், "ஆம். அவரேதான். இந்த மனிதரின் செயல்கள் அனைத்தும் தினந்தோறும் ஆகாயத்தை நோக்கி மேலே சென்று கபூலாகி விடும்" என்று விளக்கினார். இதற்கு நான்காம் வானவர், "உண்மைதான்.ஆனால் ஒருவருடமாக இவருடைய வணக்கம், நற்செயல்கள் அனைத்தும் வானத்திற்கு செல்லாமல், தடை செய்யப்பட்டுள்ளன. இவருடைய துஆவும் கபூலாவதில்லை. இதற்கெல்லாம் காரணம், அந்த இரண்டு பேரீச்சம் பழங்கள்! மக்கா மாநகரில் இவர் தனது பேரீச்சம்

இன்பமான இனிய இல்லறத்திற்கு
பக்க விளைவுகள் கிடையாது
ஜிங்கா கோல்டு™
ஆண்களின் சக்திக்கு
மூலிகை மந்திரம்
CERTIFIED ISO 9001:2008 COMPANY
4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே
அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்
Customer Care - 9962664444
www.jingagold.com info@jingagold.com

பழங்கள் என்று நினைத்து மற்ற வரின் பேரீச்சம் பழங்களை பூமியிலிருந்து எடுத்து சாப்பிட்டுவிட்டார்" என்று கூறிமுடித்தார். இதன் பிறகு வானவர்கள் காலை வரை வணக்கத்தில் மூழ்கிவிட்டனர்.

வைகறை நேரம் வந்ததும் காவலாளி வந்து, குப்பதுஸ்ஸ கராவின் கதவுகளை திறந்த வுடன் யாருக்கும் தெரியாமல், ஹள்ரத் இப்றாஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். அங்கிருந்து நேராக மக்கா மாநகரம் சென்றடைந்தார்.

முன்பு பேரீச்சம் பழம் வாங்கிய அதே கடைக்கு சென்றார். ஆனால் அங்கு ஒரு புதிய வாலிபர் அமர்ந்து பேரீச்சம் பழங்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். "பழைய கனவானை காணவில்லையே? எங்கே அவர்?" என்று அந்த வாலிபரிடம், ஹள்ரத் இப்றாஹீம் பின் அத்ஹம் (ரஹ்) அவர்கள் விசாரித்தார்கள். அவர் வஃபாத்தாகி விட்டார் என்று பதில் வந்தது.

ஹள்ரத் அவர்கள், அந்த வாலிபரிடம், கடந்த ஆண்டு நடந்துவிட்ட செய்தி முழுவதையும் கூறினார்கள். முழுவிவரத்தையும் கேட்டறிந்த அந்த வாலிபர், "அந்த இரண்டு பேரீச்சம் பழங்களில் எனது பங்கை இப்போதே நான் மன்னித்து விட்டேன். மேலும் எங்கள் வீட்டில் எனது தங்கையும், எனது தாயாரும் உள்ளனர். அவர்களுக்கும் இதில் பங்கு உள்ளதால், அவர்களிட மும் நடந்த செய்திகளை கூற லாம்" என்று ஹள்ரத் அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

வீட்டிலிருந்த ஒரு மூதாட்டி கையில் ஒரு கோலை ஊன்றியபடியே வெளியே வந்தார். ஹள்ரத் அவர்கள் அந்த மூதாட்டிக்கு சலாம் கூறினார். அந்த மூதாட்டி பதில் கூறிவிட்டு, "இங்கு எதற்காக வந்துள்ளீர்கள்?" என்று விசாரித்தார். ஹள்ரத் அவர்கள் அம்மையாரிடம் நடந்த செய்தியை கூறிமுடித்தார். உடனே, அந்தமூதாட்டி "இப்போதே நான் எனது பங்கை மன்னித்துவிட்டேன்" என்று கூறியதுடன் தன் மகளையும் அழைத்து இந்த விஷயத்தை கூறியவுடன் அந்த பெண்ணும் தன் பங்கினை மன்னித்து விட்டாள்.

இரண்டு பேரீச்சம் பழங்களுக்கு சொந்தக்காரர்களான அந்த மூவரும், மனப்பூர்வமாக மன்னித்துவிட்டதால், ஹள்ரத் இப்றாஹீம் பின் அத்ஹம்(ரஹ்) அவர்கள் நிம்மதியுடன் அங்கிருந்து பைத்துல் முகத்தஸ்ஸின் திசையை நோக்கி புறப்பட்டார்.

முன்பு செய்ததைப் போலவே இப்போதும், ஹள்ரத் இப்ராஹீம் பின் அத்ஹம்(ரஹ்)

அவர்கள், "குப்பதுஸ்ஸகரா" விற்குள் சென்று இரவு முழுவதும் அங்கு மறைந்து இருந்தார். வழக்கம் போல் இரவானதும் வானவர்கள் அங்கு வந்து கூடினார்கள். அங்கு ஹள்ரத் இப்றாஹீம் பின் அத்ஹம்(ரஹ்) அவர்கள் உள்ளார் என்பதை அறிந்து கொண்டனர். தங்களுக்குள் பேசத் தொடங்கினார்கள் "இன்று இங்கு தங்கியுள்ள இப்ராஹீம் பின் அத்ஹம் அவர்களின் நற்செயல்கள், கடந்த ஒரு வருடமாக வானத்தை நோக்கி செல்லாமல் தடுக்கப்பட்டிருந்தன. இவருடைய துஆகளும் ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்தன. தற்போது இவர் அந்த பேரீச்சம் பழங்களினால் ஏற்பட்டுவிட்ட தவறுக்காக அதன் சொந்தக்காரர்களிடம் சென்று மன்னிப்பு பெற்றுவிட்டபடியால், இவருடைய செயல்களும், துஆகளும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எல்லாம் வல்ல இறைவன், அவருடைய உண்மையான அந்தஸ்திற்கு அவரை உயர்த்தி விட்டான்" என்று பேசிக்கொண்டனர். இதனைக்கேட்டு ஹள்ரத் இப்றாஹீம் பின் அத்ஹம்(ரஹ்) அவர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

(ஆதாரம் : கல்யூபி, ஹலால் - ஹராம் பக்கம் :39)

சாதாரணமான இரண்டு பேரீச்சம் பழங்களை உட்கொண்டதால் இவ்வளவு பெரிய தண்டனை என்றால் நாம் நாள்தோறும் எவ்வளவு ஹராமான பொருள்களை உண்கிறோம், நமக்கு எவ்வளவு பெரிய தண்டனைகள் காத்துக்கொண்டிருக்கின்றன என்பதை அறிய வேண்டாமா?

## பொன்மொழிகள்

- கணவனின் அன்பே பெண்ணிற்கு பொக்கிஷம்.
- கட்டுப்பாடற்றவன் கௌரவம் இழப்பான்.
- தன்னம்பிக்கை உடையவர்களை துன்பங்கள் நெருங்குவதில்லை.
- இளமையில் வறுமையும், முதுமையில் தனிமையும் கொடுமையானவை.
- கடன் வாங்கியாவது, காலா காலத்தில் கல்யாணம் செய்.
- புனிதமான செயல்களில் வாழ்வது தான் புகழ்.
- கோபத்தால் போனது, சிரித்தால் வராது.

**– தென்காசி மஸ்ஊது**

# மனம் செம்மையானால்....!

" நிச்சயமாக மனதாகிறது தீமையை அதிகம் ஏவக் கூடியதாகவே இருக்கிறது".

-அல்குர்ஆன் :(12:53)

"செயல்[களின் பிரதி பலன்]கள் அனைத்தும் எண்ணங் களைப் பொறுத்தே அமைகின்றன. ஒவ்வொரு மனிதருக்கும் அவர் எண்ணியது தான் கிடைக்கும்" என அண்ணல் நபி [ஸல்] அவர்கள் அருளியுள்ளார்கள். [புகாரி]

நற்செயல்களின் பிரதி பலன்கள் எண்ணங்களை அடிப் படையாகக் கொண்டுள்ளன. எண்ணம் சரியானதாக இருப்பின் அந்த நற்செயல்களுக்கான கூலி இறைவனிடமிருந்து கிடைக்கும். இல்லையெனில் கிடைக்காது. அச்செயல் பார்ப்பதற்கு எவ்வளவு நல்லதாக தோன்றினாலும் சரியே! அச்செயல் இறைவனின் திருப்திக்காக மட்டும் செய்யப்பட்டிருந்தால் தான் மறு உலகில் அதற்கான கூலி கிடைக்கும். அச்செயலை செய்வதற்கு உலக ஆசை காரணமாக இருக்குமானால் (உலக தேவைகளை நிறை வேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் அதனைச் செய்திருந்தால்) மறுமையில் அச்செயலுக்கு பயனேதும் கிடைக்காது. அதற்கு அங்கு மதிப்பு ஏதும் இருக்காது.

நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: -

" அல்லாஹ் உங்கள் உருவங்களையோ, செல்வங்களையோ பார்ப்பதில்லை. மாறாக உங்கள் உள்ளங்களையும், உங்கள் செயல்களையும்தான் பார்க்கிறான்". [முஸ்லிம்]

## மனிதனின் தப்புக் கணக்கு

அகத்தில் உள்ளதை அறியும் ஆற்றல் அந்த அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உண்டு. மனிதன் பறவைகளைப் போன்று விண் முட்ட பறக்க கற்றுக் கொண்டான். மீன்களைப் போன்று ஆழ்கடலிலும் நீந்த தெரிந்து கொண்டான். ஆனால் அவனுக்கு எதிரிலுள்ள மனித மனதினுள் தோன்றும் எண்ண ஓட்டங்களை மட்டும் அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது ஆழங்காண முடியாத பாதாளமாகதான் அவனுக்கு தோன்றுகிறது.

விருந்தாளி வருவதைக் கண்ணுற்ற வீட்டுக்காரர் "வாங்கோ! வாங்கோ! என்ன வெகு நாளாகக் காணவில்லை. எங்களையெல்லாம் மறந்து

விட்டீர்களோ என்று நினைத்தேன். சுடுதண்ணீரைக் காலில் ஊற்றியது போல் வந்ததும், வராததுமாக திரும்ப எண்ணாமல், ஒரு வாரமாவது தங்கிச் செல்ல வேண்டும்" என மூச்சு விடாமல் பேசி வாய்குளிர வரவேற்கிறார். வரவேற்பு பலமாக இருப்பதைக் கண்ட விருந்தாளி அகங் குளிர்ந்து விடுகிறார். ஆனால், "தெண்டம் சீக்கிரம் திரும்பித் தொலையாதே! சோறு கண்ட இடமே சுவர்க்கம் என்றல்லவா உட்கார்ந்து விடும். சரியான பிளைடு ஆச்சே!" என்ற ரீதியில் சுழலும் வீட்டுக்காரரின் மனவோட்டத்தை விருந்தாளி உணருவதில்லை.

"உலகத்தில் எத்தனையோ பெண்கள், ஆனால் உன்னைப் போல யாராவது உண்டா?" என்று கூறும் கணவனின் வார்த்தைகளைக் கேட்டு நெகிழ்ந்து நிற்கிறாள் மனைவி. ஆனால், என்ன செய்வது? இவளை சரிகட்டுவதற்கு இப்படி யெல்லாம் சொல்லித் தொலைக்க வேண்டியிருக்கிறது? இவள் அழகாக இல்லை என்று இவளிடம் சொன்னால் இங்கேயே ஒரு பூகம்பம் நிகழ்ந்துவிடாதா என்ன?" என்று கணவனின் மனம் பேசுவது அந்த அப்பாவி பெண்களின் காது களுக்கு கேட்பதில்லை.

## வியாபாரி கூறும் ஆசை

"வாங்க! வாங்க! நீங்கள் வருவீர்களென்றுதான் உங்களுக்காகவே யாருக்கும் விற்பனை செய்யாமல் எடுத்து வைத்திருந்தேன். உங்களுக்காகவேதான் இந்த சரக்கு கொள்முதல் செய்தேன். இலாபமே இல்லாவிட்டாலும் பரவாயில்லை. உங்களை போன்ற வாடிக்கையாளர்கள் தானே வேண்டும்" என்று வியாபாரியின் நாவு கூறுகிறது. ஆனால், "இந்த மட்டமான சரக்கை தலையில் கட்டுவதற்கு இவனைத் தவிர வேறு ஏமாளி மாட்டாது. இவனிடம் கணிச மாக பணத்தை கறந்துவிட வேண்டுமென்று வியாபாரியின் மனம் இலாபக் கணக்கு போடுவது வாங்க வந்தவருக்கு தெரிவதில்லை.

ஆக, உள்ளங்களை அறியும் ஆற்றல் அந்த அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உண்டு. எனவேதான் நமது உள்ளங்களில் ஓடும் எண்ணங்களுக்கேற்ப நமக்கு பிரதிபலன்கள் வழங்கப்படுகிறது.

நாம் உட்கொள்ளும் பொருட்கள் ஒவ்வொன்றும் விளைவுகளை ஏற்படுத்துவதைப் போன்றே நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும் நமது எண்ணங்களுக்கேற்ப பின் விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

## எதிரான தீர்ப்பு

மறுமை நாளிலே இறைவனின் பாதையில் வீரமரணம் அடைந்தவனுக்கெதிராக

தீர்ப்பளிக்கப்படும். அப்போது அவன், "இறைவா! நான் உனக்காக போரிட்டு என் உயிரை நீத்தேனே" என கூறுவான். அப்போது இறைவன், "நீ பொய்யுரைக்கின்றாய், மக்கள் உன்னை வீரன் என புகழ்வதற்காக நீ போரிட்டாய். அந்த புகழ் உனக்கு உலகிலேயே கிடைத்து விட்டது" என்று கூறி. அந்த உயிர் தியாகியை தலைகீழாக இழுத்துச் சென்று நரகில் எறியும்படி கட்டளையிடுவான். அதுபோல் அம்மனிதன் நரகத்தில் எறியப்படுவான்.

இதுபோல் அறிஞராகவும், மார்க்க போதகராகவும் இருந்த ஒருவனிடம் இறைவன் தான் அளித்த அருட்கொடைகளையெல்லாம் நினைவூட்டி, "இந்த அருட்கொடைகளையெல்லாம் பெற்றிருந்த நீ என்ன நற்செயல்கள் புரிந்தாய்?" என்று அல்லாஹ் கேட்பான்.

அதற்கு அவன், "இறைவா! உனக்காக உனது தீனை கற்றேன். உனக்காகவே பிறருக்கும் கற்று கொடுத்தேன். உனக்காகவே குர்ஆன் ஓதினேன்" என கூறுவான். அப்போது இறைவன் பொய்யுரைக்கின்றாய்! மக்கள் உன்னை அறிஞர் என சொல்ல வேண்டும் என்பதற்காக இவையனைத்தும் செய்தாய். அதற்கான வெகுமதி உலகிலேயே உனக்கு கிடைத்து விட்டது" என்று கூறி அவனை முகம் குப்புற இழுத்துச் சென்று நரகத்தில் எறியுங்கள் என்று கட்டளையிடுவான். அவ்வாறே அவன் நரகில் எறியப்படுவான்.

இதுபோல் உலகில் வசதி, வாய்ப்புகள் பலவும் அளிக்கப்பட்டிருந்த மனிதனிடம் இறைவன் கேட்பான். "எனது அருட்கொடைகளைப் பெற்றிருந்த நீ என்ன நற்செயல்கள் செய்தாய்?" என கேட்பான். அதற்கு அந்த மனிதன் "இறைவா! உனக்காகவே உன் வழியில் அவைகளை நான் செலவு செய்தேன்" எனக் கூறுவான்.

அப்போது இறைவன், மனிதா நீ பொய்யுரைக்கின்றாய்! மக்கள் உன்னைப் புகழ வேண்டும் என்று நீ வாரி வாரி வழங்கினாய். அந்த வள்ளல் பட்டம் உனக்கு உலகிலேயே கிடைத்துவிட்டது" என்று கூறி "இவனை முகம் குப்புற இழுத்துச் சென்று நரகில் வீசுங்கள்" என கட்டளையிடுவான். அது போன்றே மறுமை நாளில் ஒரு நற்செயலின் புறத்தோற்றத்தை கொண்டு மட்டுமே எந்த வெகுமதியும் கிடைத்து விடாது. இறைவனின் திருப்தியை நாடி இறைவனுக்காக மட்டுமே செய்த நற்செயல்களுக்கு மட்டுமே நற்கூலி வழங்கப்படும்.

மக்களிடம் பெயரும், புகழும் கிடைக்க வேண்டுமென்பதற்காக செய்யப்படும் செயல்களுக்கு இறைவனிடம் எள்ளளவும் மதிப்பில்லை. சின்னஞ்சிறு

நற்செயலும் நமக்கு துணை செய்ய வராதா? என்று தவித்து நிற்கும் அந்த நேரத்திலே தூய்மையில்லாத எண்ணத்தி னால் நமது செயல்கள் வீணாகி விட்டதை நினைத்து கைசேதப் படுவதால் என்ன பயன்?

நமது எண்ணங்களில் இக் லாஸ் - மனத்தூய்மை வேண்டும். ஷைத்தான் நமது எண்ணங்களில் குறுக்கிடும் போது "லாஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹில் அலிய்யில் அளீம்" என்று ஓதியும், "இஸ்திஃபார்" ஓதியும் நமது மனதை பக்குவப்படுத்த வேண்டும்.

மனத்தூய்மையான முறை யில் அல்லாஹ்வுக்காகவே செய் யும் நற்செயல்கள் மூலம் அல்லாஹ் வின் திருப்தியும், நெருக்கமும் கிடைப்பது மட்டுமல்லாமல் ஆபத்து காலத்தில் அந்த நற் செயல்கள் அல்லாஹ்வின் உதவி யையும் தேடித் தரும் என்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் தோழர்களுக்கு கூறிய ஒரு சம்பவத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

## மனத் தூய்மை

மூன்று நண்பர்கள் மலை அடிவாரத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது கடுமையான மழை பெய்யவே அருகிலிருந்த மலைக்குகை யில் ஒதுங்கினார்கள். பயங்கர பெருங்காற்றிலே திடீரென ஒரு பெரும் பாறை ஒன்று வந்து விழுந்து குகைவாயிலை அடைத் துக் கொண்டது. எவ் வளவு முயன்றும் அந்த பாறையை அவர்களால் அசைக்கக்கூட முடியவில்லை. இதனால் அச்சமுற்ற அம்மூவ ரும் தங்கள் வாழ்நாளில் ஏதே னும் நற்செயல்கள் புரிந்திருந் தால் அதனைக் கூறி இறைவனி டம் மன்றாடுவோம். அவனைத் தவிர நமக்கு வேறெந்த வழியும் இல்லை என்று மனம் கலங்கி கண்ணீருடன் பிரார்த்திக்க ஆரம்பித்தார்கள்.

முதலாமவர் பிரார்த்தித்தார். "யா அல்லாஹ்! என்னுடைய நிலத்தில் ஒரு கூலி ஆள் ஒருபடி நெல் கூலி பேசி வேலை பார்த்தார். ஆனால், வேலை பார்த்து முடித்து கூலி வாங்காமலே சென்றுவிட் டார். நான் அந்த ஒரு படி நெல்லை விதைத்து விவசாயம் செய்தேன். நன்கு விளைச்சல் கிடைத்தது. அதைக் கொண்டு சில ஆடுகள் வாங்கி வளர்த்தேன். அவை பல்கிப் பெருகி ஒரு மந்தையாகி விட்டன. வெகு நாள் கழித்து அவர் வந்து தன் கூலியை கேட்டார். இதோ! இந்த ஆட்டு மந்தைகளை ஓட்டிச் செல்" என்றேன். அவர் திகைத்துப் போய் "எனது கூலி ஒரு படி நெல்தானே!" என்றார். அதற்கு நான் "ஆம்! அதை நான் விவசாயத்திற்கு பயன்படுத்தி அதில் கிடைத்த வருமானத்தில் சில ஆடுகள் வாங்கி அவை களால் பல்கிப் பெருகியது தான்

இந்த ஆட்டு மந்தை. ஆகவே, இவையனைத்தும் உன்னுடையதுதான் என்றேன். அவர் மிக மகிழ்ச்சியுடன் ஆடுகளை ஓட்டிச் சென்றார். இறைவா! உன் மீதுள்ள அச்சத்தின் காரணமாகவே நான் இப்படி செய்தேன் என்பது உண்மையானால், இந்த பாறையை விலக்கி எங்களுக்கு வழி ஏற்படுத்தித் தருவாயாக! என்று பிரார்த்தித்தார். என்ன ஆச்சரியம்! பாறை சற்றே விலகி நின்றது.

இரண்டாமவர் இறைஞ்சத் தொடங்கினார். "இறைவா! எனக்கு வயது முதிர்ந்த தாய், தந்தையர் இருந்தனர். அவர்களுக்காக ஒவ்வொரு இரவும் பால் கொண்டு செல்வேன். ஒரு நாள் நான் செல்ல தாமதமாகி விட்டதால் பெற்றோர்கள் தூங்கி விட்டனர். தூங்கும் அவர்களை தொந்தரவு செய்யக் கூடாது என அங்கேயே காத்திருந்துநின்றேன். பசியால் துவண்டு போன என் குழந்தைகளுக்கு கூட பால் தராமல் காத்திருந்தேன். இப்படியே பொழுது விடிந்து விட்டது. இறைவா! உன் மீதுள்ள அச்சத்தினால் உனக் காகவே தான் ரப்பே இப்படி செய்தேன் என்பது உண்மையானால், எங் களுக்கு இந்த பாறையை விலக்கி வழி காட்டுவாயாக! என்றார்.

இறைவனின் பெரும் ஆற்றலால் பாறை மேலும் சற்றே விலகியது.

மூன்றாமவர் பிரார்த்திக்க ஆரம்பித்தார் -

"இறைவா! என் மாமி மகளை நான் விரும்பினேன். அவளை எனது விருப்பத்திற்கு இணங்குமாறு அழைத்தேன். அவள் எனக்கு நூறு தீனார்கள் கடன் தர வேண்டியிருந்ததால் அதற்கு பதிலாக அவள் எனக்கு பணிய வேண்டுமென்று வற்புறுத்தினேன். அவளை நெருங்கினேன். உடனே அவள் இறைவனை அஞ்சிக் கொள்! திருமணம்முடிக்காமல்பெண்ணை அனுபவிப்பது விபச்சாரக் குற்றம் என்றாள். உடனே அவளை விட்டு நான் விலகினேன். நூறு தீனார்களையும் மன்னித்தேன். இறைவா! உன் மீதுள்ள அச்சத்தினால் தான் நான் இப்படி நடந்தேன் என்பது உண்மையானால், இந்த பாறையை முழுவதுமாக விலக்கி எங்களுக்கு வழி ஏற்படுத்தித் தருவாயாக!" என்றார்.

இறைவனின் கருணையாலும், அவனின் அற்புத பேராற்றலாலும் பாறை முழுமையாக அகன்றது. மூன்று நண்பர் களும் இறைவனுக்கு நன்றி செலுத்தி குகையிலிருந்து வெளி வந்தார்கள்.

தங்களது இக்லாஸான செயலினால் எவ்வளவு பெரிய பேராபத்திலிருந்து தங்களை காப்பாற்றிக் கொண்டார்கள் என்பதை நாம் அறிய முடிகிறது.

எனவே, நமது சொல், செயல், எண்ணம் அனைத்திலும் இறைவன் மட்டுமே குறிக்கோளாய் இருக்க வேண்டும். அதுவே நமக்கு ஈருலகிலும் வெற்றியைத் தரும்.

# களங்கமில்லா வெள்ளை ரோஜா கண்ணீர்த் துளியுடன் வெளியேறியது

கம்பம் மவ்லானா
பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஸ்ரத்

களங்கபடமில்லா வெள்ளை மனங்கொண்டோரான அன்னை ஆயிஷாவும், நாயகத் தோழர் ஸஃப்வானும் சாதாரணமாகவே இருந்தனர். அவர்களின் உள்ளத்தில் எவ்வித சலனமும், அதிர்ச்சியும் இல்லை. தங்களைப் பற்றி தவறான கருத்துக் கொண்டு சந்தேகப்படும் சிலர் இக்குழுவில் இருப்பர் என்று அவர்கள் எண்ணியும் பார்க்கவில்லை. யாருமில்லாப் பாலைவனக் காட்டில் தனியே அகப்பட்டுக் கொண்ட தான் இறையுதவியால் ஸஃப்வான் துணையுடன் கண்ணியமாக வந்து சேர்ந்தோம் எனும் மகிழ்ச்சியான மனநிலையில் ஆயிஷா (ரளி) இருந்தார். எல்லாம் வல்ல இறைவனைப் புகழ்ந்து நன்றி கூறிக் கொண்டிருந்தார்.

கள்வர்களும், கயவர்களும், பகைவர்களும் நடமாடும் கானகத்திலிருந்து அன்னை ஆயிஷாவை மிகுந்த பாதுகாப்புடன் பத்திரமாக அழைத்து வந்து சேர்க்கும் பேறு தனக்குக் கிடைத்ததை எண்ணி ஸஃப்வான் தனக்குள் பெருமிதப்பட்டுக் கொண்டார். பண்பாட்டைக் கட்டிக்காக்கும் கண்ணியமிகு மேன்மக்களாகிய அவ்விருவரின் இதயமும் அமைதிக் கடலாகவே இருந்தது.

அப்போதைக்கு இருவர் பற்றிய எந்த விமர்சனமும், கருத்தோட்டமும் பகிரங்கமாகப் பாசறையில் பேசப்படவில்லை. அனைவரும் நகருக்குள் நுழையும் ஆர்வத்துடன் இருந்ததால் அவசர அவசரமாகப் புறப்படத் தயாராயினர். மதீனாவிற்குள் வந்தாகி விட்டது. போரின் வெற்றிச் செல்வங்கள் அனைவருக்குமாக முறையாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

மதீனாவில் மாநபியின் அரசியல் ஆன்மிகப் பொதுப்பணிகள் மீண்டும் துவங்கின. முன்பு போல் மதீனா அவ்வளவு கலகலப்பாயில்லை. என்னவோ ஏதோ இனந்தெரியாத சோக மேகம் சூழ்ந்திருப்பது போல் இருந்தது. ஏதோ ஒன்று குறித்து அவரவர் பேசிக் கொள்வது மட்டும் தெரிய வந்தது. மௌனமாகவும், ஜாடைமாடையாகவும் கிசுகிசுத்தனர். ஆம்! அன்னை

ஆயிஷா (ரளி), ஸஃப்வான் இரு வரையும் இணைத்துத்தான் பேசப்பட்டது. மதீனா நகரே ஏதோ உறங்கிக்கிடப்பது போல் இருந்தது. அன்னை ஆயிஷா (ரளி) அவர்களுக்கு எந்தச் செய்தியும் எட்டவில்லை. இந் நிலையில் அவர்கள் உடல் நலம் குன்றி நோய்வாய்ப்பட்டார்கள்.

அன்னை ஆயிஷா (ரளி) கடுமையான காய்ச்சலால் துவண்டு கொண்டிருந்தார். உடம்பெல்லாம் ஒடித்து முறிப் பது போல் இருந்தது. ஆயிஷா பற் றிய அவதூறுத் தீ மதீனாவெங் கும் பற்றி எரிந்து கொண்டிருந் தது. வஞ்சகர்களான (முனாஃபிக்) பாவிகள் இதைப் பரப்புவதை தம் சொந்த வேலையாக - கட்டாய அலுவலாகக் கொண்டு செயலாற்றி னர். காலை முதல் இரவு வரை காண்போரிடமெல்லாம் கதை கட்டி விட்டுக் கொண்டிருந்தனர். இதைக் கூறுவதற்கென்றே மதீனாவின் புறநகர்ப் பகுதி களில் வாழ்ந்தோரிடம் சென்றனர். புதிதாக ஊருக்குள் வருவோரிட மும் இதைக் கூறத் தவறவில்லை.

ஆயிஷா (ரளி) மீது அவர் கள் இட்டுக் கட்டிக் கூறிய பொய் யான அவதூறின் நோக்கம் அவரை மட்டும் களங்கப்படுத்து வதல்ல. அண்ணலையும், அவரது குடும்பத்தினரையும் அசிங்கப் படுத்துவதாக இருந்தது. அண்ண லின் வாழ்க்கைத் துணைவியின் மீது வீசப்பட்ட அவதூறுச் சேறு அண்ணலின் மீது பட்டு அவரது புகழ் - செல்வாக்கு, அழைப்புப் பணி, மக்களின் அன்பு மங்க வேண்டும் என்று எதிர்பார்த் தனர் அந்த நயவஞ்சகர்கள்.

தனக்கு கிடைக்க வேண்டிய பதவியும், செல்வாக்கும் வேற் றூரிலிருந்து வந்தவருக்குக் கிடைப்பதா? என்ற காழ்ப்புணர்வு வஞ்சகர் தலைவனிடம் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. அந்தப் பொல்லாப் பொறாமை யால் என்னென்னவோ சொல்லி விட்டுக் கொண்டிருந்தான். கடு களவும் மனசாட்சி இல்லா அந்தப் பாவி நினைத்ததையெல்லாம் நா கூசாமல் பேசிக் கொண்டிருந் தான். அவனது பரிவாரத் துதி பாடிக் கூட்டத்தினரோ தலைவ னின் எண்ணமறிந்து அவனைக் காட்டிலும் அதிகமாகவே பேசிப் பரப்பிக் கொண்டிருந்தனர். இதில் ஆயிஷாவின் ஒன்று விட்ட சகோதரர் மிஸ்தாஹ்வும், அண்ண லின் ஒன்றுவிட்ட சகோதரி ஹம்னாவும் இருந்ததுதான் மிக வும் வருத்தத்திற்குரியது. மதீனா வின் மாபெரும் கவிஞரான ஹஸ் ஸானிப்னு தாபித்தும் இந்த அவ தூறைப் பரப்புவதில் முன்னணி யில் இருந்தார். கற்பனை வளம் படைத்த கவிஞரல்லவா? கண், காது, மூக்கு வைத்து ஊதிப்பரப்பு வதற்குச் சொல்லவா வேண்டும்? சுவையும், மெருகும் ஊட்டிப் பொய்யைப் பரப்பினார்.

மதீனாவே எழிலிழந்து கிடந்தது. உண்மையான இறை நம்பிக்கையாளர்களின் உள்ளம்

பெரிதும் வருந்தியது. அடப்பாவி களே! உங்களுக்கு இதயமே இல்லையா? யாரை - எந்த விஷயத்தில் பழி கூறுகிறீர்கள்? இறைத் தூதரைக் குறைவுபடுத்த வேண்டும் என்பதற்காக பாவ மறியாப் பத்தினிப் பெண்ணையா பழி கூறுகின்றீர்? கண்ணியமிகு அன்னையையா குற்றம் சுமத்துகின்றீர்? ச்சீ நீங்களும் மனிதர்கள்தானா? எனக் குமுறினர்.

மனிதத் தோற்றம் கொண்ட எல்லோரும் மனிதரல்லர். மனிதர் களில் இழிந்தவர்களும், தரம் தாழ்ந்தவர்களும், இதயமற்றவர் களும், அயோக்கியர்களும், அக் கிரமக்காரர்களும் இருக்கின்ற னர். "விலங்குகளைக் காட்டிலும் மோசமானவர்களென" இவர்கள் குறித்து இறைமறை அல்குர்ஆன் சித்தரிக்கிறது. இவர்களால் மனித இனத்துக்கே அவமான மாகும். மனிதத்தையே மாய்த்துக் கொண்டவர்கள்.

மகிழ்ச்சியாக வாழும் கணவன் மனைவியின் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட்டு விடு கின்றனர். சந்தோஷமாக இருந்து வரும் குடும்பங்களைக் குலைத்து விடுகின்றனர். அடக்கமாகப் பணி யாற்றும் அமைப்புகளில் பிளவை உண்டாக்கி விடுகின்றனர். அருமையாகச் செய்யப்படும் காரியங்களில் பிரிவை ஏற் படுத்தி விடுகின்றனர். நல்ல நட்பு - நண்பர் - நம்பிக்கையில் சந்தேகத்தைக் கலந்து விடு கின்றனர். நஞ்சிலும் கொடியவர் கள் இவர்கள், நாசக்காரப் பாவிகள்.

ஓர் ஆணையோ, பெண்ணையோ வீழ்த்த வேண் டும் என நினைத்தால்.... அவர் களது மதிப்பு, மரியாதையைக் குலைக்க நினைத்தால்.... புகழ், செல்வாக்கை மங்க வைக்க வேண்டும் என விரும்பினால் அந்த ஆணை இன்னொரு பெண் ணோடும், அந்தப் பெண்ணை மற்றொரு ஆணோடும் சேர்த்து இணைத்துப் பேசி விடுகின்றனர். அவர்கள் குறித்துத் தப்பாக, தவ றாக எதையாவது கூறிவிடுகின் றனர். போகிற போக்கில் இந்த விஷ விதை யைத் தூவி விட்டுச் செல்வோரும் உண்டு. கூட்டாகச் சேர்ந்து இந்த ஈனச் செயலைச் செய்வோரும் உண்டு.

தூய்மையான புனிதவதியாம் அன்னை ஆயிஷாவையும் இந்த அநியாயக்காரர்கள் விட்டு வைக்கவில்லை. நெருப்புக் காற் றாய்ப் பற்ற வைத்துப் பரப்பிக் கொண்டிருந்தனர். மதீனாவில் நிலைமை மிக மோசமாகிக் கொண்டிருந்தது. அன்றாட வாழ்க்கையே அப்படியே ஸ்தம் பித்ததுபோல் ஆகி விட்டது. நல்லோர்களின் முகத்தில் துயர மும், சோகமும் படர்ந்திருந்தது கவலை கப்பியிருந்தது.

இந்த அவதூறு அசுத்தக் காற்றை சுவாசிக்க முடியாமல் அவர்கள் திணறினார்கள். என்ன

செய்வதென்றறியாமல் திகைத்தார்கள். இது குறித்து அவர்களில் எவரும் எதுவும் பேசவில்லை. மௌனித்துப் போய்க் கொண்டிருந்தனர். அண்ணலும் மனிதர் தானே. அவர்களது தூய உள்ளத்திலும் இதன் தாக்கம் பாதித்தது. அவர்களது மென்மையான இதயம் துன்பத்தைப் பிழிய மலர் வதனம் வாட ஆரம்பித்தது. தமது இனிய வாழ்க்கைத் துணைவி ஆயிஷா களங்கமற்றவர். எவ்விதக் குற்றமும் செய்யாத மாசு மருவற்றவர். தூயபத்தினி என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். எனினும் கயவர்கள் பரப்பிய அவதூறு விஷமம் அனைவருக்குமாகத் தெரிந்து கொடி கட்டிப் பறந்ததால் இதன் உண்மை எல்லாருக்கும் தெரியும் வண்ணம் தெளிவுபடுத்துவதாக இருக்க வேண்டும் என எண்ணினார்கள்.

எல்லாரையும் போல் வந்திருந்தால் யாரும் எதுவும் கூற வழி இருந்திருக்காது என எண்ணினார்களோ என்னவோ... மனம் குமைந்த மாநபி, ஆயிஷா (ரளி) விடம் அவ்வளவாக எதுவும் பேசிக் கொள்ளவில்லை. முன்பு போல் மனம் விட்டு மகிழ்ச்சியாக இருக்கவில்லை. அன்னை ஆயிஷாவின் நோய் கடுமையாகிக் கொண்டிருந்தது. ஆனால், அண்ணலின் கவனிப்பும், உபசரிப்பும், விசாரிப்பும் அவ்வளவாக இருக்கவில்லை. எப்போதும் சிரித்த முகத்துடன் புன்னகை சிந்தி, குடும்பத்தினருடன் கலகலப்பாயிருக்கும் அண்ணல் நபிகளார் எவ்விதச் சலனமுமின்றி சாதாரணமாக இருந்தார்கள். எந்த அக்கறையும் காட்டவில்லை.

அன்னை ஆயிஷாவுக்குப் பெரிதும் அதிர்ச்சியாக இருந்தது. தனக்கு சின்னத் தலைவலி, உடல் வலி என்றால் துடித்துப் பரிவுடன் கவனிக்கும் அன்பு நிறைத் துணைவர், இப்போது இப்படி மாறிவிட்டார்களே.... பெரிய அளவில் பாசங்காட்டாது இருக்கின்றார்களே! இதன் காரணம் என்ன? அவர் மனம் வருந்தும்படி நான் அப்படி என்ன நடந்து கொண்டேன்? என உள்ளம் குமைந்தார். நாட்கள் சென்றாலும் நோயின் கடுமை குறையவில்லை. சரி, இனி இங்கிருந்து என்ன செய்வது? என்றெண்ணிய ஆயிஷா (ரளி) தன் அன்னையின் இல்லத்திற்குச் சென்று சிகிச்சை பெற்றுவருவதற்கான அனுமதியை அண்ணலிடம் கேட்டார். அண்ணல் மறுப்பேதும் சொல்லவில்லை. தெளிந்த அறிவும், மதி நுட்பமும் வாய்ந்த ஆயிஷா (ரளி) வியந்து கொண்டே சென்றார். களங்கமில்லா அந்த வெள்ளை ரோஜா கண்ணீர் துளியுடன் வெளியேறியது. கறைபடியா அந்தக் கன்னி மனம் கடலலையாய் அடித்தது. வெள்ளை மனங்கொண்ட புள்ளிமான் வேதனை சுமந்து வெளியேறியது.

## பெண்ணுரிமை நமது இல்லத்திலிருந்து தொடங்கப்பட வேண்டும்

பொதுவாக ஒரு பெண்ணுக்கு கணவனின் அன்பும், அரவணைப்பும் அவசியத்திலும் அவசியமாகும். பொறுப்புள்ள நல்ல குடும்பப் பெண் கணவனையே அதிகம் நேசிப்பாள். கணவனிடமிருந்து அன்பு - பாசம் பரிவு - கவனிப்பையே பெரிதும் எதிர்ப்பார்ப்பாள். மனைவியரில் சிலர் வேண்டுமானால் இதற்கு மாறுபட்டவர்களாக இருக்கலாம். கணவனை மதியாது அலட்சியம் செய்து, எடுத்தெறிந்து பேசி, அடாவடித்தனம் செய்து வாழ்க்கையின் நிம்மதி யைக் குலைத்து மகிழ்ச்சியை அழித்து வாழ்வையே தொலைக்கும் பண்பற்றோராய் இருப்பர்.

ஆனால், நல்ல பெண்கள், கணவனின் மகிழ்ச்சி, திருப்தியையே விரும்புகின்றனர். அதில் குறைவு ஏற்படும்போது மனம் கலங்கி கண்ணீர் சிந்துகின்றனர். உளம் நொந்து உடைந்து போகின்றனர். அதிலும் ஏதேனும் உடல்நலன் குன்றிய வேளையில் கணவனின் ஆதரவு, அரவணைப்பு, கவனிப்பை மிகவும் எதிர்பார்க்கின்றனர். உடல்நலத்துடன் இருக்கும்போது கணவனின் கவனிப்பு குறைவாக இருந்தாலும் அதைப் பெரிதுபடுத்த மாட்டார்கள். ஏதோ பல்வேறு அலுவல்களால் நமக்கு நேரம் தரவில்லை. நம்மைக் கண்டு கொள்வதில்லை என்று தான் சாதாரணமாக எடுத்துக் கொள்வர். ஆனால் தனக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு நோய் வாய்ப்பட்டுவிட்டால் இந்தச் சூழலை எதிர்மறையாகவே எடுத்துக் கொள்வர். இது பெண்களின் இயல்பு.

அன்புக்காக ஏங்கும் மனம் பெண் மனம் - பாசம் - பரிவு - அரவணைப்பு - ஆதரவை எதிர் பார்க்கும் உள்ளம் பெண்ணின் உள்ளம். பெற்றோர் - உடன் பிறந்தோர் - உற்றார் - உறவினரைக் காட்டிலும் காரம் பற்றி ஒன்றிய கணவனிடமிருந்து அதிகம் விரும்பும் இயல்பினள்.

அதைப் பெருமையாகக் கருதும் இதயத்தாள்.

இந்தப் பெண்களை - அவர்களின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளவே முடியாது. அவர்கள் சொல்வதற்கெல்லாம், செய்வதற்கெல்லாம் மறுப்பேதும் சொல்லாமல் சரி சரி என்று சொன்னால் மட்டுமே கணவர் தப்பிக்க முடியும். இல்லையேல் நிலைமை ஏடாகூடமாகிவிடும். இல்லத்தின் அமைதி குலையும். நிம்மதி பறி போகும். பெண்களில் சிலர் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம்.

நிலவு முகம் உம்மென்று மாறி விடும். கேட்பதற்குச் சரியாக பதில் கிடைக்காது. உபசரிப்பு, கவனிப்பு குறைந்து விடும். எதிர் விளைவுகளை உருவாக்கும்

சொல்லும் செயலும் விளையும். சின்னச் சின்னப் பொருட்களும் பெண்ணம்பெரும் ஓசையை வெளிப் படுத்தும். ஆக மொத்தத்தில் வீடே புதிய பரிணாமம் பெற்று விடும். பரபரப்பாகிப் போகும்.

எப்போதுமே மனைவியரை மதித்துப் போற்றி, அன்பினை அள்ளிப் பொழிந்து, புன்னகை சிந்தி, இனிய பண்புடன் உறவாடும் உத்தமர் அண்ணலாரின், கலகலப்பில்லாத சலனமற்ற நிலையை உத்தமி ஆயிஷா (ரளி) அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அண்ணல் என்ன வெற்று மொழிப் பேச்சாளரா? பெண் கொடுமை, பெண்ணுரிமை பற்றிப் பெரிதாக மேடைதோறும் முழங்கி, கை தட்டு பெற்று வீட்டுக்கு வந்ததும் மனைவியைக் கொடுமைப்படுத்தி வாட்டி வதைத்துப்பாடுபடுத்தும் வாய்ச் சொல் வீரரா? இல்லையே. "சொன்னதைச் செய்வது செய்வதைச் சொல்வது" இதுதானே இறைத் தூதரின் இயல்பாக இருந்தது.

தாயை நேசிப்பது, சகோதரியை நேசிப்பது, மனைவியை நேசிப் பது அவர்களுக்குரிய நியாயமான உரிமையை வழங்குவது இது தானே பெண் நேசம், பெண்ணுரிமையின் அடிப்படை. இவையில்லாமல் தன் இல்லத்தில் நடைமுறைப் படுத்தாமல் பெண் கொடுமை, பெண்ணுரிமை என முழங்குவது வெற்று வேதாந்தமாக இருக்குமே தவிர உயிரோட்டம் விளையும் உன்னதக் கருத்தாக இராது.

"எவர் தனது மனைவி, குடும்பத்தினரிடம் நல்ல விதமாக நடந்து கொள்கின்றாரோ அவரே சிறந்தவர். நான் எனது மனைவியரிடம் நல்லபடியே நடந்து கொள்கிறேன்" என நவின்ற நபிகளார் பெண்களுக்கான உரிமையை வழங்குவதில் தமது இல்லத்திலிருந்தே தொடங்கினார்கள்.

தம் இனிய வாழ்க்கைத் துணைவி ஆயிஷாவை அண்ணலார் புறக்கணிக்கவில்லை. மாநபியும் மனிதர் தானே. மனித இயல்பின் அடிப்படையிலேயே சில மாற்றங்கள் தெரிந்தன. அவ்வளவுதான்! தன் இல்லத் துணைவியை இறைத் தூதர் எள்முனையளவும் சந்தேகப் படவில்லை. வெளியில் வஞ்சகர்கள் பேசிய வசைமொழியும், ஆயிஷா பற்றி அவர்கள் பரப்பிய அவதூறும் அண்ணலைப் பெரிதும் வதைத்திருந்ததால் அந்தக் கவலையில் மூழ்கிய நபிகளார் தம் துணைவியிடம் அவ்வளவாகப் பேசிக் கொள்ளவில்லை.

அன்னையின் இல்லத்திற்கு வந்த ஆயிஷாவுக்கு சிகிச்சை செய்யப்பட்டு ஓரளவு உடல் நலம் தேறியது. இருபது நாட்கள் அங்கு கழிந்தன. இந்நாட்களில் ஆயிஷாவின் மனம் பட்டபாட்டைச் சொல்லவே முடியாது. அண்ணலை எண்ணியெண்ணி அவர்களின் அன்புறவை நினைந்து நினைந்து வாடினார். அண்மை

யில் அவர்களின் பாச நேச கவனிப்பில் ஏற்பட்டிருந்த சின்ன மாற்றத்தை எண்ணித் துவண்டு கொண்டிருந்தார். கலங்கிக் கண்ணீர் சிந்தினார். இதயம் பிழிந்தார்.

உடல்நலன் முற்றிலும் தேறினார். அன்றொரு நாள் மிஸ்தாஹ் வின் தாயின் மூலம், ஸஃப்வானுடன் தன்னை இணைத்துத் தவறாகக் கூறி அவதூறு பேசப்படும் செய்தியறிந்து அதிர்ந்தார்... திடுக்கிட்டார்.... துடித்தார்.... "இறைவா! நான் என் செய்வேன்? யாதொரு குற்றமும் இழைத்திராத என் நிலை இப்படி ஆகி விட்டதே? உள்ளத்தாலும் பாவத்தை எண்ணியும் பார்த்தேனில்லையே! என் மீது மாபெரும் அபாண்டப் பழி விழுந்து விட்டதே" எனக் குமுறினார்.

தனது பாசமிகு தாயிடம் வந்து செய்தியைக் கூறி அழுதார். ஏனம்மா இப்படிப்பட்ட அவதூறு குறித்து என்னிடம் கூறவில்லை? தாயே நான் கெட்டவளா? சொல்லுங்களம்மா சொல்லுங்கள்? உங்கள் மகள் தவறான நடத்தையுள்ளவளா? பொங்கி வந்த அழுகையை அடக்க முடியாமல் இதயம் பிழிந்து கூறி நின்றார். கேட்டார்.. குமுறினார்.

"பாசமகளே! ஆயிஷா பொறுமையாக இரும்மா.... அன்பு பாசம் நிறைந்த உயர்ந்தவரைக் கணவராகப் பெற்ற பெண்ணை பொறாமையின் காரணமாக சிலர் இவ்வாறு எதையாவது கூறுவது உலக இயல்புதானம்மா! இதற்காக நீ வருத்தப்படாதே உனது கண்ணீரைத் துடைத்துக் கொள். நீ தூயவள். பரிசுத்தமானவள். அனைத்தையும் அறிந்த எல்லாம் வல்ல அல்லாஹ் இருக்கின்றான். நிச்சயம் அவன் உன்னைத் தூயவள் என அறிவிப்பான். பொறுமைதான் உனது பொக்கிஷமாக இருக்க வேண்டும்" என்று தலை வருடி, நெற்றி தடவி, மடி மீது மகளை வைத்து முடிந்தளவு ஆறுதல் கூறினார். கூறும் போதே அவரும் அழுதுவிட்டார். ஆயிஷாவுக்கு உலகமே வெறுப்பாகத் தெரிந்தது. இதயமே உடைந்து சுக்குநூறாகியது போல் ஆனது உண்ணவில்லை. உறங்கவில்லை. பேசவில்லை.

## அவதூறுப் பருந்துகளால் தாக்கப்பட்ட பெண்புறா பட்டபாடு...

அவதூறுச் செய்தியால் துடித்துத் துவண்டுபோன அன்னை ஆயிஷா (ரளி) அந்த இரவு முழுவதும் உறங்காது தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தார்கள். விழிகள் மூட முடியாமல் இமைகள் முள்ளாய்க் குத்தின. அழுகையோ நின்றபாடில்லை. அருவியென கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது. அன்னை குமுறிக் குமுறி அழுதார். பொங்கிப் பொங்கி வழிந்தது கண்ணீர். பொழுது புலர்ந்த பின்பும் கண்ணீர் மழை நிற்கவில்லை. அன்று பகல் முழுவதும் அழுது கொண்டே இருந்தார். அழுகையை நிறுத்த ஆயிஷா நினைத்தாலும்

அழுகை நிற்கவில்லை. அவரையும் மீறி அழுகை வழிந்து கொண்டே இருந்தது. அந்த இரவும் உறங்கவில்லை. அழுது வடித்தார்கள்.

அவதூறு என்பது எத்தகு ஆபத்தானது, கொடுமையானது என்பது அன்னை ஆயிஷாவின் வாழ்வில் தெரிந்து கொள்ளலாம். சொல்லும் பாவிகள் பழி எதையாவது சொல்லிவிட்டுப் போய்க் கொண்டிருப்பர். ஆனால், அதனால் பாதிக்கப்படுவோர் படும் வேதனை சொல்லில் அடங்காது.. சொல்லவும் முடியாது... அவதூறு கூறுவோர் பற்றி இறைமறை வன்மையாக எச்சரிக்கின்றது.

"எவர்கள் கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறி அதற்கு வேண்டிய நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டுவராவிட்டால் அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அத்தகையவர்கள் கூறும் சாட்சியத்தை எக்காலத்திலும் ஒப்புக் கொள்ளாதீர்கள். ஏனென்றால் நிச்சயமாக அவர்கள் வரம்பு மீறிய தீயவர்கள்"

- அல்குர்ஆன் (24 : 4)

"எவர்கள் விசுவாசியான கற்புடைய அப்பாவிப் பெண்கள் மீது அவதூறு கூறுகிறார்களோ அவர்கள் நிச்சயமாக இம்மையிலும், மறுமையிலும் அல்லாஹ்வின் சாபத்திற்குள்ளாவார்கள். மறுமையில் அவர்களுக்கு மகத்தான வேதனையுண்டு. "தூதரே! ஒரு நாளை அவர்களுக்கு ஞாபகமூட்டும்! அந் நாளில் அவர்களுடைய நாவுகளும் அவர்களுடைய கைகளும் அவர் களுடைய கால்களும் கூட அவர் களுக்கு எதிராக அவர்கள் செய்தவற்றைப் பற்றி சாட்சியம் கூறும்."

- அல்குர்ஆன் (24 : 23, 24)

களங்கமற்ற - கற்புடைய பெண்களை அவதூறு கூறுபவருக்கான தண்டனை, எண்பது கசையடிகள். வாழ்நாள் முழுவதும் அவனது பேச்சை - சாட்சியை ஏற்றுக் கொள்ளாத சமூகப் புறக்கணிப்பு, "வரம்பு மீறிய தீயோர்" எனும் இழிப் பெயர். இரு உலகிலும் இறைவனின் கோபமும் - சாபமும், மறுமையின் பயங்கர வேதனை. அவனது உறுப்புகளே அவனுக்கு எதிராகக் கூறும் மறுக்க முடியாத சாட்சி.

பிறரைப் பற்றி அவதூறு கூறுவோருக்கு இத்தனை கடுமையான தண்டனையை இறைவன் வைத்திருப்பதற்குக் காரணம் அவர்கள் மற்றவருடைய மான மரியாதையோடு விளையாடி விட்டார்கள். அவரது கண்ணியத்தைக் குலைக்க முற்பட்டு விட்டார்கள். அவரது குடும்பத்திற்கு இழிவைத் தேடித்தந்து விட்டார்கள் என்பதுதான். ஓர் ஆணோ, பெண்ணோ அவர்களின் உயிரைக் காட்டிலும் உன்னதமானது மானம். அந்த மானத்திற்கே பங்கம் ஏற்படும் வண்ணம் பாவிகள் எளிதில் எதையாவது சொல்லிவிட்டுப்போய்விடுவார்கள். அதன் விளைவு சமூகத்தில் அவரது அந்தஸ்து பாதிக்கப்

படுகின்றது. இதனால் அவரது வாழ்வே சூன்யமாகி விடுகின்றது.

மனிதர்களில் சிலர் இருக்கின்றனர். ஒருவரைப் பிடித்து விட்டால் ஆஹா ஓஹோ என்று அவரைத் தூக்கிப் புகழ்ந்து கொண்டாடுவர். ஏதேனும் சின்னச் சின்னப் பிரச்சனைகள் காரணங்களால் பிடிக்காமல் போனால் அவ்வளவுதான்! எதையெதையாவது கூறி அவரை ஒரேயடியாக மட்டம் தட்டப் புறப்பட்டு விடுகின்றனர். இல்லாத, பொல்லாத சொல்லாதவற்றையெல்லாம் கூறிப் பங்கம் ஏற்படுத்திப் பழியைத் தேடிக் கொள்கின்றனர். உண்மையில் இவர்கள் மனிதர்களில் தரமில்லாதவர்கள், பண்பில்லாதவர்கள், கீழானவர்கள்.

“திண்ணமாக மனிதனை மிகச் சிறந்த அமைப்பில் படைத்தோம். பிறகு (அவனது முறையற்ற செயலால்) தாழ்ந்தவர்களில் மிகவும் தாழ்ந்தவனாக அவனை ஆக்கினோம்” - அல்குர்ஆன் (95 : 4, 5)

கண்ணியமானவர்கள் நட்பிலும் கண்ணியமாக இருப்பார்கள். ஏதேனும் மனஸ்தாபம் - சச்சரவு - பகைமை ஏற்பட்டாலும் கண்ணியமாகவே ஒதுங்கி கண்ணியமாகவே இருப்பார்கள். தன்னிடம் நல்லுறவுடன் இல்லாதோர் பற்றி எதுவும் பேசமாட்டார்கள். பேசும் உரிமை தன்னிடம் இல்லை என்பதை உணர்ந்திருப்பார்கள். அடக்கமாக - புன்னகைத்துப் போய்க் கொண்டிருப்பார்கள்.

பொதுவாக அவதூறு விபரீதம் அதிகமாகப் பரவுவதற்கு அடிப்படைக் காரணமே அதை ஆர்வத்துடன் செவி கொடுத்துக் கேட்போர்தான். யாராவது எவரைப் பற்றியாவது இவ்வாறான அவதூறுகளைக் கூற வந்தால்.... “ஏங்க உங்களுக்கு இந்த வேலை..? பிறரைப் பற்றி அபாண்டமாக அநியாயமாக எதையாவது சொல்லாதீங்க...? நீங்க ஒங்க கண்ணாலே பாத்தீங்களா? பின்பு ஏங்க அவுங்க சொன்னாங்க.... இவுங்க சொன்னாங்கன்னு சொல்றீங்க...? கண்ணாலே பார்க்கிறதே சில நேரங்கள்லே பொய்யாயிடுது.

உருப்படியான வேலையைப் பாருங்க... மத்தவங்களைப் பத்திப் பேசி நீங்களும் பாவியாகிறீங்க. என்னையும் பாவியாக்குறீங்க. இதைச் சொல்லுறதுக்கு இவ்வளவு தூரம் வந்திருக்கீங்களே!” எனப் பேசிவிட்டால் இனி அவர் மற்றவரிடம் கூறுவதற்கும் யோசிப்பார். அவதூறு பரப்புவதிலிருந்து அவரையும் அதைக் கேட்பதிலிருந்து பிறரையும் பாதுகாக்கின்றீர்கள். செய்வீர்களா? செய்வோம்!

அவதூறு எனும் விஷவாயு தனிமனித வாழ்விலும், குடும்ப

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

வாழ்விலும், சமுதாய வாழ்விலும் பெரும் விபரீத விளைவுகளை அதிர்ச்சி தரும் பாதகங்களை ஏற் படுத்தி வருகின்றது. "பாவியான ஒருவன் ஏதேனும் அவதூறுச் செய்தியை உங்களிடம் கொண்டு வந்தால் நன்கு தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். ஆராயாமல் அவசரப்பட்டு முடிவெடுத்து விடாதீர்கள். அதற்காகப் பின்னர் பெரிதும் வருந்த நேரிடும்" என இறைமறை எச்சரிக்கின்றது.

அண்ணல் எத்தகு நெஞ்சுரம் மிக்கவர்கள்! தூயவர்கள்! அவர் களையே இந்த அவதூறுச் செய்தி பெரும்பாடுபடுத்திவிட்டதே! அலைக்கழிக்க வைத்து விட்டதே! பள்ளியின் மேடையின் மீதேறி அண்ணல் இது குறித்துப் பேசி னார்கள். "அநியாயமாகஎவரும் அவ தூறு கூறிட வேண்டாம். இது என் மனதைப் பெரிதும் புண்படுத்து கிறது. எனது குடும்பத்தைக் குறித்துப் பரப்பப்பட்டிருக்கும் பொய்ச் செய்திகள் அபாண்ட மானவை. எனது குடும்பத்தினர் நன்மையையன்றி வேறெதை யும் அறியார். அநியாயமாகப் பழி கூறுவதை நிறுத்திக் கொள்ளுங் கள். எல்லாவற்றையும் இறைவன் கவனித்துக் கொண்டிருக்கின் றான்" நெஞ்சம் நெகிழ இறைத் தூதர் வெளிப்படுத்திய வார்த்தை கள் வஞ்சகர்களில் சிலரைத் தவிர எல்லாரையும் கலங்கச் செய்து விட்டது. சிலர் கண்ணீர் சிந்தினர்.

(தொடரும்)


துவக்கம் 1958

# குர்ஆனின்குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் : அல்லாமா
**அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)**
அல்லாமா "அஸ்அதுல் மில்லத்"
**அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)**

பொறுப்பாசிரியர் : மவ்லவீ முஃப்தீ
**மு.முஹம்மது இஸ்மாயீல்**
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஹள்ரத்

**குர்ஆனின் குரல்**
தபால் பெட்டி எண் : 45,
4/25, எழில் நகர், மேலமடை,
**மதுரை-625020.**

அலுவலக அலைபேசி எண் :
**94420 56547**
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com

ஓராண்டு சந்தா ரூ.300/-
தனி இதழ் ரூ.25/-

விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ
தொகை செலுத்துபவர்களுக்கு :
Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No. 6851528029 IFSC Code : IDIB000T003

சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :
M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No. 175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH



குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# இஸ்லாத்தில் பீடை என்பதேயில்லை

## மவ்லவீ எஃப்.ஜமால் பாக்கவீ

கெட்ட நேரம், கெட்ட சகுனம், பீடை நேரம், காலம் சரியில்லை இதுபோன்ற வார்த்தைகள் உலகின் பல பகுதிகளிலும் ஒலித்துக் கொண்டேதான் உள்ளது. ஆனால், இவைகளில் எந்த ஒன்றையும் இஸ்லாம் அங்கீகரிக்க வில்லை. அவைகளை "ஒலிப்பதையே" பாவமெனக் கூறியது. முஸ்லிம்கள் யாவரும் மேற்கூறப்பட்டவைகளில் எதனையும் மொழிவதோ, அவைகளை நம்புவதோ கூடவே கூடாது.

அறியாமை எனும் இருள் உலகில் படர்ந்திருந்த காலம். கண்டதையெல்லாம் தெய்வமாக கருதி வந்தனர். மனதில் தோன்றும் கற்பனைகளை உண்மையென நம்பினர். அவைகளை நிஜவாழ்க்கையில் கொண்டுவந்து இணைத்தனர். அறிவுக்கு பொருத்தமில்லாத பற்பல விஷயங்கள் அவர்களின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருந்தது. விதவைகளையும், ஆந்தை அலறுவதையும், பூனை குறுக்கே செல்வதையும், ஸஃபர் மாதத்தையும் துர்சகுனமாக கருதினர். பெண் குழந்தைகள் பிறப்பதையும், அவர்களை வளர்ப்பதையும் இழிவாகக் கருதினர். இன்னும் பல மூட நம்பிக்கைகளும் அவர்களுடன் கலந்திருந்தது.

நபி (ஸல்) அவர்கள் இறைத் தூதராக நியமிக்கப்பட்ட பின் அறியாமை எனும் இருள் அகன்று 'அறிவுடைமை' எனும் பிரகாசம் ஒளிதர ஆரம்பமாகி விட்டது. மூட நம்பிக்கைகள் மூட்டை கட்டப்பட்டு நபி (ஸல்) அவர்களின் காலடியில் போட்டு புதைக்கப்பட்டுவிட்டது.

அரபுகளின் மூட நம்பிக்கையில் ஒன்றுதான் "ஸஃபர் - பீடை மாதம்" என்பது. இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களில் பலர் இந்த "ஸஃபர்" மாதத்தை, "இன்றும் அது பீடை மாதம் தான்" என்று கூறிவருகின்றனர். அம்மாதத்தில் திருமணம் செய்யவோ, செய்து வைக்கவோ மாட்டார்கள். புது வீடு திறப்புவிழா மற்றும் நல்ல காரியங்கள் எதுவும் நிகழ்த்தவே மாட்டார்கள்.

ஆனால், இவர்களில்யாவரும் நிறைமாத கர்ப்பிணியின் குழந்தை பிறப்பை தள்ளிப் போடமாட்டார்கள். வெளிநாடு செல்வதற்கு விசா வந்துவிட்டால் ஸஃபர் மாதத்தில் பிரயாணத்தை பிற்படுத்தமாட்டார்கள். வெளிநாட்டிலிருந்து வருகை தந்த மகனையோ, மகளையோ "வரவேண்டாம்" என தடுக்க மாட்டார்கள். பணம் வரவு வந்தால் "வேண்டாம்" என்று கூறமாட்டார்கள். சுகவீனம் ஏற்பட்டால் "மருத்துவமனைக்கு செல்ல மாட்டோம்" என்றோ மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டோர் சுகம் கிடைத்த பின் "வீட்டிற்கு செல்ல மாட்டோம்" என்றோ இந்த ஸஃபர் மாதத்தில் கூறவே மாட்டார்கள். தனக்கு தேவை இருப்பின் சிலவற்றை செய்து கொள்வது. இல்லையெனில் பீடை எனக்கூறி தள்ளி விடுவது. இது அறியாமையின் உச்சகட்டமாகும்.

இஸ்லாமிய வரலாறுகளையும், நிகழ்வுகளையும் திரும்பிப் பார்த்தால் பெரும்பாலான நிகழ்வுகள் ஸஃபர் மாதத்தில் தான் அரங்கேறி உள்ளன. நபி (ஸல்) அவர்கள் பிரயாணத்திற்கும், யுத்தங்கள் புரிவதற்கும் ஸஃபர் மாதத்தையே பெரும்பாலும் தேர்வு செய்துள்ளார்கள். அவைகளில் வெற்றிவாகையும் சூடியுள்ளார்கள்.

**அல் - அப்வா போர்**

இறைத்தூதராக தேர்வு செய்யப்பட்ட நபி (ஸல்) அவர்கள் பதிமூன்றாண்டு காலங்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் ஏகத்துவ பிரச்சாரம் மக்காவில் செய்து வந்தார்கள். அல்லாஹ் வின் உத்தரவின்படி நபி (ஸல்) அவர்கள் தன் தோழர்களுடன் மதீனாவிற்கு ஹிஜ்ரத் (புலம் பெயர்ந்து) சென்றார்கள். கொடியவர்கள் மதீனாவிலும் நபி (ஸல்) அவர்களையும், முஸ்லிம்களையும் நிம்மதியாக இருக்கவிடவில்லை. அங்கும் தொல்லைகளும், துயரங்களும் தொடர் கதையானது. முஸ்லிம்களை கருவறுக்க பணம் தேவைப்பட்டதால் எதிரிகள் ஷாம் (சிரியா) நாட்டிற்கு வியாபாரம் செய்ய செல்வார்கள். இவர்களை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியில் நபி (ஸல்) அவர்கள் ஈடுபாடு கொண்டார்கள்.

அவ்வாறு குறைஷியரை மக்காவிற்கும் - மதீனாவிற்கும் இடைப்பட்ட இடமான "அல் - அப்வா" என்ற இடத்தில் நபி (ஸல்) அவர்களும், நபித் தோழர்களும் எதிர்கொள்ளச் சென்றனர். இவ்வாறு, நபி (ஸல்) அவர்கள் குறைஷியரை எதிர்கொள்ளச் சென்றது மதீனா வாழ்க்கையின் பன்னிரண்டாவது மாதத்தின் தொடக்கத்தில் ஸஃபர் மாதத்திலாகும்.

ஆனால், அங்கு யுத்தம் நடைபெறவில்லை. இந்த

நிகழ்வுக்கு "அல் - அப்வா போர்" என்றும், "வத்தான் போர்" என்றும் கூறப்படும்.

**கைபர் வெற்றி**

"கைபர்" என்பது மதீனாவிலிருந்து ஷாம் (சிரியா) நாட்டிற்கு செல்லும் பாதையில் "தொண்ணூற்றி ஆறு மைல்" தொலைவிலுள்ளது. அங்கு யூதர்கள் நல்ல வசதி வாய்ப்புகளுடனும், கோட்டைக் கொத்தளங்களுடனும், பேரீச்சம் மரங்கள், வயல்கள், தோப்புகள் சகிதம் நிலங்களும் வழங்கப்பட்டு வாழ்ந்து வந்தனர். இவர்களின் முக்கிய பணியே முஸ்லிம்களுக்கும், இஸ்லாத்திற்கும் இடையூறு செய்வதுதான்.

மதீனாவின் புறநகர் பகுதியில் வசிக்கும் யூதர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அவ்வப்போது மதீனாவிலுள்ள முஸ்லிம்களுக்கு தொல்லைகள் தந்த வண்ணமிருந்தனர். இதனால் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி ஏழாமாண்டு முஹர்ரம் மாதம் (கி.பி.628 ஆகஸ்டு மாதம்) 1500-க்கும் அதிகமான முஸ்லிம்களுடன் "கைபர்" நோக்கி புறப்பட்டார்கள்.

கைபரில் பத்து நாட்கள் முற்றுகையிட்டார்கள். அது சமயம் முஸ்லிம்களில் பதினைந்து நபர்கள் வீரமரணம் அடைந்தார்கள். யூதர்களில் தொண்ணூற்றி மூன்று பேர் கொல்லப்பட்டார்கள். "கைபர்" வெற்றி கொள்ளப்பட்டது. அது "ஸஃபர்" மாதம் என்பதை மறந்திடக் கூடாது.

இப்போரில் நபி (ஸல்) அவர்கள் வெற்றி வாகை சூடியதை பொறுத்துக் கொள்ள முடியாத யூதப் பெண், நபி (ஸல்) அவர்களை கொன்றொழித்திட வேண்டுமென்றே கீழ்த்தரமான எண்ணத்தில் விஷம் கலக்கப்பட்ட இறைச்சியை உணவாக வழங்கினாள். நபித்தோழர் ஒருவர் அதனை உண்டு மரணமானார். நபி (ஸல்) அவர்களும் ஒரு கவளம் சாப்பிட்டார்கள். அது அவர்களின் மரணவேளையில் அவர்களுக்கு வேதனை தந்தது.

கைபரின் மகத்தான வெற்றி யூதர்களின் விஷமத்தை சற்று குறைத்தது. அடங்கிப் போய் விட்டார்கள். யூதர்களின் விஷமத்தனத்திலிருந்து முஸ்லிம்கள் சுதந்திரமடைந்தார்கள். உண்மையில் ஸஃபர் மாதம் பீடை என்றிருக்குமானால் அம்மாதத்தில் வெற்றி கிடைத்திருக்குமா? முஸ்லிம்களுக்கு நிம்மதி கிடைத்திருக்குமா?

**நபி (ஸல்) அவர்களுக்கும் அன்னை கதீஜா (ரளி) அவர்களுக்கும் திருமணம்**

25 வயதுடைய இளைஞர் நபி (ஸல்) அவர்களுக்கும், விதவையான கதீஜா (ரளி) அவர்களுக்கும் திருமணம் நடந்தேறியது இந்த ஸஃபர்

மாதத்தில் தான். அதனால், அவர்களின் மன வாழ்வினில் என்ன குறைகள் குறுக்கிட்டது? அவர்களின் வாழ்வினில் சோதனைகள், கஷ்டங்கள், சிரமங்கள் ஏற்பட்டனவா? அவர் களுக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் போய் விட்டதா? சண்டை - சச்சரவுகள் ஏற்பட்டு இருவரும் பிரிந்து விட்டனரா? இல்லையே!

இப்ராஹீம் என்ற மகனைத் தவிர மற்ற எல்லா குழந்தைகளும் காஸிம், ஜைனப், ருகைய்யா, உம்மு குல்சும், ஃபாத்திமா, அப்துல்லாஹ் இவர்கள் அனைவரும் நபி (ஸல்) அவர்களுக்கும் அன்னை கதீஜாவிற்கும் பிறந்தார்கள்.

இருபத்தைந்தாண்டு காலம் சந்தோஷமாக, மகிழ்ச்சியாக இருவரும் இணைந்தே குடும்பம் நடத்தினார்கள். அன்னை கதீஜா (ரளி) மரணமாகும் சமயம் வயது 65. நபி (ஸல்) அவர்களுக்கு வயது 50.

ஹள்ரத் கதீஜா (ரளி) அவர்களின் மரணத்திற்கு பின்பே நபி (ஸல்) அவர்கள் மறுமணம் செய்தார்கள். இருப்பினும் கதீஜா (ரளி) அவர்களை நபி (ஸல்) அவர்கள் மறந்திடாமல் மற்ற மனைவியரிடமும் கதீஜா (ரளி) அவர்களை நினைவு கூர்ந்து கொண்டே இருப்பார்கள். தன் வீட்டில் ஏதாவது விசேஷமான உணவு தயார் செய்தால் அதனை கதீஜா (ரளி) அவர்களின் தோழிகளுக்கு கொடுத்தனுப்புவார்கள்.

இன்றைக்கு காலம், நேரம் பார்த்து, ஸஃபர் மாதத்தை ஒதுக்கிவிட்டு நல்ல நாள், நல்ல மாதம், நல்ல நேரம் என்று தேர்வு செய்து திருமணம் செய்கிறார்களே அவர்களில் எத்தனை ஜோடிகள் ஒற்றுமையாக, ஒன்றுபட்டு சந்தோஷமாக, மகிழ்ச்சியாக குடும்பம் நடத்துகின்றனர்? என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்.

### ஹள்ரத் அலீ (ரளி) அவர்களுக்கும் - ஹள்ரத் ஃபாத்திமா (ரளி) அவர்களுக்கும் திருமணம்

நபி (ஸல்) அவர்கள் அன்னை கதீஜா (ரளி) அவர்களை ஸஃபர் மாதத்தில் திருமணம் செய்ததுபோன்றே கதீஜா (ரளி) அவர்களின் மூலமாக தனக்கு பிறந்த அருமை மகளான ஃபாத்திமா (ரளி) அவர்களை ஹள்ரத் அலீ (ரளி) அவர்களுக்கு அதே ஸஃபர் மாதத்தில்தான் திருமணம் செய்து கொடுத்தார்கள்!

இத்தம்பதிகள் நிம்மதியாக, சந்தோஷமாக, மகிழ்ச்சியாக வாழவில்லையா? குழந்தை பாக்கியம் பெறவில்லையா? அருமையான இருபெரும் ஷஹீதுகளான ஹள்ரத் ஹஸன் (ரளி) - ஹுஸைன் (ரளி) ஆகியோரை பெற்றெடுத்தார்கள். சுவனத்தில் பெண்களுக்கெல்லாம் தலைவியாக ஃபாத்திமா (ரளி) அவர்கள்

ஆக்கப்பட்டார்கள். இது எவ்வளவு பெரிய சிறப்பு!

**ஹிஜ்ரத் செல்லுதல்**

நபித்துவம் கிடைத்த 14 ஆம் ஆண்டு ஸஃபர் மாதம் பிறை 27-ம் இரவு. கி.பி. 622. செப்டம்பர் 12. நபி(ஸல்) அவர்கள் தன் வீட்டை விட்டும் வெளியேறினார்கள். எதற்காக? புனித மதீனா நகருக்கு ஹிஜ்ரத் செய்வதற்காக. ஆக, ஹிஜ்ரத் பயணத்தின் துவக்கம் "ஸஃபர் மாதம். அந்த பயணம் ஏதாவது தோல்வியைத் தந்ததா? இல்லையே? ஹிஜ்ரத்திற்கு பின்புதான் முஸ்லிம்களுக்கு ஒரு புத்துணர்வு ஏற்பட்டது. சகோதரத்துவம் மலர்ந்தது.

ஆக, ஸஃபர் மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் யாவும் வெற்றிக் கனியை தட்டிச் சென்றன. நபி(ஸல்) அவர்கள் காலத்தில் ஸஃபர் மாதத்தில் திருமணங்கள் நடந்தேறின. காலங்கள் - நேரங்கள் - நாட்கள் வெற்றி, தோல்வியை நிர்ணயிப்பதில்லை. நோய் நொடியை ஏற்படுத்துவதில்லை. அந்த ஆற்றல் அவைகளுக்கு வழங்கப்படவுமில்லை. பீடை மாதம், பீடை நாள் என்று ஒன்று இருக்குமானால் அது நபி(ஸல்) அவர்களின் மரணமான "ரபீயுல் அவ்வல்" மாதம், திங்கட் கிழமை என்று சொல்ல வேண்டும். (நஊதுபில்லாஹி). ஆனால், அப்படி யாரும் சொல்வதும் இல்லை. சொல்லவும் கூடாது. ஆனால், மனிதர்களில் சிலர் தாங்களாகவே சில நாட்களை, காலங்களை, நேரங்களை "பீடை" கெட்ட நேரம் என்று கூறி ஒதுக்கி விடுகின்றனர். உண்மையில் அந்த நாட்களில், நேரங்களில் "பீடை" இல்லவே இல்லை. மாறாக, "பீடை" இருக்கின்றது என்று கூறுபவர்கள்தான் "பீடை" பிடித்தவர்கள் என்று விளங்கிக் கொள்ள வேண்டும். அத்தகைய "பீடை"யானவர்களை விட்டும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!

## உம்மத் மீது நபிகளாரின் பாசம்

"ஒவ்வோர் இறைத்தூதருக்கும் அவர் தம் சமுதாயத்திற்காகப் பிரார்த்தித்துக் கொள்ள அங்கீகரிக்கப்பட்ட பிரார்த்தனை ஒன்று வழங்கப்பட்டுள்ளது. நான் எனது பிரார்த்தனையை மறுமையில் என் சமுதாயத்திற்கு பரிந்துரை செய்வதற்காகப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.

(நூல் : புகாரி - எண் : 6304)

தருபவர் : அல்ஹாஜ் **கே.கே.சையது சுலைமான்,** தென்காசி.

# வரலாறு திரும்பத் திரும்ப நிகழும்

கடந்த காலத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பாத எந்தச் சமூகமும் தன் முகவரியைத் தொலைத்துவிடும். ஒரு சமூகத்தின் நிகழ்கால வாழ்க்கையை மதிப்பிடுவதற்கான உரைகல்லும் அளவுகோலும் அதன் கடந்த கால வரலாறுதான்.

கடந்த காலத்தின் துணை கொண்டு நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளவும் அதன் அடிப்படையில் வருங்காலத்தைக் தட்டியெழுப்பவும் பயன்படுகிற சமூக அறிவியலே வரலாறு.

வரலாறு என்பது இறந்த காலம் பற்றியது, பழமை சார்ந்தது, கழிந்துபோன வாழ்க்கை பற்றியது என்றெல்லாம் சொல்லப்படுவதால், நம்மில் சிலர் வரலாற்றை நிகழ்காலத்திற்குச் சம்பந்தம் அற்றது என்று பிழையாகக் கருதிக் கொள்வதுண்டு.

வரலாறு என்பது இறந்த காலத்தில் வேர் பாய்ச்சி நிகழ்காலத்தை வழிநடத்தும் வல்லமை படைத்தது. ஏன், எதிர்காலத் திட்டமிடலுக்கும் வரலாறே பாடம் போதிப்பதால், அது முக்காலத்தையும் பின்னிப் பிணைத்து நிற்கக்கூடியது. வாழ்ந்து முடித்தவர்கள், வாழ்வோருக்கும் வாழவிருப்போருக்கும் விட்டுச்சென்ற விலைமதிக்க முடியாத சொத்து அது.

இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி என்று போற்றப்படுகின்றன. வரலாறும் அப்படித்தான். சொல்லப்போனால், வரலாறு ஓர் அதிசயக் கண்ணாடி. நம்முடைய முகம் நேற்றைக்கு எப்படி இருந்தது என்பதை இன்றைக்குக் காட்டும் அற்புதமான கண்ணாடி அது.

வரலாறு என்பது ஒரு சமூகத்தின் நினைவாற்றல் ஆகும். மிகப்பெரும் விபத்துகளில் சிக்கி, அதிர்ச்சியில் தாம் யார் என்பதே மறந்துபோகும் அளவுக்குச் சிலர் நினைவிழப்புக்கு ஆளாவதுண்டு. அவ்வாறு யாரும் துணைக்கில்லாத ஓரிடத்தில் இந்தப் பாதிப்புக்கு ஆளாகி நினைவாற்றலை ஒருவர் அறவே இழந்துவிட்டால் அவரின் நிகழ்காலமும் எதிர்காலமும் எவ்வளவு தூரம் கேள்விக்குறியாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஒரு சமூகத்தை அழிக்க வேண்டுமானால் அதற்கு ஆயுதங்களோ அணுகுண்டு

களோ தேவையில்லை. அதன் வரலாற்றை அழித்தால் மட்டும் போதும். அதனால்தான் இந்து மதவெறி அமைப்பினர் இந்தியாவின் உண்மையான வரலாற்றுக்கு காவிச் சாயம் பூசுவதில் முனைப்பு காட்டினர்.

1998-ல் பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்ததைத் தொடர்ந்து பள்ளி, கல்லூரி பாடத்திட்டங்களைத் தம் கொள்கைகளுக்கு இசைவாக மாற்றியமைக்க முயன்றனர். அப்போது, சங்கப் பரிவாரங்களின் வரலாற்றுத் திரிபுகளை எதிர்த்த அறிவுஜீவிகளும் கல்வியாளர்களும் பலவிதமான தாக்குதல்களை எதிர்கொள்ள நேர்ந்தது.

சங்பரிவார்கள், தாம் மாற்றிக் காட்ட விரும்பிய இந்திய வரலாற்றை ஏற்க மறுத்த வரலாற்று அறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்களைத் திட்டமிட்டு அவமானப்படுத்தினர். அந்த ஆய்வாளர்கள் வழங்கிய ஆதாரபூர்வமான வரலாற்றை அங்கீகரிக்காமல் உதாசீனப்படுத்தினர்.

இந்திய வரலாற்று ஆய்வு மன்றத்தின் ஆதரவில், பேராசிரியர்கள் சுமித் சர்க்கார், கே.என்.பணிக்கர் ஆகியோரின் தலைமையில் நடந்துகொண்டிருந்த 'விடுதலையை நோக்கி' என்ற இந்திய விடுதலைப் போராட்டம் சார்ந்த வரலாற்று ஆவண ஆய்வுத் திட்டம் முடக்கப்பட்டது.

இந்த வரலாற்றாய்வாளர்களின் தாக்கம் இந்தியக் கல்வித் திட்டத்தில் இருந்துவிடக்கூடாது என்பதற்காக தேசிய கல்வி ஆய்வு மற்றும் பயிற்சி மன்றம் மிக முனைப்புடன் செயல்பட்டது.

எனவே, ஒரு சமூகத்தின் வரலாற்றைப் பாதுகாத்தல் என்பது அந்தச் சமூகத்தின் ஆணிவேரைப் பாதுகாப்பதற்கு இணையானது. வரலாற்றை இழந்த அல்லது வரலாறு திரிக்கப்பட்டுவிட்ட ஒரு சமூகம் வேரை இழந்த அல்லது வேர் அறுக்கப்பட்ட விருட்சம் போன்றது. வரலாற்றை இழந்த இனம் வாழ்வை இழந்த இனம். எனவேதான் வரலாற்றைப் பதிவு செய்வது மிகவும் தலையாய பணியாகும்.

"வரலாற்றுக் கலை என்பது அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டிய ஒரு கலையாகும். இதற்காகக் கூடுதல் அக்கறை செலுத்துவது அவசியம்" என்று இப்னு கஸீர்(ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(நூல் : அல்பிதாயா வந்நிஹாயா)

அந்த வகையில், நல்லதோ, கெட்டதோ வரலாற்றைப் பதிவு செய்தால்தான் அதிலிருந்து அடுத்த தலைமுறைக்குப் பாடமும் எச்சரிக்கையும் கிடைக்கும். எனவே, எந்தவொரு பிரச்சினைக்கும் பதிவு செய்யப்பட்ட

நமது பழைய கால வரலாற்றில் தீர்வு இல்லாமல் போகாது. அதைக் கண்டுபிடிக்காதது நாம் செய்கின்ற தவறாகும்.

"ஒரு சமூகம் தனது வரலாற்றை முதுகில் சுமந்து கொண்டே முன்னோக்கிச் செல்கிறது" என்றார் அல்லாமா இக்பால் அவர்கள்.

ஒரு சமூகத்தின் நிகழ்கால வெற்றி மற்றும் முன்னேற்றத் திற்கு, அவர்களின் கடந்த கால அனுபவங்களுடன் அறுக்க முடியாத தொடர்பு உண்டு. கடந்த கால அடித்தளங்கள் மீதே நிகழ்காலத்தின் கட்டமைப்பு சாத்தியமாகிறது. எனவேதான் வரலாற்று அறிவும் உணர்வும் ஒரு சமூகத்தின் அடுத்த கட்ட நகர்வுக்கு அவசியமானவை என்று வலியுறுத்தப்படுகிறது.

திருக்குர்ஆன் ஒரு வரலாற்று நூல் அல்ல. ஆயினும், வரலாற்றின் தேவையை உணர்த்தும் வேதவரிகளையும் சங்கதிகளையும் அது சுமந்திருக் கின்றது. குர்ஆனைப் பொறுத்த மட்டில் வரலாறுகள் அதில் வெளிப்படையாகவே இடம் பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட வரலாற்றை மிகவும் அழகிய வரலாறு (அஹ்சனுல் கஸஸ்) என்று அது விதந்து பேசுகிறது.

திருக்குர்ஆனின் மொத்த முள்ள 114 அத்தியாயங்களில் 22 அத்தியாயங்கள் முற்கால மக்கள் வரலாறு தொடர்புடையவையாகும். முற்கால மக்கள், சமூகங்கள், இடங்கள் தொடர்புடைய பெயர்கள் திருகுர்ஆனில் பல இடங்களில் வருகின்றன.

இறைத்தூதர் ஹஸ்ரத் ஈசா (அலை) அவர்களின் பெயர் (ஈசா + மஸீஹ்) திருகுர்ஆனில் 47 இடங்களிலும் ஹஸ்ரத் மூசா (அலை) அவர்களின் பெயர் 131 இடங்களிலும், ஃபிர்அவ்ன் எனும் பெயர் 74 இடங்களிலும், ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களின் பெயர் 34 இடங்களிலும் இடம்பெறுகின்றன. அப்படியாயின், அவர்களின் வரலாறு அவ்வளவு தூரத்திற்குத் திரும்பத் திரும்பப் பேசப்படுகிறது என்பதே அதன் பொருளாகும்.

**"பூமியில் சுற்றுப் பயணம் செய்து, [இறைத்தூதர்களை] ஏற்க மறுத்தவர்களின் இறுதி முடிவு எப்படி ஆயிற்று என்பதை(ச் சீர்தூக்கிப்) பாருங்கள்".**

-அல்குர்ஆன் (6:11)

எனும் இறை வசனமும்

**"[இறைத்தூதர்களான] அவர்களின் வரலாறுகளில் அறிவுடையோருக்குப் படிப்பினை உள்ளது.**

- அல்குர்ஆன் (12:111)

எனும் இறைவசனமும்,

வரலாற்றின் எச்சரிக்கையும் பாடமும் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்பதை உணர்த்துகின்றன. வரலாற்று உணர்வு இல்லாத ஒரு சமூகம்

திரும்பத் திரும்பத் தவறிழைக் கவும் இடறி விழவும் வாய்ப்பு உண்டு.

"நாம் ஏன் வீழ்ந்தோம் என்ற காரணத்தைப் புரிந்து, அதற்கான தீர்வைக் கடந்த கால வரலாறுகளிலிருந்து தேடிப் பெறாமல் வெறுமனே எழுந்து நிற்கும் எந்தச் சமூகமும் மீண்டும் விழக்கூடும்" என்று மூதறிஞர் முஹம்மத் அல்ஃகஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

"சரித்திரம் தானாகவே திரும்ப திரும்ப நிகழ்கிறது" என்று கார்ல்மார்க்ஸ் கூறினார். எந்த வகையில் வரலாறு தன்னைத் தானே மீளுருவாக்கம் செய்து கொள்கிறது. இந்த விதியின் படி, மனித சமூகம் இன்றைய தினம் சந்திக்கும் எந்தவொரு பிரச்சினையும் புதியதல்ல. பிரச்சினைகள் மனித சமூகத் திற்குப் பழமையானவை. வேண்டு மானால் அவை, இக்காலத்துக் கேற்ப நவீன வடிவம் எடுத்தி ருக்கலாம். ஆனால், பிரச்சினை பழையதுதான். ஏனெனில், மனித உணர்வு எப்போதும் ஒன்றுதான்.

ஆதிகால மனிதரின் பிரச்சினைகளுக்கு எது தீர்வாக அமைந்ததோ அதுதான் இன்றைக்கும் என்றைக்கும் தீர் வாக அமையும். எனவே, நாம் தீர்வைத் தேடி மண்டையை உடைத்துக்கொள்ளத் தேவை யில்லை. கடந்த கால வர லாற்றை அணுகினாலே போதும். தேவையான பாடமும் தீர்வும் அதில் கிடைக்கும்.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்

"ஆரம்ப கால முஸ்லிம் சமூகத்தின் சீர்திருத்தத்திற்கு எது வழிவகுத்ததோ அதை விடுத்து வேறெதுவும் இன்றைய முஸ்லிம் சமூகத்தின் சீர்திருத்தத் திற்குக் காரணமாக இருக்காது". (நூல்: அஷ்ஷிஃபா - காழீ இயாழ்)

உலகத்தில் தங்களை நேர்மையாகவோ நேர்மை தவறியோ நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டவர்கள் யாராக இருந் தாலும் அவர்கள் வரலாற்றை நிச்சயம் பயன்படுத்தியிருப் பார்கள். ஒன்று, ஒழுங்குமுறை யாகப் பயன்படுத்தியிருப்பார் கள். அல்லது முறைகேடாகப் பயன்படுத்தியிருப்பார்கள்.

மொத்தத்தில், வரலாற் றைப் பயன்படுத்திதான் நாம் நம்மை நிலைப்படுத்திக் கொள்ள முடியும். வரலாறுதான் கடந்த காலத்தின் வெளிச்சத்தைப் பெற்று நிகழ்காலத்திற்கு வழி காட்டி எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை நம்முள் விதைக்கும்.

எனவே, நாம் வரலாறு படைக்க வேண்டுமானால், முதலில் நாம் சார்ந்த உண்மை வரலாற்றைப் படிப்போம். உலக அளவில் அந்த உண்மை வரலாற்றை மீட்டெடுப்போம்.

பிரார்த்தனை...

# துஆ மஜ்லிஸ்

## பரிபூரண சுகம் பெற...

எங்கள் குடும்பத்தலைவி அல்ஹாஜ்ஜா **ஷம்சாத் பேகம்** அவர்களுக்கு ஏற்பட்டுள்ள சுகர் மற்றும் அதன் தொடர் வியாதிகளிலிருந்து பரிபூரண ராஹத் கிடைத்து, அவர்கள் தங்களின் பேரன், பேத்திகளோடு மகிழ்ச்சியாகவும், வணக்க வழிபாடுகளுடனும் வாழ துஆ செய்யும்படி குரல் வாசகர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**- வலங்கைமான் குடும்பத்தார்.**

நஜீர் அஹமது - மங்கலம்; சதக்கத்துல்லாஹ் மளிகை - மங்கலம்; எம்.அன்வர் அலீ - விழுப்புரம்; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; அன்சாரி - உடுமலை; அ.ராபியத் பஸரியா - மூணார்; ராகிமா - தாராபுரம்; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, அப்துஸ் ஸலாம் - மதுரை; பி.சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; சந்தா எண் F595 - திருச்சி; சந்தா எண் J136 - குளித்தலை; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; அ.ஜெய்புனிஷா - திருச்சி; ஜாகீர் உசேன் - மங்கலம்; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; சாதிக் - மண்ணரை; ஜே.ரஹ்மத் நிஷா - அன்னவாசல்; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; ஜே.ரஹ்மத் நிஷா - அன்னவாசல்; எம்.பாத்திமா ரஸ்வின் - அரவக்குறிச்சி; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; எஸ்.நூருன்னிஸா - தஞ்சாவூர்; ஹபீபுல்லாஹ் - மங்கலம்; சார்மிளா - பெரியகுளம்; நாகூர் மீரான் - மானூர்; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; பானு - ஆத்தூர்; ரபியுதீன் - ஆத்தூர்; அ.ஃபாரூக் அலீ(எ) பாஷா - ஆத்தூர்; அ.மஹபூபுன்னிஸா - தஞ்சாவூர்; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - மதுரை; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ,

முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் – மதுரை; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் – சென்னை; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் – இராமநாதபுரம்; காஜா, நஸீமா, நஸீரா, நிலோஃபர் – மதுரை; முஹம்மது ரஃபீ, ஷமீமா, அய்மன் முஹம்மது, அர்ஹம் முஹம்மது – சவூதி; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் – ஒத்தக்கடை; சந்தா எண் H1731 – கீழக்கரை; எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு – மதுரை; பாத்திமா பானு, பாதுஷா, ரெக்ஸோனா ஒஜீர், ஷேக் இப்ராஹிம், சதக்கத்துல்லாஹ். மதுரை

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...**

# இதயம் பேசுகிறது!

நாங்கள் சொந்தமாக வீடு வாங்க வேண்டி துஆ மஜ்லிஸில் துஆ செய்யக் கோரியிருந்தோம். வல்ல அல்லாஹ்வின் கிருபை யாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தினாலும் நாங்கள் சொந்த வீடு வாங்கி விட்டோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். துஆ செய்த அனைத்து உள்ளங் களுக்கும் மிக்க நன்றி! ஜஸாகுமுல்லாஹு கைரா! **சி.அப்பாஸ்** - கோயம்புத்தூர்.

## முஸ்லிம்களில் சிறந்தவர்!

“ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம், “முஸ்லிம்களில் சிறந்தவர் யார்?” என்று கேட்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “எவருடைய நாவிலிருந்தும், கரத்திலிருந்தும் மற்ற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்றிருக்கிறார்களோ அவரே (முஸ்லிம்களில் சிறந்தவர்)” என்று பதிலளித்தார்கள்.”

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ் (ரளி) அவர்கள் (ஸஹீஹ் முஸ்லிம்)

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

கேரளா அத்திக்கோடு மர்ஹூம் ஹஸன் முஹம்மது மாஸ்டர் (ரஹ்) அவர்களின் அன்பு மனைவி ஜனாபா ராபியா பீபி அவர்கள் 12.02.23 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி பதினி ஜனாப் பீ.ஏ.ஷாகுல் ஹமீது (என்ற) பிச்சையப்பா அவர்களின் அன்பு மனைவியும், "ஜம் ஜம் ரெடிமேட்ஸ்" ஜனாப் பீ.எஸ்.ஃபாரூக் அவர்களின் தாயாருமான ஜனாபா மரியம் தாய் அவர்கள் 16.02.23 அன்றும்,

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் புஞ்சை தலையூர் முன்னாள் செயலாளர் ஜனாப் ஹெச். காஜா மைதீன் அவர்கள் 01.06.23 அன்றும்,

கேரளா மாநிலம் கொடுந்திரப்பள்ளி ஜனாப் அப்துல் ரஷீத் (ஓய்வு தாசில்தார்) அவர்கள் 05.06.23 அன்றும்,

கேரளா மாநிலம் பழயனூர் பாரக்கல் ஜனாப் மொய்தீன் குட்டி அவர்கள் 07.06.23 அன்றும்,

கேரளா மாநிலம் அத்திக்கோடு "நிலா மன்ஜில்" மர்ஹூம் எம்.ஏ.ஹமீது மாஸ்டர் (ரஹ்) அவர்களின் அன்பு மகனாரும், "சித்தூர் சுகர் பாக்டரி"யின் முன்னாள் மேனேஜிங் டைரக்டருமான ஜனாப் ஏ.அப்துல் ஹலீம் அவர்கள் 19.06.23 அன்றும்,

கேரளா மாநிலம் அத்திக்கோடு பள்ளிமேடு ஜனாப் வி.நசீர் (தமிழ்நாடு C.T.C. டிரைவர் ஓய்வு) அவர்கள் 21.06.23 அன்றும்,

பள்ளபட்டி அன்னம்பாரி மர்ஹூம் அப்துல் ஹமீது (ரஹ்) அவர்களின் அன்பு மகனாரும், மர்ஹூம் (பெட்டிகோட்) ஜனாப் பஷீர் (ரஹ்) அவர்களின் அன்பு தம்பியும், அன்னம்பாரி சேலம் காரி சித்தீக் அலீ ஹள்ரத் மற்றும் பள்ளபட்டி "ஸபீலுல் குர்ஆன்" ஹிப்ளு மதரஸா நிறுவனர் சைமீரா மவ்லானா அப்துல்லாஹ் ரஷாதீ ஹள்ரத் ஆகியோரின் அருமை மாமனாரும், விருத்தாசலம் கடலூர் ரோடு பள்ளிவாசலில் இமாமாக நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் ஏ.ஏ.முஹம்மது சாலிஹ் மன்பயீ ஹள்ரத் அவர்கள் 27.06.23 அன்றும்,

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் பல்வேறு சமுதாயப்பணிகளை முன்னின்று செய்தவரும், குர்ஆனின் குரல் போன்ற சன்மார்க்க இதழ்களை பரப்புவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, "கோல்டன் ஏஜென்ஸீஸ்" என்ற பெயரால் பிரபலமான, அரசு மீன்வளத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான ஜனாப் H.அப்துர் ரஹீம் அவர்கள் 02.07.23 அன்றும்,

ஈரோடு மாவட்டம் பெரிய அக்ரஹாரம் மர்ஹூம் முஹம்மது அப்துல் காதர் (கொடுமுடி ஹஜ்ரத்) (ரஹ்) அவர்களின் அன்பு மகளாரும், மர்ஹூம் ஜெய்னுல்லாபுதீன் (ரஹ்) அவர்களின் அருமை மனைவியுமான ஜனாபா கண்ணம்மா (எ) ஹபீபா பீவி அவர்கள் 06.07.23 அன்றும்,

தமிழகத்தின் பல்வேறு அரபு கல்லூரிகளில் பேராசிரியராக பணியாற்றியவரும், புதுக்கோட்டை "ஜாமிஆ சிராஜும் முனீர்" அரபு கல்லூரியின் முதல்வரும், புதுக்கோட்டை மாவட்ட அரசு காஜியும், புதுகை மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபையின் கௌரவத் தலைவரு மான மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் என்.எம்.அமானுல்லாஹ் இம்தாதி ஹள்ரத் அவர்கள் 12.07.23 அன்றும்,

புதுக்கோட்டை, திருச்சி, கோட்டைப்பட்டிணம் போன்ற ஊர்களில் பிரபலமான "A.R.M." நிறுவனத்தின் உரிமையாளர் அல்ஹாஜ் A.ஹஸன் முஹம்மது அவர்களின் மூத்த மகனாரும், புதுக்கோட்டை மாவட்ட சமுதாய முன்னோடிகளில் ஒருவரும், சமுதாயத்தின் பன்னூறு ஏழைகளின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்தவரும், தங்கள் நிறுவன விளம்பரங்கள் மூலம் குர்ஆனின் குரலை அலங்கரித்தவரும், உலமாபெருமக்கள் மீது அதிகப் பற்றும் - பாசமும் கொண்டிருப்பதுடன், அவர்களைக் கண்ணியப்படுத்து வதில் மிக உயர்ந்த பண்பு கொண்டவருமான அல்ஹாஜ் H.முஹம்மது அப்துல்லாஹ் (என்ற) பாபு அவர்கள் 12.07.23 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

## சொர்க்கம் செல்ல வேண்டுமா?

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "யா ரசூலல்லாஹ்! சொர்க்கத்தில் நுழையச் செய்யும் அமலை சொல்லுங்கள்" என்று வேண்டினார். அதற்கு, "நீர் அல்லாஹ் ஒருவனையே வணங்க வேண் டும். அவனுக்கு எவ்விதத்திலும் இணை வைக்கக்கூடாது. தொழுகையை நிலை நாட்ட வேண்டும். ஜகாத் கொடுக்க வேண் டும். உறவுகளை ஆதரித்து நடக்க வேண்டும்" என்று நபி ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (புகாரி)

**தருபவர் : அல்ஹாஜ் கே.கே.செய்யது சுலைமான்,** தென்காசி.

# வாசகர் வட்டம்

அட்டையில் அமெரிக்காவின் உமர் இப்னு அல் கத்தாப் மஸ்ஜிது கண்களைக் குளிர வைத்தது.

தலையங்கத்தில் பாரதீய ஜனதாவின் கபட நாடகத்தையும், பித்த லாட்டங்களையும் தோலுரித்துக் காட்டிய விதம் அருமையாகும்.




பதில்கள் பகுதியின் கேள்வி - பதில்கள் பத்தரை மாற்றுத் தங்கமாய் ஜொலித்தன.

நல்லடியார்களின் பண்புகள் என்ற உயரிய குணங்களைப் பட்டியலிட்ட பாங்கு பளபளப்பாய் இருந்தது. இதை எழுதிய மவ்லவீ எஃப். ஜமால் பாகவியைப் பாராட்டுகிறேன்.

பரவலாக வந்த துணுக்குச் செய்திகளும் நெஞ்சில் நிறைந்து மணம் வீசின.

பேராசிரியர் யாஸீன் எம்.ஏ., பி.எல்., எழுதிய இஸ்லாம் கூறும் தாய்ப்பால் குழந்தைகள் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் பெரிதும் உதவும் வண்ணம் இருந்தது.

அ.ஷேக்மொஹம்மது,
வேடசந்தூர்.

எம்.ஜே.அன்வரி எழுதிய "என் நெஞ்சைத் தொட்டவை" உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சிபட வைத்தது. காரணம் இவை அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஏற்பட்ட அற்புதங்கள் எனலாம்.

அதேபோல் மூன்று பெண்களின் சாமர்த்தியமும் சிந்திக்கத் தக்கது. குர்ஆன் ஆயத்துகளை, நபிமொழியைக் கூறி, வேலை கேட்ட மூவரின் சமயோசித வார்த்தைகள் அருமை.

"மார்க்கத்தை மறைக்காதீர்" என்ற தலைப்பில் குர்ஆன் வசனத்தை விளக்கி எழுதியிருந்தது இக்கால நிலைக்கு அவசியம். எந்நேரமும் தேடல் பணம் தேடல் என்ற சூழ்நிலை மிகைத்து வருகின்றது. அதே வேளை குறைந்தபட்சமாவது மார்க்க விளக்கம் மக்கள் பெற்றிட தேவையானவற்றை மட்டும் கூறுவது தேவையின் அவசியமாக உள்ளது. "ஸம்ஸம் அகிலம் வியக்கும் அதிசயம்" புனித நீர் பற்றி அது உண்டான விபரம், அளவுகள் மற்றும் அன்று சஹாபாக்கள் பயன்படுத்திய வழிமுறைகள் இன்னும் பல அரிய செய்திகள் படித்தறிய பயனுள்ளதாக இருந்தது. வருங்கால இளைஞர் சமுதாயமும் இதனை விளங்கிடுவது அவசியம்.

பா.ஹாஜிமுஹம்மது,
சேந்தமங்கலம்.

குர்ஆனின் குரல் சிறப்பாக இருக்கிறது. குர்ஆனின் குரல்

தங்கு தடையின்றி நம் சமுதாய மக்களுக்கு தொடர்ந்து சேவை யாற்றிட துஆ செய்கிறேன். நம் சமுதாய மக்கள் குர்ஆனின் குர லின் அருமை புரிந்து வாங்கிப் படித்து நற்பயனடைய அல்லாஹ் கிருபை செய்வானாக!

அல்ஹாஜ் **சுல்தான் செய்யது முராதுகான்,**
கீழக்கரை.

“இதயம் காப்போம்! இனிமை யாக வாழ்வோம்” கட்டுரை மிக்க பயனுள்ளதாக இருந்தது. இதனை வெளியிட்ட குர்ஆனின் குரலுக்கு மிக்க நன்றி!

**பி.சதாம்உசேன்,**
சென்னை.

பிரதி மாதம் 4, 5ஆம் தேதிக் குள் குர்ஆனின் குரல் கிடைக்க வில்லையென்றால் எதையோ இழந்தது போல் உடன் அலுவலகத்திற்கு தொடர்பு கொள்வேன்.

குர்ஆனின் குரலில் எதைப் பாராட்டுவது? எதைக் குறை சொல்வது? அத்தனையும் நன் முத்துகள்! இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து பல நூற்றாண்டுகள் வெளி வர துஆ செய்கிறேன். குர்ஆனின் குரல் எனக்குப்பின் இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் என் பேரன், பேத்திகளும் படித்து பயன்பெற துஆ செய்ய அன்புடன் வேண்டுகிறேன்.

[illegible signature]

## இன்னாலில்லாஹி...

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“ஒரு நாள் இரவு நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா (ரளி) அவர் களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது காற்று வேகமாக வீசியதால் விளக்கு அணைந்து விட்டது. உடனே அண்ணலார் “இன்னாலில்லாஹி...” என்று கூறினார்கள். அதைச் செவியுற்ற ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் “இது ஒரு விளக்கு! இதற்குமா இன்னாலில்லாஹி...” என்றார்கள்.

“ஆயிஷாவே! முஃமினுக்கு சம்பவிக்கும் சின்னச் சின்ன இழப்புக்கும் அவன் இன்னாலில்லாஹி... கூறினால், அந்த இழப்பை ஈடு செய்து அதை விடச் சிறந்ததொன்றை அல்லாஹ் தருவான்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல் : புகாரி; முஸ்லிம்)

**தருபவர் :** அல்ஹாஜ் **கே.கே.செய்யது சுலைமான்,**
தென்காசி.

# கடைசிப்பக்கம்

**எம்.ஜே.அன்வரி**

நாளிதழ்களில் சங்கிகளின் லீலைகள் நாள்தோறும் தொடர்ந்து வெளி வந்து கொண்டிருக்கின்றன. பாரதீய ஜனதா கட்சியினரான சங்கிகளின் லீலைகள்தான் உலகம் முழுவதும் பேசப்படுகின்றன.

கஷ்மீரில் கோவிலில் வைத்து, சிறுமியை மிரட்டி பல நாட்கள் தொடர்ச்சியாக சங்கிகள் கற்பழித்தனர். இவர்கள் கைது செய்யப்பட்டபோது, இந்த கீழ்த்தரமான சங்கிகளுக்கு ஆதரவாக பாரதீய ஜனதா குண்டர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

குஜராத்தில் கர்ப்பிணிப் பெண்ணை கற்பழித்த சங்கிகளுக்கு நீதிமன்றம் சிறை தண்டனை விதித்தது. ஆனால், பாரதீய ஜனதா ஆட்சி செய்யும் குஜராத் மாநில அரசு அவர்களை சில ஆண்டுகளிலேயே விடுதலை செய்தது. விடுதலை செய்யப்பட்ட சங்கிகளுக்கு மாலை அணிவித்து, வரவேற்று இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர் மானங் கெட்ட சங்கிகள்.

மத்திய பிரதேசத்தில் பழங்குடி இளைஞர் முகத்தின் மீது பாரதீய ஜனதா குண்டன் சிறுநீர் கழித்துள்ளான். அதே மத்திய பிரதேச மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட ஒருவரை தன் செருப்பை நக்கச் செய்துள்ளான் சங்கிகளில் ஒருவன்.

பெண்களை கடத்துதல், கஞ்சா கடத்தல், கொலை செய்தல், திருடுதல், ஏமாற்றுதல், மோசடி செய்தல் அனைத்தும் சங்கிகளின் அன்றாடப் பணிகளாக உள்ளன.

தமிழகத்தில் பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் கே.பி.ராகவன், பொம்பள விஷயத்தில் சிக்கி இப்போது ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார்.

மேகலாயா கவர்னராக இருந்த தமிழக சங்கி சண்முகநாதன் கவர்னர் மாளிகையை பொம்பள விஷயத்தில் நாறடித்த விஷயம் இந்தியா முழுவதும் பேசப்பட்டது.

சென்ற மாதம் ஈரோட்டில் பாரதீய ஜனதா கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சிறப்புரை, தமிழ்நாடு மாநில பாரதீய ஜனதா தலைவர் நம்ம "ஆடு" அண்ணாமலை! வழக்கம் போல் பாரதீய ஜனதா கூட்ட மேடையில் தலைவர்கள் 60 பேர்.

பார்வையாளர்கள் 30 பேர். கூட்டம் முடியும்போது கூட்ட மேடையிலிருந்த 6 தலைவர்களின் மணிபர்ஸ்கள் அபேஸ்! உடனே, கூட்ட மேடையிலுள்ள அனைத்துத் தலைவர்களையும் சோதனை போட வேண்டும் என்று ஒரு மூத்த தலைவர் சொல்ல, மாநிலத் தலைவர் நம்ம "ஆடு" அண்ணாமலை மேடையில் எந்தத் தலைவரையும் சோதனை செய்ய வேண்டாம் என்றாராம். ஏற்கனவே, நம்ம கட்சியைப் பார்த்து சந்தி சிரிக்கிறது. இந்நிலையில், மேடையில் வைத்து தலைவர்களை சோதனை செய்தால் மானம் கப்பலேறி விடும் என்றாராம்.

தென்காசி மாவட்டம் செங்கோட்டையைச் சேர்ந்த பால கிருஷ்ணன் செங்கோட்டை நகர பாரதீய ஜனதா தலைவராவார். இவர் அருகேயுள்ள மேல கடையநல்லூரைச் சேர்ந்த பார்த்தசாரதி என்பவரிடம் சி.பி.ஐ.யில் எஸ்.ஐ. வேலை வாங்கித் தருவதாகக் கூறி பல இலட்சம் ரூபாய் பணம் பெற்றுக் கொண்டு போலியாக ஒரு பணி நியமன ஆணையையும் கொடுத்துள்ளார். இது குறித்துத் தெரிய வந்ததும் அதிர்ச்சியடைந்த பார்த்தசாரதி கடந்த மாதம் குடும்பத்துடன் தென்காசி கலெக்டர் மற்றும் எஸ்.பி. அலுவலகத்தில் புகார் கொடுத்தார். அதன் பேரில் வழக்குப்பதிந்த போலீஸார் அதிரடியாக பாலகிருஷ்ணனை கைது செய்தனர்.

இதைத் தொடர்ந்து நடத்திய விசாரணையில் திடுக்கிடும் பல தகவல்கள் வெளியாகின. பல இட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுக் கொண்டு சி.பி.ஐ. என்ற பெயரில் போலியாக பணி நியமன ஆணையைக் கடந்த 2018ஆம் ஆண்டு பாலகிருஷ்ணன் கொடுத்துள்ளார். இதற்காக அவ்வப்போது பார்த்தசாரதியிடமிருந்து பால கிருஷ்ணன் பணம் பெற்றுள்ளார். கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாக பார்த்த சாரதி சி.பி.ஐ. எஸ்.ஐ.யாகவே நினைத்து செயல்பட்டு வந்தார். இந் நிலையில், பாலகிருஷ்ணன், பார்த்தசாரதியிடம் கூறுகையில், "தீவிரவாதிகளை கண்காணிப்பதற்காக சி.பி.ஐ. பிரிவில் தனியாக ஒரு நுண்ணறிவுப் பிரிவு துவங்கப்பட்டுள்ளது. இதில் உங்களைப் போன்று பலரும் எஸ்.ஐ.யாகப் பணியாற்றி வருகின்றனர். இவ்வாறு பணி யாற்றுபவர்கள் வெளியில் யாரிடமும் தாங்கள் பணியாற்றும் விவரத்தைத் தெரிவிக்கக்கூடாது. அவ்வாறு தெரிந்தால் பின்னால் பணி யிலிருந்து நீக்கி விடுவார்கள். சம்பளமும் கிடைக்காது" என்றார். இதன் காரணமாகவே பார்த்தசாரதியும் இதை வெளியில் கூறவில்லை.

இதனிடையே பார்த்தசாரதியை நம்ப வைப்பதற்காக பாலகிருஷ்ணன் அவ்வப்போது சில நபர்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவர்களை இரகசியமாகப் பின்தொடர்ந்து சென்று

அவர்களது நடவடிக்கை குறித்து தனக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்; நான் அத்தகவல்களை மேலதிகாரிக்கு தெரிவித்து விடுவேன் என்று கூறியுள்ளார். பார்த்தசாரதியும் மிகுந்த சிரத்தை யெடுத்து இது போன்ற பணிகளைச் செய்து வந்துள்ளார். ஒரு சமயம், பாலகிருஷ்ணன் குறிப்பிட்ட ஒரு நபரின் பெயரைச் சொல்லி அவர் இரயிலில் பயணம் செய்வதாகவும், அவரைப் பின்தொடர்ந்து சென்று அவரது நடவடிக்கைகள் குறித்து எனக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். ஆனால், பார்த்தசாரதி சென்றபோது இரயில் அதற்கு முன்பாகவே புறப்பட்டுச் சென்று விட்டது. இதனை பாலகிருஷ்ணனிடம் கூறியபோது "அடடா! பணியில் இப்படி அஜாக்கிரதையாக இருந்தால் எப்படி மேலதிகாரியிடம் நல்ல பெயர் வாங்க முடியும்? இது மிகப் பெரிய தவறாகும். இதனால் உன் வேலை போய்விடும். எனவே, மேலதிகாரியை சரிகட்ட வேண்டும்" எனக் கூறி, சில இலட்சங்களைக் கறந்துள்ளார். பார்த்தசாரதி இது போன்று பல முறை பல இலட்சங்களை பாலகிருஷ்ணனிடம் கொடுத்துள்ளார்.

சம்பளம் குறித்து பார்த்தசாரதி அவ்வப்போது கேட்டபோது இது பணிக்கான பயிற்சி காலம். பயிற்சி காலம் முடிவடைந்து திறம் படப் பணி செய்தால் தான் சம்பளம் தருவார்கள் என்று கூறி சமாளித் துள்ளார். கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாக இதுபோன்ற சம்பவங் கள் தொடர்ந்துள்ளன. கடந்த ஜூன் மாதம்தான் பார்த்தசாரதி இதுகுறித்து வெளியே தெரிவித்திருக்கிறார். அதுவரை தன்னை ஒரு கடமைதவறாத சி.பி.ஐ. எஸ்.ஐ.யாகவே நினைத்துப் பணிபுரிந்து வந்துள்ளார். இது மட்டுமின்றி, பார்த்தசாரதியைப் போன்று மேலும் பலரும் பாலகிருஷ்ணனிடம் பணம் கொடுத்து ஏமாந்திருப்பதும் தெரிய வந்தது. ஆனால், வெளியே சொன்னால் அவமானம் என்று நினைத்து அவர்களில் பலரும் புகார் கொடுக்க முன்வரவில்லை.

பார்த்தசாரதி பலமுறை நகைகளை அடகு வைத்தும், விற்றும் பாலகிருஷ்ணனுக்கு பணத்தைக் கொடுத்துள்ளார். ஒரு கட்டத் தில் கடன் வாங்கியும் கொடுத்துள்ளார். கடன் சுமை காரணமாகவே தற்போது இந்த விஷயத்தை வெளியே கூறியிருக்கிறார். இச் சம்பவத்தில் இதுவரை பாலகிருஷ்ணனின் பெயர் மட்டுமே வெளியே வந்துள்ளது. இதற்குப் பின்னணியில் வேறு சங்கிகள் யாரும் உள்ளார்களா? என்பது குறித்தும் காவல்துறை விசாரித்து வருகிறதாம்!

அயோக்கியத்தனம் செய்வதில் சங்கிகள் எப்படியெல்லாம் யோசித்து வருகிறார்கள்! இந்த நிலையில் நம்ம மோடி, புதிய இந்தியாவை உருவாக்குவோம் என்கிறார். நம்மநாடு உருப்பட்டாப்லதான்!

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**


எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் வீடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001


Touches Your Heart®
Remains Forever ...
PMP TEX INDIA
ESTD 1968
Ulama®
LUNGIES ★ VESTS ★ BRIEFS
OUR PRODUCTS
Follow us on
ULAMA FASHION
Mfd. by PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, 81220 14050 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India